விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378

வலம்புரி

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk
Valampurii

கல்யாண மாலை
[சிவதேச திருமண சேவை]
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 கார்த்திகை 14 வியாழக்கிழமை (30.11.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 346

சமஷ்டியைத் தந்தால்
தனிநாடு கோரமாட்டோம்

ஆஸி தூதுவரிடம் யதார்த்தத்தை விளக்கினார் முதலமைச்சர்

(யாழ்ப்பாணம்)

அவுஸ்திரேலியா போன்று சமஷ்டி அதிகாரப் பகிர்வையே தமிழ் மக்கள் கோருகின்றனர். அதனை வழங்கினால் தமிழர்கள் தனிநாடாகப் பிரிந்து சென்று விடுவார்களோ என்ற ஐயம் தென்னிலங்கை ஆட்சியாளர்களிடம் உண்டு. ஆனால் சமஷ்டித் தீர்வை வழங்காவிட்டால்தான் தனிநாட்டை கோரும் அவசியம் தமிழர்களுக்கு ஏற்படும். இவ்வாறு அவுஸ்திரேலியத் தூதுவரிடம் எடுத்துரைத்தார் வடக்கு மாகாண முதலமைச்சர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன். (24ஆம் பக்கம் பார்க்க)

கடும் மழை; காற்று தென்பகுதியில் அவலம்

கொழும்பு இருளில் மூழ்கியது

(கொழும்பு)

தாழமுக்கம் காரணமாக தற்போது இலங்கையின் கரையோரப் பகுதிகளில் குறிப்பாக காலி, மாத்தறை,களுத்துறை, அம்பாந்தோட்டை மற்றும் புத்தளை, நுவரெலிய 23

மீனவர், கடற்படைக்கு எச்சரிக்கை பொலிஸார் தயார் நிலையில்

(கொழும்பு)

நாட்டின் கரையோரப் பகுதிகளில் பலத்த காற்று வீசும் என எதிர்பார்க்கப்படுவதையடுத்து, மீனவர்கள் மற்றும் கடற்படையினரை தமது நாளாந்த கடல்சார் நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டாம் என பேரிடர் முகாமைத்துவ நிலையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

தற்போது கரையோரப் பகுதிகளில் வேகமாக வீசிவரும் காற்று, மணிக்கு 70 முதல் 80 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கலாம் என எதிர் பார்க்கப்படுகிறது. 23

தென்.கொரியாவுடன் 5 உடன்படிக்கைகள்

(சியோல்)

தென்கொரியாவிற்கு மூன்று நாள் விஜயம் மேற்கொண்ட ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அந்நாட்டின் ஜனாதிபதி முன் ஜே இன்னை சந்தித்துள்ளார்.

சோல் நகரில் இடம்பெற்ற இந்த சந்திப்பின் போது இருதரப்பு 23

பேருந்து புதைந்தது பார்த்த சாரதி மரணம்

(சாவகச்சேரி)

யாழ்ப்பாணம் நெல்லியடி பகுதியில் இருந்து சாவகச்சேரி பகுதியில் இடம்பெறவுள்ள திருமண நிகழ்விற்கு வருகைதந்த தனியார் பேருந்து ஒன்று குழிநீர் பெற்றுக்கொள்வதற்காக 23



சிங்களத் தலைவர்களை விட பிரபாகரன் நேர்மையானவர்

ஞானசார தேரர் புகழாரம்

(கொழும்பு) விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் சிறந்த தலைமைத்துவ பண்புகளை கொண்டவர் என பொது பல சேனா அமைப்பின் பொதுச் செயலாளரான ஞானசாரதேரர் புகழாரம் சூட்டியுள்ளார். 23

இ.போ.ச.போராட்டம் இன்றும் தொடரும்

23

கோத்தா கைதுக்கு இடைக்காலத் தடை

05

அரசியல் கைதிகளின் வழக்கு இனி அநுராதபுரம் நீதிமன்றில் இடம்பெறாது!

சட்டமா அதிபர் தரப்பு அறிவிப்பு

(வவுனியா)

அநுராதபுரம் சிறையில் தடுத்து வைத்துள்ள அரசியல் கைதிகள் மூவருக்கு எதிரான வழக்கு விசாரணை அநுராதபுரம் மேல் நீதிமன்றில் இனி இடம்பெறாமாட்டாது.

அவர்களின் வழக்குக்கு எதிரான சாட்சிகள் இருவர் வெளிநாட்டிலுள்ளனர். அவர்களுடன் தொடர்புகொள்ள முடியவில்லை. அவர்களிடம் முடிவைக்கேட்க அவகாசம் 23

உள்ளூராட்சி தேர்தல் சட்டமா அதிபரின் கோரிக்கை நிராகரிப்பு

(கொழும்பு)

உள்ளூராட்சி சபைத் தேர்தல் தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் சம்பந்தமாக தாக்கல் செய்யப்பட்ட மனுவை இன்று மீண்டும் விசாரணைக்கு எடுக்கு 24

மோ.சைக்கிளில் சென்ற இளைஞனை கைவிலங்கிட்டு ஏற்றிச்சென்ற குழு

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகத்தின் முன்பாக உள்ள குமாரசாமி வீதியில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞர் ஒருவரை தள்ளி விழுத்திக் கைவிலங்கிட்டு ஒரு குழு முச்சக்கர வண்டியில் ஏற்றிச் சென்றதாக தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று முற்பகல் 11 மணியளவில் நடந்த இச்சம்பவத்தில் அழைத்துச் செல்லப்பட்ட இளைஞர் சுமார் 28 வயதுடையவர் என்று அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

பச்சை நிற முச்சக்கர வண்டியில் வந்த சிவில் உடையணிந்த மூவரே இளைஞருக்கு கைவிலங்கிட்டு அழைத்துச் 23

போர்க்குற்றவாளியாக அறிவிக்கப்பட்ட

பொஸ்னிய இராணுவத் தளபதி நீதிமன்றில் நஞ்சருந்தி தற்கொலை

(சாரயேவோ)

பொஸ்னியப் போரில் இன அழிப்புக் குற்றச்சாட்டுக்கு இலக்காகி, சர்வதேச நீதிமன்றத்தால் போர்க் குற்றவாளியாக அறிவிக்கப்பட்ட பொஸ்னிய முன்னாள் இராணுவத் தளபதி தீர்ப்பு வழங்கப்படவிருந்த சமயத்தில் நீதிமன்றில் வைத்தே நஞ்சருந்தித் தற்கொலை செய்து கொண்ட சம்பவம் நெதர் 24

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் கோவில்

வழிபடுநர் பேரவை உறுப்புரிமைக்கான விண்ணப்பம் கோரல்-2018

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் வழிபடுநர் பேரவை உறுப்புரிமைக்கான விண்ணப் பங்கள் கோரப்படுகின்றன. ஆலய முகாமைத் திட்டத்தில் கூறப்பட்ட தகைமைகளை கொண்டவர்கள் விண்ணப்பிக்க முடியும். புதிதாக விண்ணப்பிப்பவர்களாயின் "முதலாவது அட்டவணை"என்ற படிவ த்தை பூரணப்படுத்தி அனுப்பி வைக்க வேண்டும். ஏற்கெனவே 2017ஆம் ஆண்டின் வழிபடுநர் பேரவையின் உறுப்பினர்களாக உள்ளவர்கள் தமது உறுப்புரிமையை புதுப்பித்துக் கொள்வதற்கு "இரண்டாவது அட்டவணை" என்ற படிவத்தை பூரண்படுத்தி அனுப்பி வைக்க வேண்டும்.

விண்ணப்பப் படிவங்களை கோவில் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். நேரில் வந்து பெற முடியாதவர்கள் கீழே காட்டப்பட்ட மாதிரிக்கமைய படிவத்தை சுயமாகவே தயாரித்தும் விண் ணப்பிக்க முடியும். விண்ணப்பம் சமர்ப்பிக்கக் கூடிய காலம் 01.12.2017 தொடக்கம் 31.12.2017 பிற்பகல் 5 மணி வரையாகும்.

கோவிலில் உபயகாரராக இருக்கும் ஒருவர் பத்து ரூபாவுக்கான (ரூபா 10/-) காசுக்கட்டளை அல்லது தபால் கட்டளையையும் உபயம் இல்லாதவர்கள் ஐம்பது ரூபாவுக்கான (ரூபா 50/-) காசுக்கட்டளை அல்லது தபால் கட்டளையை பெற்று விண்ணப்பப்படிவத்துடன் அனுப்பி வைக்க வேண்டும். கட்டளைகள் யாவும் "பொருளாளர், அறங்காவலர் சபை, ஸ்ரீநாகபூசணி அம்மன் கோவில், நயினாதீவு" எனும் பெயருக்கு எழுதப்படல் வேண்டும். விண்ணப்பத்தை பூரணப்படுத்தி அனுப்பும் போது கடித உறையின் இடது பக்க மேற்பாகத்தில் "வழிபடுநர் பேரவை உறுப்புரிமைக் கான விண்ணப்பம்-2018" எனக் குறிப்பிட்டு "செயலாளர் அறங்காவலர் சபை, ஸ்ரீ நாகபூசணி அம்மன் கோவில் நயினாதீவு" என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும். நேரில் கையளிக்க விரும்புவோர் ஆலய அலுவலகத்தில் இதற்கென வைக்கப்பட்டுள்ள தபால் பெட்டியினுள் சேர்க்க லாம். விண்ணப்பங்கள் சமாதான நீதிவான், இலங்கை நிர்வாக சேவை உத்தியோகத்தர், அர சாங்க பாடசாலை அதிபர், இந்து மதகுரு, கிராம சேவை உத்தியோகத்தர் ஆகியோரில் ஒருவரால் அத் தாட்சிப்படுத்தப்படல் வேண்டும். அத்தாட்சிப்படுத்துபவரின் பெயர் உள்ளடங்களலாக அவரின் பதவிக்கான முத்திரை (றபர் ஸ்டாம்ப்) இடப்படாத விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

மேலதிக விபரங்கள் தேவைப்படின் 021 321 3024/ 021 3207785 தொலைபேசி இலக்க த்துடன் தொடர்பு கொண்டு அறிந்து கொள்ளமுடியும்.

நா.யோகநாதன்
செயலாளர், அறங்காவலர் சபை,
ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில், நயினாதீவு.

முதலாவது அட்டவணை-(படிவம் 01)

நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் கோவில் வழிபடுநர் பேரவை உறுப்புரிமைக்கான விண்ணப்பம் ....ஆம் ஆண்டு

1.விண்ணப்பதாரரின் முழுப்பெயர்:.....
2.பிறந்தநாள்:.....
3.இந்து சமயத்தவரா?:.....
4.நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் கோவிலில் வழிபடுபவரா?:.....
5.நீங்கள் உறுப்புரிமை 3 (2) (ஏ) அல்லது 3 (2) (பீ) யின் கீழ் உறுப்புரிமைக்குத் தகுதி பெறுப வராயின் இந்த ஆண்டு கோவிலுக்குச் செலுத்திய கொடுப்பனவுக்காக வழங்கப்பட்ட பற்றுச்சீட்டு தொடர்பான விபரங்களைத் தருக.

பற்றுச்சீட்டு வழங்கிய நாள்	பற்றுச்சீட்டின் தொடர் எண்	செலுத்திய தொகை	எந்தத் திருவிழா அல்லது பூசை தொடர்பில் இக்கொடுப்பனவு செய்யப்பட்டது என்ற விபரம்

6.இலங்கை முகவரி:.....
7.விண்ணப்பத்துடன் இணைக்கப்பட்டுள்ள காசுக்கட்டளை / தபாற்கட்டளையின் விபரம்
காசுக்கட்டளை/ த.க. இல அலுவலகமும் வழங்கிய நாளும் தொகை
8.நீங்கள் ஏதாயினும் குற்றத்திற்காக நீதிமன்றம் ஒன்றில் எப்போதாவது குற்றவாளியாகக் காணப்பட்டீர்களா? அப்படியாயின் வழக்கு இலக்கத்துடன் முழு விபரங்களையும் தருக.
9.இந்த கோவிலில் வேதனம் அல்லது வேறு கொடுப்பனவைப் பெறும் ஒரு ஊழியராகவோ அல்லது குருவாகவோ நீங்கள் உள்ளீர்களா?
10.இக் கோவிலுடன் ஏதேனும் ஒப்பந்தம் செய்துள்ளீர்களா? அப்படியாயின் முழு விபரங்களையும் தருக.
மேற்கூறிய விபரங்கள் எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டிய வரையில் உண்மை யான வையும் சரியானவையுமென இத்தால் வெளிப்படுத்துவதோடு. வழிபடுநர் பேரவையில் ஓர் உறுப் பினராகப் பதிவு செய்து கொள்வதற்கு இத்தால் விண்ணப்பிக்கின்றேன்.

.....
விண்ணப்பதாரர் ஒப்பம்

இந்த விண்ணப்பத்தில் உள்ளடக்கப்பட்டவையாவும் எனக்குத் தனிப்பட்ட முறையில் தெரிந்தவரான குறித்த விண்ணப்ப தாரருக்கு என்னால் முறைப்படி வாசித்து விளங்கப்படுத்தப்பட்டது. அவர் இவ் உள்ளடக்கத்தைப் புரிந்து கொண்டதாகத் தென்பட்டதோடு என் முன்னிலையில் ..... ஆம் ஆண்டு..... மாதம்.....நாளன்று.....எனுமிடத்தில் தமது கையொப்பத்தையுமிட்டார்.

என் முன்னிலையில்

.....
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

குறிப்பு: விண்ணப்பதாரரின் ஒப்பம் சமாதான நீதவான், இந்து மதகுரு, இலங்கைநிர்வாக சேவை அலுவலர், கிராமசேவை அலுவலர், அரசாங்க பாடசாலையொன்றின் அதிபர் ஆகியோரில் ஒருவரால் உறுதிப்படுத்தப்படவேண்டும். உறுதிப்படுத்துபவரின் பெயர் பதவிக்கான முத்திரை ("றபர் ஸ்டாம்ப்") இடப்படாத விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
2017.12.31 ஆம் திகதி மாலை 5.00 மணிக்கு முன்பாகக் கிடைக்கக்கூடியதாக விண்ணப்பங்கள் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

இரண்டாம் அட்டவணை-(படிவம் 02)

நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் கோவில் வழிபடுநர் பேரவையின் உறுப்புரிமையைப் புதுப்பிப்பதற்கான விண்ணப்பம் ....ஆம் ஆண்டு

செயலாளர்,
அறங்காவலர் சபை,
ஸ்ரீநாகபூசணி அம்மன் கோவில், நயினாதீவு.

அன்பார்ந்த ஐயா,

வழிபடுநர் பேரவைக்கான சந்தா புதுப்பித்தல்

..... ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் நாள் தொடக்கம் ஓராண்டுக்கு வழிபடுநர் பேரவை உறுப்புரிமைக்கான எனது சந்தாவை புதுப்பித்துக்கொள்ள இத்தால் விண்ணப்பிக்கின்றேன்.
.....அஞ்சலகத்தால்.....ரூபாய் பெறுமதிக்கு வழங்கப்பட்ட ..... இலக்கங் கொண்ட காசுக்கட்டளை/தபாற்கட்டளையொன்றை இத்துடன் இணைத்துள்ளேன். வழிபடுநர் பேரவையில் ஓர் உறுப்பினராகப் பதிவு செய்து கொள்வதற்கு வேண்டிய தகைமைகள் அனைத்தையும் நான் தொடர்ந்தும் கொண்டிருக்கின்றேன் என்று இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.
முழுப்பெயர் :- ..... முகவரி:-.....
எனக்குள்ள உபயம்:- .....
உபயக் கட்டணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டு இலக்கம்:-.....

.....
உறுப்பினர் ஒப்பம்

இந்த விண்ணப்பத்தின் உள்ளடக்கம் எனக்குத் தனிப்பட்ட முறையில் தெரிந்தவரான இதில் கூறப் பட்ட விண்ணப்பதாரருக்கு என்னால் முறைப்படி வாசித்து விளங்கப்படுத்தப்பட்டது. அவர் இவ் உள்ளடக்கத்தைப்புரிந்து கொண்டதாகத் தென்பட்டதோடு, என் முன்னிலையில்..... ஆம் ஆண்டு..... மாதம்..... நாளன்று..... என்னுமிடத்தில் தமது கையெப்பத்தையுமிட்டார் என்பதை உறுதி செய்கின்றேன்.

என் முன்னிலையில்

.....
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்

குறிப்பு:-விண்ணப்பதாரரின் ஒப்பம் சமாதான நீதவான், இந்து மதகுரு, இலங்கைநிர்வாக சேவை அலுவலர், கிராமசேவை அலுவலர், அரசாங்க பாடசாலையொன்றின் அதிபர் ஆகியோரில் ஒருவரால் உறுதிப்படுத்தப்படவேண்டும். உறுதிப்படுத்துபவரின் பெயர் பதவிக்கான முத்திரை ("றபர் ஸ்டாம்ப்") இடப்படாத விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
2017.12.31 ஆம் திகதி மாலை 5.00 மணிக்கு முன்பாக கிடைக்கக்கூடியதாக விண்ணப் பங்கள் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். (C-544)

பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் கருத்து

தெற்கை சமாளிக்க கூறியிருக்கலாம் நடவடிக்கை எடுக்க மாட்டார்கள்

முதலமைச்சர் நம்பிக்கை

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப்புலிகளின் மாவீரர் தினத்தை அனுஷ்டித்தவர்களை கைது செய்ய போவதாக பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்த்தன கூறியு ள்ள கருத்து, குரைக்கும் நாய் கடிக்காது போன்றது என வடக்கு மாகாண முதல மைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்து ள்ளார்.

அவுஸ்திரேலிய தூதுவருக்கும் முதல மைச்சருக்கும் இடையில் நேற்றைய தினம் காலை கைதடியில் அமைந்துள்ள முதலமை ச்சர் அலுவலகத்தில் சந்திப்பொன்று நடை பெற்றது.

இதன்போது ருவான் விஜேவர்த்தன வின் கருத்து வடகிழக்கு மக்களை அச்சத் தில் ஆழ்த்தியுள்ள நிலையில், இது தொடர் பில் உங்களுடைய கருத்து என்ன? என ஊடகவியலாளர்களால் கேட்கப்பட்ட வினாவி ற்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்ட வாறு தெரிவித்துள்ளார்.

மாவீரர் தினத்தை அனுஷ்டித்தவர் களை கைது செய்வோம் என ஒரு அமைச் சர் கூறியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ் வாறான கருத்துக்கள் தாங்களும் விழிப்பாக இருக்கின்றோம் என தெற்கத்தைய மக்களு க்கு எடுத்து காட்டுவதற்காக கூறியதற்காக இருக்கலாம்.

இது அரசியலுக்காக கூறப்பட்டிருக்க லாம். நடவடிக்கை எடுக்க மாட்டார்கள் என்று நம்புகின்றேன். ஏனென்றால் அந்த கூட்ட ங்களை நடத்துவதற்கு அவர்களே இடமளி த்திருந்தார்கள். ராஜபக்ஷ காலத்தில் தடை செய்யப்பட்டது போன்று தடை செய்திருக்க லாம். ஆகவே இது குரைக்கும் நாய் போன்று தான் கடிக்காது என முதலமைச்சர் விக்னேஸ்வரன் தெரிவித்தார். (மு-4)

பாராட்டி வாழ்த்துகின்றோம்

ஆழ்வார்பிள்ளை சூரியகுமாரன்

கடந்த 35 வருட கிராம அலுவலர் சேவையின் பின் ஓய்வு பெற்ற ஆழ்வார்பிள்ளை சூரியகுமாரன் கரவெட்டி, கோப்பாய், மருதங்கேணி ஆகிய 3 பிரதேச செயலகங்களில் கடமையாற்றியுள்ளார். எனது தந்தையார் காலஞ்சென்ற ஆ.கந்தப்பு முன்னை நாள் RDS தலைவரும், முன்னைநாள் நகர சபை அங்கத்தவரும் சிறாவகச்சேரி) ஆவார். அவர்களுடன் இந்திய இராணுவம் எமது பகுதியை ஆக்கிரமித்த போது எமது மக்களுக்காக இவர் பல உதவிகளை புரிந்துள்ளார். இவரது ஓய்வு காலம் சிறப்புற ஆண்டவனை பிரார்த்தித்து பாராட்டி வாழ்த்துகின்றோம்.

குணம் கட்டிட ஒப்பந்த சேவை
காட்டுப்புலம், கரவெட்டி கிழக்கு, கரவெட்டி.

வாழ்த்துவோர்:-
கந்தப்பு குணராசா குடும்பம்

கேள்வி அறிவித்தல்

தனியார் பாதுகாப்பு சேவை யாழ்ப்பாணம் மாநகர சபை

01.யாழ்ப்பாணம் மாநகர சபையின் வடமாகாண உள்ளூராட்சிமன்ற பெறுகைகள் குழுத் தலைவ ரால் இலங்கை பாதுகாப்பு அமைச்சில் பதிவு செய்த தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைகளுக்காகக் கோரப்படுகின்றன.

02.ஆர்வமுள்ள கேள்விதாரர்கள **ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம** என்னும் முகவரியிலிருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்வதுடன் வேலை நாட்களில் காலை 9.00 மணி முதல் மாலை 2.00 மணிவரை 30.11.2017-13.12.2017 வரையான காலப்பகுதியில் கேள்வி ஆவணங்களைப் பார்வையிடலாம்.

03.ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை பூரணப்படுத்தி **ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம்** என்னும் முகவரியிலிருந்து 30.11.2017ம் திகதியில் இருந்து 13.12.2017வரை காலை 9.00 மணிக்கும் மாலை 2.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.1,000.00 மற்றும் வரிகளைச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.

04.கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து **ஆணையாளர் மாநகர சபை, யாழ்ப்பாணம்** என்னும் முகவரிக்கு14.12.2017ம் திகதி பிப 2.00மணிக்கு முன்பதாகக் கிடைக்கக் கூடியதாக சமர்ப்பிக்கப்படல் வேண்டும். பிந்தியகேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உட னேயே வருகை தரும் கேள்விதாரர் அல்லது பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

இல	பாதுகாப்புச் சேவை தேவைப்படும் இடம்	தேவைப்படும் பாதுகாப்பு உத்தியோகத்தர் எண்ணிக்கை		வேண்டப்படும் பாதுகாப்புபிணை	
		பகல்	இரவு	பாதுகாப்புப் பிணை தொகை	செல்லுபடியாகும் காலம்
1	பொது நூலகம்	2	2	100,000.00	91 Days
2	துரையப்பா விளையாட்டரங்கு	1	2		
3	பழைய பூங்கா	2	1		
4	கோம்பயன் மணல் மயானம்	1	2		
5	காக்கைதீவு திண்மக்கழிவு பதனிடும் பகுதி	1	1		
6	புதிய கடைத்தொகுதி	-	1		
7	சுப்பிரமணியம் பூங்கா	1	1		
8	கல்லுண்டாய் வெளி	2	2		
9	மாநகர சபை அலுவலகம்	2	2		
10	செங்குந்தா சந்தை	-	1		
11	நவீன சந்தை	-	1		
12	நகர மத்தி சிற்றங்காடித் தொகுதி	-	1		
13	பண்ணை கடற்கரைப் பூங்கா	1	-		
14	கோண்டாவில் பம் நிலையம்	1	1		
15	திருநெல்வேலி பம் நிலையம்	1	1		
16	குருநகர் நீர்த்தாங்கி	1	1		
	மொத்தம்	16	20		

தலைவர் /ஆணையாளர்,
உள்ளூராட்சிமன்ற பெறுகைகள் குழு,
மாநகர சபை, யாழ்ப்பாணம்.
30.11.2017 (சி-545)

உள்நாட்டு கப்பல் நிறுவனங்களின் முதுகெலும்பை உடைக்க முயற்சி

மங்கள மீது ரோஹித புகார்

(கொழும்பு)

நிதி அமைச்சர் மங்கள சமரவீர, உள்நாட்டு கப்பல் நிறுவனங்களின் முதுகெலும்பை உடைப்பதற்கு முயற்சிப்பதாக முன்னாள் துறைமுக அமைச்சர் ரோஹித அபேகுணவர்த்தன தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் நேற்று முன்தினம் உரையாற்றிய போது அவர் இதனைத் தெரிவித்தார்.

வெளிநாட்டு கப்பல் நிறுவனங்களுக்கு நூற்றுக்கு நூறு வீதம் உள்நாட்டில் நடவடிக்கைகளை மேற்கொள்ள கதவுகளை திறந்து, அதன் ஊடாக உள்நாட்டு நிறுவனங்களின் முதுகெலும்பு உடைக்கப்படவுள்ளது.

எமது அரசாங்க ஆட்சிக் காலத்திலும் வெளிநாட்டு கப்பல் நிறுவனங்கள் நூற்றுக்கு நூறு வீதம் இலங்கையில் நடவடிக்கை மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டிருந்தது.

எனினும், உள்நாட்டு வர்த்தகர்களின் நலனைக் கருத்திற் கொண்டு அதனை எதிர்த்தோம்.

நிதி அமைச்சரின் நடவடிக்கையினால் உள்நாட்டு கப்பல் நிறுவனங்கள் பாதிக்கப்படுவதுடன், தொழில் வாய்ப்புக்களையும் இழக்க நேரிடும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)



இந்திய- இலங்கை ஒப்பந்தத்தை மறுத்தமையே இந்தியா- புலிகள் இடையே போர் மூள காரணம்

த ஹிந்து செய்தி வெளியீடு

(சென்னை)

1987 ஆம் ஆண்டு இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்ள தமிழீழ விடுதலைப் புலிகள் மறுத்தமை இந்தியாவிற்கும் புலிகளுக்கும் இடையிலான ஒரு போருக்கு வழிவகுத்ததாக தெரிவிக்கப்படுகிறது.

ஆனால் அப்போதைய தமிழக முதலமைச்சர் எம்.ஜி. இராமச்சந்திரன் (எம்.ஜி.ஆர்) பிரபாகரனுக்கு உறுதியான ஆதரவு வழங்கியதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

சென்னை வி.ஓ.சி. நூலகத்தினால் விடுதலைப் புலிகளுடன் சம்பந்தப்பட்ட பல ஆவணங்கள் மற்றும் பிரபாகரனின் வரலாறு அடங்கிய புத்தகம் ஒன்று விரைவில் வெளியிடப்படவுள்ளதாக கூறப்படுகிறது.

இதற்காக திரட்டப்பட்ட ஆவணங்களில் உள்ள பல தகவல்கள் தொடர்பில் த ஹிந்து பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த ஆவணங்களின் படி விடுதலைப் புலிகளுக்கும் இந்தியாவிற்கும் இடையில் இருந்த இணக்கம் மற்றும் பகைமை பற்றிய பல விடயங்கள் தொடர்பான தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்தியா, குறிப்பாக இந்திய இராஜதந்திரியாக இருந்த ஜே.என். தீக்சித், இந்த உடன்படிக்கைக்கு ஒப்புதல் வழங்குவதற்காக அமைப்பை

தடை செய்ய முயற்சித்ததாக புலிகள் குற்றம் சுமத்தியுள்ளதுடன், எம்.ஜி.ஆர். பிரபாகரனுடன் பின்னால் இருந்து எதிர்ப்பு தெரிவித்ததாக கூறப்படுகிறது.

"நீங்கள் எந்த முடிவை எடுத்தாலும் நான் அதை ஆதரிப்பேன்" என அப்போதைய தமிழக முதலமைச்சர் எம்.ஜி. இராமச்சந்திரன் கூறியதாக விடுதலைப்புலிகள் வெளியிட்ட ஒரு அறிக்கையில் கூறியுள்ளனர்.

உண்மையில், 1987 இல், உடன்படிக்கை கையெழுத்திட்ட ஆண்டில், ஈழ விடுதலை இயக்கம் ஒரு கடினமான கட்டத்தை எட்டியிருந்ததாக விடுதலைப் புலிகள் அப்போது விபரித்துள்ளனர்.

"விடுதலை இயக்கம் மிகவும் நசுக்கப்பட்டிருந்தது. இது சனி (சனியன்) வருடமாக இருந்தது" என விடுதலைப் புலிகள் அப்போது கூறியுள்ளனர்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை தற்காலிகமாக இணைக்கும் எந்தவொரு உடன்படிக்கையையும் ஏற்றுக்கொள்ள முடியாது என பிரபாகரன் தெரிவித்திருந்ததாகவும் த ஹிந்து வெளியிட்டுள்ள செய்தியில் கூறப்பட்டுள்ளது. (இ-7)

தமிழர்கள் கடத்தல் விவகாரம்

புலனாய்வுப் பிரிவிற்கு உரிய தகவல்களை வழங்குமாறு கடற்படை தளபதிக்கு உத்தரவு

(கொழும்பு)

கொழும்பில் 11 தமிழர்கள் கடத்தப்பட்ட சம்பவம் தொடர்பில் புலனாய்வுப் பிரிவிற்கு தகவல்களை வழங்குமாறு கடற்படை தளபதிக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே விசாரணைகளுக்கு தகவல்களை வழங்குமாறு கடற்படைத் தளபதிக்கு கொழும்பு கோட்டை நீதவான் லங்கா ஜயரட்ன உத்தரவிட்டுள்ளார்.

இதன்போது, கடற்படையின் லெப்டினன் கேணல் பிரசாத் ஹெட்டியாராச்சியின் கீழ் கடமையாற்றிய உத்தியோகத்தர்கள் பற்றிய விபரங்களை புலனாய்வுப் பிரிவினருக்கு வழங்குமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த 2008ஆம் ஆண்டு காலப்பகுதியில் 11 தமிழ் பேசும் இளைஞர்கள் கடத்தப்பட்ட வழக்குடன் தொடர்புடையதாக சந்தேகத்தின் பேரில் கடற்படையின் முன்னாள் பேச்சாளர் டி.கே.பீ.தஸநாயக்க உள்ளிட்ட ஏழு பேர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, குறித்த சந்தேகநபர்களின் விளக்கமறியல் காலத்தை எதிர்வரும் 13ஆம் திகதி வரையில் நீதவான் நீடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவுக்கு மேலதிகமாக ஐம்பது அதிகாரிகள்

சபாநாயகர் கருஜெயசூரிய அறிவிப்பு

(கொழும்பு)

இலஞ்சம் ஊழல் ஆணைக்குழுவுக்கு மேலதிகமாக ஐம்பது அதிகாரிகளை இணைத்துக்கொள்வதற்கு அரசியல் பேரவையின் அனுமதியின் அடிப்படையில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதாக சபாநாயகர் கருஜெயசூரிய நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார். பாராளுமன்றத்தில் இது தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்நாயக்க கேட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே சபாநாயகர் கருஜெயசூரிய இதனைத் தெரிவித்தார். (இ-7)

கட்சிப் பதவியையும் உறுப்புரிமையையும் பறித்து விட்டனராம்

பியசிறி குற்றச்சாட்டு

(கொழும்பு)

தான் தேசிய சுதந்திர முன்னணியின் தேசிய அமைப்பாளர் பதவியில் இருந்தும் கட்சி உறுப்புரிமையில் இருந்தும் நீக்கப்பட்டுள்ளதாக, பியசிறி விஜேநாயக்க தெரிவித்துள்ளார்.

எனினும், இது ஏற்க முடியாததொன்று எனக் கூறிய அவர், இந்த விடயம் குறித்து தேர்தல்கள் ஆணைக்குழுவில் முறையிட நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, கட்சியின் ஒழுக்க விதிகளை மீறியமை தொடர்பிலேயே, பியசிறி விஜேநாயக்கவின் கட்சி உறுப்புரிமை இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக, தேசிய சுதந்திர முன்னணியின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

உரிய முறைக்கு அமையவே இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும், பியசிறி தன் தரப்பிலுள்ள விடயங்களை தெரிவிக்க வேண்டுமாயின், கட்சியின் ஒழுக் காற்றுக் குழுவிற்கு வந்து அதனைச் செய்ய முடியும் எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (இ-7)

தென்கொரிய இராணுவ நினைவுத்தூபியில் ஜனாதிபதி மைத்திரி அஞ்சலி

தென் கொரிய ஜனாதிபதி மூன் ஜெயிங் இன் அழைப்பை ஏற்று தென்கொரியாவிற்கான மூன்று நாள் அரச முறை விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று முற்பகல் சியோல் நகரில் அமைந்துள்ள இராணுவ நினைவுத் தூபிக்கு மலர் அஞ்சலி செலுத்தினார். (இ-7)

சச்சின் 'ஜெர்சிக்கு' 10 ஓய்வு



சச்சின் டெண்டுல்கர் என்றால் நம்பர் 10; நம்பர் 10 என்றால் சச்சின் டெண்டுல்கர் என்று அவரது கிரிக்கெட் வாழ்க்கையில் அவருடன் இணைந்திருப்பது அவர் அணிந்த நம்பர் 10 சீருடை.

ஒருகாலத்தில் 99 என்ற எண்ணுடைய சீருடையை ஒருநாள் போட்டிகளில் அணிந்த சச்சின் டெண்டுல்கர் பிறகு ஆர்ஜென்ரீன கால்பந்து மேதை டீகோ மாரடோனாவின் தாக்கத்தில் நம்பர் 10 என்ற சீருடையை அணிந்தார்.

அத்தோடு மட்டுமல்லாமல் "Ten"dulkar" என்று அவர் ரசிகர்களால் செல்லமாக அழைக்கப்பட்டதும் ஒரு காரணம். அன்றிலிருந்து சச்சின் டெண்டுல்கரின் ஒருநாள் கிரிக்கெட் வாழ்க்கையில் நம்பர் 10 பிரிக்க முடியாமல் இணைந்திருந்தது.

இந்நிலையில் அந்த நம்பர் 10 சீருடையை வேறு எந்த வீரரும் அணிய முடியாத விதமாக அவரது நம்பர் 10 சீருடைக்கும் பிசிசிஐ ஓய்வு அளித்திருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

நவம்பர் 2013இல் சச்சின் டெண்டுல்கர் ஓய்வு பெற்றார். ஒருநாள் போட்டிகளில் கடைசியாக பாகிஸ்தானுக்கு எதிராக 2012இல் நடந்த போட்டியில் நம்பர் 10 சீருடையுடன் களமிறங்கினார்.

அதிலிருந்து நம்பர் 10 சீருடையை யாரும் அணியவில்லை, ஆனால் கடந்த ஒகஸ்டில் கொழும்பில் நடந்த ஒருநாள் போட்டியில் மும்பை வேகப்பந்து வீச்சாளர் ஷர்துல் தாக்குர் இதே நம்பர் 10 சீருடையை அணிந்து களமிறங்கியதையடுத்து சமூகவலைதளங்களில் பிசிசிஐ, தாக்குர் ஆகியோர் மீது வலைத்தளவாசிகள் கேலிச்சொற்களை வீசினர்.

"இதனால் தேவையற்ற சர்ச்சைகள் உருவாகி வீரர்கள் விமர்சனத்துக்கு ஆளாகின்றனர். எனவே அதிகார பூர்வமற்ற முறையில் நம்பர் 10 ஜெர்சிக்கு ஓய்வு அளித்து விடுவோம்.

எனவே எந்த ஒரு வீரரும் இந்தியா ஏ, சர்வதேச போட்டியல்லாத லிஸ்ட் ஏ போட்டிகளில் நம்பர் 10 ஜெர்சியை அணியலாம், சர்வதேசப் போட்டிகளில் நம்பர் 10 ஜெர்சியை அணிய வேண்டாம்" என்று பிசிசிஐ அதிகாரி ஒருவர் பிரபல நாளிதழுக்கு தெரிவித்துள்ளார்.

ஷர்துல் தாக்குர் இது பற்றி கூறும்போது, தான் எண் கணித நம்பிக்கை உள்ளவர் என்பதால் நம்பர் 10 ஜெர்சி அணிந்ததாகத் தெரிவித்தார்.

ஜெர்சிக்கும் ஓய்வு அளிக்கும் நடைமுறை கிரிக்கெட்டுக்குப் புதிது, கால்பந்து, எனிஸ் கூடைப்பந்து போட்டிகளில் ஏற்கெனவே நடைமுறையில் உள்ளது.

'முடிந்தால் அடியுங்கள்'

இங்கிலாந்துக்கு லயன் சவால்

பிரிஸ்பேன் டெஸ்ட் போட்டியில் ஆடுகளத்தின் போக்குக்கு எதிராக அருமையாக பந்துவீசிய நேதன் லயன் அடிலெய்ட் டெஸ்ட் போட்டியில் தன் பந்துவீச்சை முடிந்தால் இங்கிலாந்து வீரர்கள் அடித்து ஆடிப்பார்க்கட்டும் என்று சவால் விடுத்துள்ளார்.

இங்கிலாந்து வீரர்கள் சிலரின் கிரிக்கெட் வாழ்க்கை இந்தத் தொடருடன் முடிந்து விடும் என்று ஆஷஸ் தொடருக்கு முன்பு கூறி வெறுப்பேற்றிய நேதன் லயன் தற்போது, 'முடிந்தால் அடியுங்கள்' என்று சவால் விடுத்துள்ளார்.

"இங்கிலாந்து அணியினர் என்னை அடித்து ஆடினால் நிச்சயம் என் வலையில் விழுவர். என் பந்து வீச்சை அடித்துத் துவைத்து என்னை பந்துவீச்சிலிருந்தே தூக்குமாறு செய்தால் எனக்கு அது பிடிக்கவே செய்யும்.

நிச்சயம் கடந்த டெஸ்ட் போட்டியைவிட வரும் டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து அணியினர் எனக்கு எதிராக சிறந்த உத்தியுடன் இறங்குவார்கள் என்று எதிர்பார்க்கிறேன். ஆனால் இப்படிப்பட்ட சவால்கள்தான் கிரிக்கெட் ஆட்டத்தின் வேடிக்கையே.

வலது கை, இடது கை வீரர்களுக்கும் உலகின் தலைசிறந்த துடுப்பாட்டகாரர்களுக்கும வீசும் சவால்களை நான் எப்பவும் விரும்பியே இருக்கிறேன். வீரர்கள் அடித்து ஆடும் போது தான் எனக்கும் விக்கெட்டுக்களை வீழ்த்துவதற்கான வாய்ப்புக்கள் அதிகரிக்கும். எனவே இது எதிர்பார்ப்புகளை அதிகரிக்கிறது, சவாலை எதிர் நோக்குகிறேன்.

ஜோஷ் ஹேசில்வுட், ஸ்ரார்க் ஆகியோர் சுழல்பந்து வீச்சைப் பற்றி பேசும்போது அது ஏதோ மிகவும் எளிதானது என்று பேசுவர். கொஞ்சம் தூரம் வந்து விரல்களில் பந்தை பிடித்து கையைச் சுற்றுவது என்பார்கள்.

ஆனால் அவுஸ்திரேலிய பந்துவீச்சு யுனிட்டைப் பொறுத்தவரை ஒரு வரையொருவர் நன்றாக மதிக்கப் பழகியவர்கள்" என்றார் நேதன் லயன்.

நியூசிலாந்தில் பென் ஸ்ரோக்ஸ்

கிறைஸ்ட்சேர்ச் விமான நிலையத்தில் தனது பெற்றோர்களுடன் பென் ஸ்ரோக்ஸ்

பென் ஸ்ரோக்ஸ் ஆஷஸ் தொடரில் பங்கேற்பதற்காக அவுஸ்திரேலியா செல்லவில்லை, அவர் சொந்த பயணமாக நியூஸிலாந்து செல்வதாக இங்கிலாந்து கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

இங்கிலாந்து கிரிக்கெட் அணி அவுஸ்திரேலியாவில் சுற்றுப்பயணம் செய்து பாரம்பரியமிக்க ஆஷஸ் டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. பிரிஸ்பேனில் நடைபெற்ற முதல் டெஸ்ட்டில் அவுஸ்திரேலிய அணி 10 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. இதனால் 5 ஆட்டங்கள் கொண்ட ஆஷஸ் டெஸ்ட் தொடரில் அவுஸ்திரேலியா 1-0 முன்னிலை வகிக்கிறது. 2ஆவது டெஸ்ட் போட்டி வரும் 2ஆம் திகதி அடிலெய்டில் பகலிரவு ஆட்டமாக நடைபெற உள்ளது.

இந்நிலையில் லண்டன் ஹீத்ரூ விமான நிலையத்தில் இங்கிலாந்து வீரர் பென் ஸ்ரோக்ஸ் காத்திருக்கும் புகைப்படம் நேற்று வெளியானது. இதையடுத்து பென் ஸ்ரோக்ஸ் இங்கிலாந்து அணியை மீட்க ஆஷஸ் தொடருக்குத்தான் புறப்பட்டு செல்கிறார் என நினைத்து ரசிகர்கள் ஆர்வமுடன் சமூக வலைத்தளத்தில் புகைப்படத்தை வைரலாக்கினர்.

இதனால் அதிர்ச்சியடைந்த இங்கிலாந்து கிரிக்கெட் சபை, "பென் ஸ்ரோக்ஸ் தனது குடும்பத்தினரைப் பார்க்க நியூஸிலாந்து செல்கிறார். இது அவரது சொந்த பயணம். இங்கிலாந்து கிரிக்கெட் சபைக்கும் இதற்கும் தொடர்பில்லை" என்று தெரிவித்தது.

பிரிஸ்பேன் டெஸ்டில் இங்கிலாந்து தோல்வி அடைந்ததையடுத்து பென் ஸ்டோக்ஸ் மீதான ஏக்கம் இங்கிலாந்து ரசிகர்களிடத்தில் அதிகரித்துள்ளது. கடந்த செப்டம்பர் மாதம் இரவு விடுதி ஒன்றில் ஏற்பட்ட தகராறு காரணமாக ஆஷஸ் தொடரில் இருந்து பென் ஸ்டோக்ஸ் தற்காலிக நீக்கம் செய்யப்பட்டார். ஒழுக்க நிலைப்பாடுகளுக்காக பென் ஸ்ரோக்ஸ் நீக்கப்பட்டுள்ள முடிவு இங்கிலாந்து அணியை வெகுவாக பாதித்துள்ளதாக கருதப்படுகிறது.

ஏற்கெனவே ஸ்ரீவ் வோ, இயன் சாப்பல் உள்ளிட்டோர் பென் ஸ்ரோக்ஸ் இல்லாமல் இங்கிலாந்து அணி ஆஷஸ் தொடரில் வெற்றி பெற முடியாது என்று கருத்து தெரிவித்திருந்தனர்.

பென் ஸ்ரோக்ஸ் நியூஸிலாந்தில் பிறந்தவர், இவரது தந்தை ஜெரார்ட் முன்னாள் ரக்பி சர்வதேச பயிற்சியாளர் ஆவார். இவர் இங்கிலாந்துக்குக் குடிபெயர்ந்ததையடுத்து சிறுவயதிலேயே பென் ஸ்ரோக்ஸ் இங்கிலாந்துக்கு வந்து விட்டார். இங்கிலாந்தில் நீண்ட காலம் வசித்த பிறகு பென் ஸ்ரோக்ஸின் பெற்றோர் நியூஸிலாந்தின் கிறைஸ்ட்சேர்ச் நகருக்கு சென்று விட்டனர்.

இலங்கையின் தலைவராக திசர பெரேரா



இந்தியாவுக்கு எதிரான ஒருநாள் மற்றும் 'ரி20' தொடருக்கான இலங்கை அணியின் தலைவராக திசர பெரேரா நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்தியாவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை அணி, அங்கு மூன்று ஒரு நாள் மற்றும் மூன்று 'ரி20' போட்டிகளில் பங்கேற்க உள்ளது.

முதல் ஒரு நாள் போட்டி வரும் டிசம்பர் 10ஆம் திகதி தரம்சாலாவில் நடக்கவுள்ளது.

இத்தொடருக்கான இலங்கை அணியின் தலைவராக உபுல் தரங்க நீக்கப்பட்டு திசர பெரேரா நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த ஜூலையில் தலைமைப் பதவியிலிருந்து மத்யூஸ் விலகியதால் சண்டிமல் (டெஸ்ட்), உபுல் தரங்க (ஒரு நாள், 'ரி20') அணிக்கு தலைமை ஏற்றனர்.

ஆனால், இந்தியா (0-5), பாகிஸ்தான் (0-5) அணிகளுக்கு எதிரான ஒரு நாள் தொடரில் தரங்க மோசமான தோல்வியை பெற்றுக் கொடுத்தார்.

இதன் காரணமாகவே, தற்போது திசர பெரேரா வசம் தலைமைப் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது

கோத்தபாயவை கைது செய்ய இடைக்காலத் தடை விதிப்பு!

(கொழும்பு)

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவிற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு இடைக்காலத் தடை விதிக்கப்பட்டுள்ளது. பொதுச் சொத்துக்கள் துஷ்பிரயோக சட்டத்தின் கீழ் கோத்தபாயவிற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதனைத் தடுக்கும் வகையில் மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று இடைக்கால தடை உத்தரவு பிறப்பித்துள்ளது.

எதிர்வரும் டிசெம்பர் மாதம் 6ஆம் திகதி வரையில் இந்த தடை உத்தரவு அமுலில் இருக்கும்என அறிவிக்கப்பட்டுள்ளது.

தனக்கு எதிராக பொதுச் சொத்துக்கள் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுப்பதை தடுத்து நிறுத்தி உத்தரவிடுமாறு கோரி முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ நேற்று முன்தினம் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனுவை தாக்கல் செய்திருந்தார்.

பொலிஸ் நிதி மோசடி விசாரணைப் பிரிவு தன்னை பொதுச் சொத்துக்கள் சட்டத்தின் கீழ் கைதுசெய்யத் தயாராகி வருவதாக கோத்தபாய ராஜபக்ஷ தனது மனுவில் குறிப்பிட்டிருந்தார்.

இவ்வாறு கைது செய்து பிணை வழங்காது தடுத்து வைக்கும் தயார் நிலைகள் இருப்பதாகவும் அவர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி நீதிமன்றத்தில் கூறியிருந்தார்.

இந்த நிலையில் மேன்முறையீட்டு நீதிபதி எல்.ரீ.டி. தெஹிதெனிய மற்றும் நீதிபதி டிரான் குணரட்ன ஆகியோர் முன்னிலையில் கோத்தாவின் மனு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது கோத்தபாயவை கைது செய்ய இடைக்கால தடை விதிக்கப்பட்டதுடன், சட்டமா அதிபர் உள்ளிட்ட மனுவின் பிரதிவாதிகளை 6 ஆம் திகதி நீதிமன்றில் முன்னிலையாகுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.(இ-7)

சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மானிப்பாய் மெமோரியல் ஆங்கிலப் பாடசாலையின் பிரதி அதிபர் திருமதி குணவதி சண்முகநாதன் அகில இலங்கை சமாதான நீதிவானாக நீதியமைச்சினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் கடந்த 30ஆம் திகதி யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார். (இ)

உ

சிவமயம்

அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

கடந்த 02.11.2017 (வியாழக்கிழமை) சிவபதமடைந்த பூநகரியைப் பிறப்பிடமாகவும் கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட எமது குடும்பத் தலைவர்

அமரர் திருநாவுக்கரசு இராசநாயகம்

அவர்களின் மரணச் சடங்கில் கலந்து கொண்டு ஆறுதல் அளித்தும் அனுதாபம் தெரிவித்தும் தொலைபேசியிலும் முகநூல் மூலமும் தொடர்பு கொண்டும் இன்னும் பல வழிகளிலும் பங்களிப்புச் செய்த அனைவருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று 30.11.2017 வியாழக்கிழமை காலை 6 மணிக்கு கீரிமலையிலும் வீட்டுக்கிருத்திய கிரியைகள் 02.12.2017 சனிக்கிழமை காலை அன்னாரின் இல்லத்திலும் நடைபெற்று அதனைத் தொடர்ந்து ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் மதியபோசன நிகழ்வும் பகல் 11.00 மணியளவில் கொக்குவில் செல்வமஹால் கல்யாண மண்டபத்தில் (கே.கே.எஸ்.றோட்,கொக்குவில் மேற்கு கொக்குவில், யாழ்ப்பாணம்) நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் குடும்ப சகிதம் தாங்கள் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்

இங்ஙனம்

கொக்குவில். (1514) குடும்பத்தினர்.

இராசி பலன்

30.11.2017

கார்த்திகை 14, வியாழக்கிழமை

சூரிய உதயம் காலை 6.11 மணிக்கு

துவாதசி பின்னிரவு 4.09 மணிவரை

ரேவதி பிற்பகல் 01.11 மணிவரை

சுபநேரம் 7.44-9.14 மணிவரை

இராகுகாலம் 01.44-03.14 மணிவரை

வைஷ்ணவ ஏகாதசி விரதம்

வளவன்

சந்			
	கிரகநிலை சந்திராஷ்டமம் உத்தரம், அத்தம் மதியம் 12.55 மணிக்கு மேட-சந்		ராகு
கேது			
	சனி, புத சூரி	குரு,சுக்	செவ்

மீனம் மனதில் உற்சாகமும் மகிழ்ச்சியும் அதிகரிக்கும், தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், வாக்கு மேன்மையுண்டு, முயற்சிகளில் முன்னேற்றம் ஏற்படலாம்.

மேடம் வீட்டில் சில மாற்றங்களைச் செய்ய முற்படுவீர்கள், நீங்கள் தேடிச் சென்று பார்க்க நினைத்த நபர் உங்களைத் தேடி வரலாம், கூட்டாளிகளின் ஒத்துழைப்பு கொஞ்சம் குறையலாம்.

ரிஷபம் செய்தொழிலில் உங்களின் மதிப்பும் மரியாதையும் உயரும், விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், காரிய அனுகூலமுண்டு.

மிதுனம் தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும், தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாக மடைவீர்கள், போசன நன்மையுண்டு.

கும்பம் வியாபார விருத்தியுண்டு, குடும்ப உறுப்பினர்கள் உங்களின் சொற்களைக் கேட்டு நடக்க முன்வருவர், சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்ற முண்டு.

மகரம் தொழில் முன்னேற்றத்திற்கு மங்கையர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம்.

தனுசு அரசியல் செல்வாக்கு மேலோங்கும் நாள், குடும்பத்தினரின் தேவைகளைப் பூர்த்தி செய்து மகிழ்வீர்கள், வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள்.

விருச்சிகம் பொருளாதார நிலை உயர்வதற்கான வழியைக் கண்டு கொள்வீர்கள், எண்ணங்கள் எளிதில் கைகூடும், ரோக பயமுண்டு.

துலாம் உறவினர் வருகையால் உற்சாகம் பெருகும் நாள், வீட்டில் சில மாற்றங்களைச் செய்ய முற்படுவீர்கள், ஆரோக்கியமான சம்பவங்கள் இடம்பெறலாம்.

கன்னி உடனிருப்பவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது, கொடுத்த வாக்கை கடைசி நேரத்தில் காப்பாற்றுவீர்கள், சிலர் கௌரவக் குறைவாக நடந்து கொள்ளலாம்.

சிம்மம் சிந்தித்து செயற்பட்டு சிறப்புகளைக் காணும் நாள், உறவினர் பகை மாறும், எடுத்த காரியங்களை முடிக்க அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை உருவாகும்.

கடகம் திட்டமிட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், தனவரவு திருப்திகரமாக அமையும், தொல்லை தந்தவர்களே தோள் கொடுத்து உதவ முன்வரலாம்.

தீவுப்பகுதிகளை யாழ்.மாநகர சபையுடன் இணைக்குமாறு மக்கள் கோரிக்கை

எல்லை நிர்ணய குழுத்தலைவர் தகவல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டு மக்கள் மத்தியில் மாகாணசபை தேர்தல் தொகுதி நிர்ணயம் குறித்த விழிப்புணர்வு மிகவும் குறைவாகஉள்ளதுஎனஎல்லை நிர்ணய ஆணைக்குழுவின் தலைவரும் மாகாண எல்லை நிர்ணய குழுவின் தலைருமான க.தவலிங்கம் தெரிவித்துள்ளார்.

மாகாணசபை தொகுதி நிர்ணயம் குறித்த ஆலோசனைகளை வழங்குவதற்கு அரசியல் கட்சிகள் சார்பாக 3 கட்சியினரும், பொதுமக்கள் என ஒரு சிலருமே கலந்து கொண்டனர் எனவும் சுட்டிக் காட்டியுள்ளார்.

மாகாணசபை தேர்தலுக்கான தேர்தல் தொகுதி நிர்ணயம் தொடர்பாக தேர்தல் நிர்ணய குழுவால், பொது மக்களின் கருத்தறியும் கலந்துரையாடல் யாழ்.மாவட்டச் செயலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

அந்த கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.அவர் மேலும் தெரிவிக்கையில்,

புதிய மாகாண சபைத் தேர்தல் முறையில் விகிதாசாரம் மற்றும்தொகுதி முறைமை அடிப்படையில் 50 இற்கு 50 என தேர்தலை நடத்த அரசு தீர்மானித்துள்ளது.

அந்த வகையில் மாகாண சபைத் தேர்தலுக்கென தேர்தல் தொகுதிகளை நிர்ணயிப்பதற்காக கடந்த ஒக்டோபர் மாதம் 4 ஆம் திகதி எல்லை நிர்ணயக் குழு ஜனாதிபதியால் தெரிவு செய்யப்பட்டது.

அந்த குழுவின் முதற்கட்ட செயற்பாடாக ஊடகங்களில் விளம்பரம் செய்து மக்களின், அங்கீகரிக்கப்பட்ட அரசியல்கட்சிகளின் ஆலோசனைகள் பெற்றுக்கொண்டு வருகிறோம்.

மேலும் இதனை விரிவுபடுத்த சகல மாவட்டங்களுக்கும் சென்று அனைவரின் கருத்துக்களை பெறுவதற்கான ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டு இதுவரை 17 மாவட்டங்களில் விஜயம் செய்து கருத்துக்களை பெற்றுள்ளோம்.

அந்தவகையில் வடமாகாணத்தை பொறுத்தமட்டில் கடந்த 27ஆம் திகதி வவுனியா மாவட்டத்துக்கு சென்றிருந்தோம். அங்கு மூவின மக்கள் வசிக்கிறார்கள். பொதுவாக சிங்கள மக்கள், முஸ்லிம் மக்கள் தமக்கான பெரும்பான்மை அடிப்படையில் தொகுதி தெரிவு செய்து தரும்படி வேண்டிக் கொண்டார்கள். அங்குள்ள தமிழ் சமூகத்தினர், எவ்வாறு தொகுதிகள் நிர்ணயிக்கப்பட வேண்டும் என்ற சில ஆலோசனைகளை தந்திருந்தார்கள். அவர்களின் ஆலோசனைகள் கவனத்தில் எடுக்கப்பட்டு முடிவாக எல்லை நிர்ணயிக்கப்படும் போது கருத்துக்கள் உள்வாங்கப்படும் என தெரிவித்தோம்.

அதேபோன்று யாழ். மாவட்டத்தில் எமது அமர்வு இடம்பெற்றது. கட்சிகள் சார்பாக 3 கட்சிகளும் பொதுமக்கள் சார்பாக ஒரு சிலரும் கலந்து கொண்டனர்.

இதில் பொதுமக்களின் எண்ணிக்கை குறைவாக இருப்பதற்கு அவர்கள் மத்தியில் இவ்விடயம் தொடர்பில் தெளிவின்மையே காரணமாக இருக்கலாம்.

யாழ்.மாவட்டத்தில் கருத்து தெரிவித்தவர்களின் பொதுவான கோரிக்கையாக தீவுப்பகுதிகளை இணைப்பது தொடர்பாக இருந்தது.

தீவுப்பகுதிகளில் உள்ளவர்களில் பெரும்பாலானோர் யாழ்.மாநகரசபை எல்லைக்குள் வாழ்வதால் அதை மாநாகர சபையுடன் சேர்த்து தொகுதி பிரிக்குமாறு ஆலோசனை தெரிவித்தனர்.

அடுத்து சாவகச்சேரி தொகுதி எவ்வாறு இணைக்கப்படுவது என்பது தொடர்பிலும் கருத்து தெரிவித்தனர். 8 தொகுதிகள் எவ்வாறு வரையறுக்கப்பட வேண்டும் என எழுத்து மூலமும் வாய்மூலமும் அரசியல் கட்சிகள் சார்பாக வருகை தந்தவர்கள் எம்மிடம் தெரியப்படுத்தியுள்ளனர்.

இவர்களுடைய கருத்துக்கள், ஆலோசனைகள்அனைத்தும் எமது குழுவால் பரிசீலிக்கப்பட்டு முடிவான தீர்மானம் எடுக்கப்படும்என அவர்மேலும் தெரிவித்தார். (இ-9)

அமரர் திருமதி இரத்தினம் கமலாதேவியின் ஞாபகார்த்தமாக புலமைப்பரிசில்கள் வழங்கலும் பிரதீபா பட்டம் பெற்ற சாதனையாளர்கள் கௌரவிப்பு நிகழ்வும் மணியகாரன் தோட்டம் பாடசாலை மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழவில் பாராளுமன்ற உறுப்பினரும் தமிழரசுக் கட்சியின் தலைவருமான மாவை.சேனாதிராசா கலந்து கொண்டு சாதனையாளர்களுக்கு பரிசில்களையும் பதக்கங்களையும் வழங்கி வைத்தார்.இந் நிகழ்வில் மாகாணசபை உறுப்பினர்கள் சிவயோகன் மற்றும் தர்மலிங்கம் ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர். (படங்கள்:-மகாலிங்கம்)

சமய தீட்சையும் சர்வாலய தீப உற்சவமும்

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வர ஆலயத்தின் சர்வாலய தீப உற்சவமும் சமய தீட்சை வைபவமும் எதிர்வரும் 3ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இடம்பெறும். காலை 8 மணியளவில் சமய தீட்சை வழங்கும் வைபவமும் தொடர்ந்து பிற்பகல் 3 மணியளவில் சர்வாலய தீப சிறப்பு பூஜையும் இடம்பெறும். (இ-10)

நாடக ஆற்றுகை நாளை

(யாழ்ப்பாணம்)

நாடக ஆர்வலர்களின் கூட்டிணைவில் செம்முகம் ஆற்றுகைக் குழுவின் தயாரிப்பில் உருவான ருஷ்ய நாடகமான Love of one's neighbor நாடகம், கலாநிதி குழந்தை ம.சண்முகலிங்கத்தால் தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட அன்பமுதாறும் அயலார் நாடக ஆற்றுகை நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமை மாலை 6 மணியளவில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மண்டபத்திலும் மறுநாள் சனிக்கிழமை மாலை 5 மணியளவில் சாவகச்சேரி கலாசார மண்டபத்திலும் இடம்பெறும்.

மேற்படி நாடக ஆற்றுகையின் பார்வையாளர் ஒருவருக்கு நுழைவுக்கட்டணம் நூறு ரூபாய் அறவிடப்படுமென செம்முக ஆற்றுகைக் குழுவின் நிறுவுநர் க.சத்தியசீலன் அறிவித்துள்ளார். (இ-10)

விபத்தில் சிக்கிய பெண் சிகிச்சை பலனின்றி மரணம்

(யாழ்ப்பாணம்)

மோட்டார் சைக்கிள் மோதியதில் படுகாயமடைந்த பெண் ஒருவர் சிகிச்சை பலனின்றி கடந்த 27ஆம் திகதி யாழ். போதனா வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளார்.

மல்லாகம் தனவோடையைச் சேர்ந்த தர்மலிங்கம் யோகவதி (வயது-65) என்பவரே உயிரிழந்தவராவார்.

குறித்த பெண் கடந்த 22 ஆம் திகதி மாலை 6 மணியளவில் வீட்டின் அருகிலுள்ள கடைக்கு சென்றுள்ளார்.

அப்போது வீதியைக் கடக்க முற்பட்ட போது எதிரே வேகமாக வந்த மோட்டார்சைக்கிள் அவரை மோதித் தள்ளியுள்ளது.

தலையில் அடிபட்டு மயங்கிய நிலையில் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட குறித்த பெண் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனாவைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு சிகிச்சை பெற்று வந்தார். இந்த நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

குறித்த மரணம் தொடர்பான விசாரணையை யாழ். போதனா வைத்தியசாலை மரண விசாரணை அதிகாரி நமசிவாயம்பிறேம்குமார் மேற்கொண்டிருந்தார். (இ-9)

வாராந்த நிகழ்வுடன் சமூகப்பணி

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டு பேரவையினால் பிரதி வெள்ளிதோறும் இடம் பெறும் வாராந்த நிகழ்வின் வரிசையில் 01.12.17 வெள்ளிக்கிழமை வேம்படி மகளிர் கல்லூரி மாணவி அருணகிரிநாதன் ஆதித்யாவின் இன்னிசை நிகழ்வு பக்க வாத்திய சகிதம் நடைபெறும்.

அதனைத் தொடர்ந்து சந்நிதியான் ஆச்சிரமம் ஆற்றும் சமூகப் பணிகள் வகையில் புதுக்குடியிருப்பு கைவேலி முதலாம் வட்டாரம் கிராம முன்னேற்றத் சங்க தலைவர் விடுத்த கோரிக்கைக்கு அமைவாக பாடசாலையில் கல்வி கற்கும் எட்டு மாணவ மாணவிகளுக்குரிய துவிச்சக்கர வண்டிகள் வழங்கும் நிகழ்வும் யாழ்.கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயத்தில் இடம்பெற உள்ள வருடாந்த பரிசளிப்பில் வெற்றியீட்டிய மாணவர்களுக்குரிய பரிசும் பொருட்களும் கற்றல் உப்கரணங்களும் அதிபரின் கோரிக்கைக்கு அமைவாக ஆச்சரம மண்டபத்தில் வைத்து வழங்கப்படும். (இ

பண்பாட்டுப் பெருவிழா -2017

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையில் யாழ். மாவட்ட செயலகம் மற்றும் யாழ். மாவட்ட கலை, கலாசாரப் பேரவையின் ஏற்பாட்டில் பண் பாட்டுப் பெருவிழா நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9 மணியளவில் சங்கானை கலாசார மத்திய நிலையத்தில் யாழ். மாவட்ட கலை, கலாசாரப் பேரவையின் தலைவரும் யாழ்.மாவட்ட செயலருமான நா.வேதநாயகன் தலைமையில் இடம் பெறும்.

இந்நிகழ்வில்பிரதம விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் இ. இளங்கோவன், சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் திருமதி பா.அபிராமி மற்றும் கொழும்பு கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் திருமதி கோ. அனுஷா ஆகியோர் கலந்து கொள்வர். (இ-10-102)

கோப்பாய் தெற்கு றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழாவும் ஒளிவிழாவும் வித்தியாலய மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்ற போது...

சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினம்

(யாழ்ப்பாணம்)

சமூக வள நிலையத்தின் ஏற்பாட்டில் கருவி மாற்றுத் திறனாளிகளின் சர்வதேச மாற்றுத் திறனாளிகள் தினம் எதிர்வரும் 3ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் நல்லூர் வடக்கு சட்டநாதர் வீதியிலுள்ள இளங் கலைஞர் மன்றத்தில் கருவி மாற்றுத்திறனாளிகளின் சமூக வள நிலைய செயலாளர் து.யசிந்தன் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட உளமருத்துவத்துறை பேரா சிரியர் தயா சோமசுந்தரம், சிறப்பு விருந்தினர்களாக நல்லூர் பிரதேச செயலர் திருமதி அ.எழிலரசி மற்றும் வலி.கிழக்கு பிரதேச சபை செயலாளர் யு.ஜெலீபன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-10)

பாடசாலை மாணவர்களின் அடையாளத்தை உறுதிசெய்வதற்கு Unique Student Code, Finger Print

(கொழும்பு)

அரசாங்க பாடசாலைகளுக்கு உள்வாங்கப்படும் அனைத்து மாணவர்களின் அடையாளத்தை உரிய முறையில் உறுதி செய்யவும் பரீட்சை நடவடிக்கையின் போதும் பரீட்சார்த்திகளின் பரீட்சை நடவடிக்கைகளை அதிகாரிகள் இலகுவாக அறிந்து கொள்வதற்கான நடைமுறையொன்று முன்மொழியப்பட்டுள்ளது.

கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம் பரீட்சை திணைக்களத்தின் நடவடிக்கைகளை மேலும் விரிவுபடுத்துவதற்கான ஆலோசனைகளை முன்வைக்க புத்திஜீவிகளை கொண்ட குழுவொன்று நியமித்திருந்தார். இந்த குழுவினால் இந்த ஆலோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

பாடசாலைக்கு உள்வாங்கப்படும் அனைத்து மாணவர்களுக்கும் அவர்களின் அடையாளத்தை உறுதி செய்யும் இலக்கமொன்றை (Unique Student Code) அறிமுகப்படுத்தவும் அதனுடன் கைவிரல் (Finger Print) அடையாளத்தின் மூலம் ஆள் அடையாளத்தை உறுதி செய்து அதனூடாக கியூ ஆர் QR குறியீடு ஒன்றை தயாரிப்பதற்கு ஆலோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த இலக்கம் பாடசாலை மட்டத்தில் மேற்கொள்ளப்படும் முக்கிய வெட்டுப்புள்ளி பரீட்சைகளின் பயன்படுத்துவதற்கும் ஆலோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனூடாக முக்கிய வெட்டுப்புள்ளி பரீட்சைகளான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை, கல்வி பொதுத்தராதர சாதாரணதர பரீட்சை,கல்வி பொதுத்தராதர உயர்தர பரீட்சை ஆகிய பரீட்சைகளின் போது மாணவர்களின் செயற்றிறன் ஆற்றல்களை கண்காணிக்கவும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இதே போன்று பரீட்சை மோசடியை தடுக்கவும் இது பெரும் பயனுள்ளதாக அமையும். இதற்கு மேலதிகமாக விடை மதிப்பீட்டு பரிசோதனையின் போதும் செயற்றிறன் பரீட்சைக்கும் நவீன தொழில்நுட்பத்துடனான ஒஸிஆர் OCR இயந்திரத்தை (Optical Character Readers) கொள்வனவு செய்யவும் ஆலோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் செயற்றிறன் விடைப்பத்திரத்தை மதிப்பீடு செய்வதற்கான காலம் குறைவடைவதுடன் விரைவாக பெறுபேறுகளை வெளியிட முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

அரசியல்வாதிகளின் 'சண்டைக்கார தமிழன்' அமைச்சர் மனோ கணேசன்

(கொழும்பு)

எதிர்காலத்தில் எனக்கு சிலை வைத்து கொண்டாட வேண்டாம். ஆனால், மனோ கணேசன் அமைச்சு பதவியில் இருந்து பதவி அதிகாரத்தை பயன்படுத்தி நம் சமூகத்துக்கு ஒன்றுமே செய்யவில்லை என எவரும் என்னை திட்டிவிடக்கூடாது என்று அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார். அமைச்சர்மனோ கணேசன் தனது உத்தியோக பூர்வ முகநூலில் எழுதியுள்ளதாவது,

நுவரெலியாவில் எப்படி புதிய தமிழ் பெரும்பான்மை பிரதேச சபைகளை உருவாக்கினோமோ அப்படியே தலை நகர் கொழும்பு மாநகர சபையிலும் புதிய தமிழ், முஸ்லிம் வட்டாரங்களை உருவாக்கினோம்.

அசோக பீரிஸ் எல்லை மீள் நிர்ணய அறிக்கையின்படி கொழும்பு மாநகர சபையின் 66 வட்டார உறுப்புரிமையில் 20 தமிழ் உறுப்பினர் தெரிவு செய்யப்படலாம்.

2015ஆம் வருட அறிக்கையின் படி அது 10க்கு கீழே வந்துவிடும். முஸ்லிம் பிரதிநிதித்துவமும் அப்படிதான்.

அசோக பீரிஸ் அறிக்கை தயாரிக்கப்பட்ட போது, நாம் கண்களில் விளக்கெண்ணெய் ஊற்றிக்கொண்டு கவனித்து கடுமையாக உழைத்ததால் இந்த பெறுபேறு. இதைத்தான் இப்போது பின்னோக்கி இழுத்து பிடுங்க பார்க்கிறார்கள். விடலாமா?

நுவரெலியாவில் எப்படி புதிய தமிழ் பெரும்பான்மை பிரதேச சபைகளை உருவாக்கினோமோ அப்படியே தலை நகர் கொழும்பு மாநகரசபையிலும் புதிய தமிழ், முஸ்லிம் வட்டாரங்களை உருவாக்கினோம். இப்படியே தெஹிவளைமாநகர,கொலன்னாவை, அவிசாவளை, வத்தளை நகர சபைகளிலும் புதிய தமிழ் வட்டாரங்கள் உருவாகியுள்ளன.

இவற்றை நாம் எமக்காக செய்யவில்லை. தேர்தல்முறை மாற்றம், ஒருமுறை வந்தால் அது பல ஆண்டுகளுக்கு மேல் இருக்கப்போகிறது, ஆகவே எதிர்கால தலைமுறையையும் மனதில் கொண்டு செயற்பட்டுள்ளோம்.

இன்று நாங்கள் ஆளுமையுடனும், தூரப்பார்வையுடனும் உருவாக்கிய சபைகளிலும், வட்டாரங்களிலும் தான் எங்களை தினந்தோறும் காழ்ப்புணர்ச்சி கொண்டு திட்டி தீர்க்கும் "கோமா" தமிழர்களும் போட்டியிட போகிறார்கள் என்பதும், அவர்களுக்கும் விடயம் தெரியாத நமது மக்களில் ஒரு சிலர் வாக்களிக்க போகிறார்கள் என்பதும் வேடிக்கையான உண்மைகள்.

எதிர் காலத்தில் நான் இல்லாதபோது எவரும் என க்கு சிலை வைத்து கொண்டாட வேண்டாம். ஆனால், "மனோ கணேசன் என்று ஒரு அமைச்சன், கட்சி தலைவன் பதவியில் இருந்தான். அவன் பதவி அதிகாரத்தை பயன்படுத்தி அப்போது நம் சமூகத்துக்கு ஒன்றுமே செய்யவில்லை" என்று எவரும்என்னை திட்டிவிடக்கூடாது என்று மட்டுமே நான் விரும்புகிறேன்.

இதனால்தான் இன்று என் முதுகிற்கு பின்னாலே, சில பெரும்பான்மை அரசியல் வாதிகள், என்னை "சண்டைக்கார தமிழன்" என்று திட்டுகிறார்கள். இவர்கள் என்னை திட்டிவிட்டு போகட்டும். ஆனால், நம்எதிர்கால பரம்பரை என்னை திட்டாமல் இருக்கட்டும்." என குறிப்பிட்டுள்ளார். (இ-7)

சேவை நலன் பாராட்டு

திரு. சிதம்பரப்பிள்ளை தவராஜா SLTS-I

B.A. (Hons), P.G.D.E

சேவை விபரம் (29 ஆண்டுகள்)

கிளி/மாசார் அ.த.க. பாடசாலை (ஆசிரியர் 2:.01.1988-09.06.1991)

கிளி/பளை மகா வித்தியாலயம் (ஆசிரியர் 10.06.1991-31.12.1995)

யா/ஹாட்லிக் கல்லூரி (ஆசிரியர் 01.01.1996-31.12.2007)

யா/ஹாட்லிக் கல்லூரி (பகுதித் தலைவர் 01.01.2008-01.12.2017)

ஆளுமையோடு "ஆசிரியம்" விதைத்த விந்தையே!
இருபத்தோர் ஆண்டுகள் அயராத சேவையால்
ஹாட்லி அன்னையைக் கௌரவித்த சிந்தையே!
விளையாட்டுத் துறையை நெறிப்படுத்தி
விருதுகள் குவியவைத்த சாதனைகளின் சந்தையே!
மணிவிழாக் கண்டு நீடுழி வாழிய
"தவராஜா" எனும் நாமங் கொண்ட தர்மத்தின் தந்தையே!

(1497)

ஆசிரிய நண்பர்கள்

கல்யாணமாலை

சர்வதேச திருமண சேவை

இவர்களுக்கு மணமகள் தேவை	இவர்களுக்கு மணமகன் தேவை
பிறப்பு: 1981 இந்து நட்சத்திரம்: மகம் கி.பா:சூரிசெவ் 3 இல் தகைமை/தொழில்: A/L/சொந்த தொழில் தொ.இ: B/7243	பிறப்பு: 1983 இந்து நட்சத்திரம்: மகம் கி.பா: 60 உயரம்: 5' தகைமை/தொழில்: HNDA, M.COM/ அரசதொழில் தொ.இ: G/5843
பிறப்பு: 1981 இந்து நட்சத்திரம்: அச்சுவினி கி.பா: 15 உயரம்: 5'7" தகைமை/தொழில்: A/L/தனியார் தொழில் தொ.இ: B/7244	பிறப்பு: 1993 இந்து நட்சத்திரம்: அனுசம் கி.பா: 40 செவ் 1 இல் உயரம்: 5'6" தகைமை/தொழில்: HNDA/ அரசதொழில் தொ.இ: G/5847
பிறப்பு: 1983 இந்து நட்சத்திரம்: மகம் கி.பா.சூரிசெவ் 7 இல் உயரம்: 5'9" தகைமை/தொழில்: BSc Eng/ பொறியியளாளர் சிங்கப்பூர் தொ.இ: B/7245	பிறப்பு: 1987 இந்து நட்சத்திரம்: பூரம் கி.பா: 38 சூரிசெவ் 3 இல் உயரம்: 5'2" தகைமை/தொழில்: BA/ அரசதொழில் தொ.இ: G/5850
பிறப்பு: 1980 இந்து நட்சத்திரம்: பூசம் கி.பா: 26 உயரம்: 6' தகைமை/தொழில்: MBA/ சொந்ததொழில் லண்டன் NOT PR தொ.இ: B/7246	பிறப்பு: 1986 இந்து நட்சத்திரம்: சுவாதி கி.பா: 26 செவ் 4 இல் உயரம்: 5'6" தகைமை/தொழில்: A/L தொ.இ: G/5856

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு
சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

12 ஆயிரத்து 391 விவசாயிகளுக்கு

18 கோடியே 37 இலட்சத்து 96 ஆயிரம் ரூபா உரமானிய கொடுப்பனவாக பகிர்ந்தளிக்கப்படும்

மன்னார் மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்கள உதவி ஆணையாளர் தெரிவிப்பு

(மல்லாவி)

மன்னார் மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்களத்திற்குட்பட்ட 12 கமநல சேவைகள் நிலையங்களின் கீழ் 2017 - 2018 ஆம் ஆண்டுக்கான கால போக நெற் செய்கையை 12 ஆயிரத்து391 விவசாயிகள் 36 ஆயிரத்து759.25 ஏக்கரில் மேற்கொண்டுள்ள நிலையில் இவர்களுக்கான உரமானியக் கொடுப்பனவாக 18 கோடியே 37 இலட்சத்து 96 ஆயிரத்து 250 ரூபாவை வழங்குவதற்கான புள்ளி விபரத் தகவல்களை திரட்டி அரசாங்கத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் திறைசேரியில் இருந்து இதற்குரிய பணம் விடுவிக்கப்பட்டதும் விவசாயிகளின் தனிப்பட்ட வங்கிக் கணக்கிலக்கத்திற்கு பணம் பகிர்ந்தளிக்கப்படவுள்ளதாக மன்னார் மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் உதவி ஆணையாளர் பி.தேவரதன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

மன்னார் மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்களத்திற்குட்பட்ட பெரிய நீர்ப்பாசனக் குளங்களின் கீழாகவும் மற்றும் கமநல சேவை நிலையங்களின் கீழுள்ள நீர்ப்பாசனக் குளங்களின் கீழாகவும் 2017 - 2018 கால போக நெற் செய்கையை 12 ஆயிரத்து 391 விவசாயிகள் மேற்கொண்டுள்ளனர்.

இவ்வாறு நெற் செய்கையை மேற்கொண்ட விவசாயி ஒருவருக்கு ஒரு ஏக்கருக்கு 5 ஆயிரம் ரூபா வீதம் ஆகக் கூடியது 5 ஏக்கருக்குரிய உரமானியக் கொடுப்பனவாக ரூபா 25 ஆயிரம் மட்டும் வழங்கப் படவுள்ளது.

இதற்கமைய, மாந்தை கமநல சேவை நிலையத்தின் கீழ் ஆயிரத்து 172 விவசாயிகள் 3 ஆயிரத்து 676.50 ஏக்கரில் நெல் பயிரிட்டுள்ள நிலையில் இவர்களுக்கான உரமானியக் கொடுப்பனவாக ஒரு கோடியே 83 இலட்சத்து 82 ஆயிரத்து 500 ரூபாவும், பாலம்பிட்டிக் கமநல சேவை நிலையத்தின் கீழ் 450 விவசாயிகள் ஆயிரத்து 396.50 ஏக்கரில் நெல் பயிரிட்டுள்ள நிலையில் இவர்களுக்கான உரமானியக் கொடுப்பனவாக 2 கோடியே 69 இலட்சத்து 82 ஆயிரத்து 500 ரூபாவும், உயிலங்குளம் கமநல சேவை நிலையத்தின் கீழ் ஆயிரத்து 178 விவசாயிகள் 3 ஆயிரத்து 666.25 ஏக்கரில் நெற் செய்கையை மேற்கொண்டுள்ள நிலையில் இவர்களுக்கான உரமானியக் கொடுப்பனவாக ஒரு கோடியே 83 இலட்சத்து 31 ஆயிரத்து 250 ரூபாவும், ஆட்காட்டி வெளி கமநல சேவை நிலையத்தின் கீழ் ஆயிரத்து 577 விவசாயிகள் 4 ஆயிரத்து 267.25 ஏக்கரில் நெல் பயிரிட்டுள்ள நிலையில் இவர்களுக்கான உரமானியக் கொடுப்பனவாக 2 கோடியே 13 இலட்சத்து 36 ஆயிரத்து 250 ரூபாவும், நானாட்டான் கமநல சேவை நிலையத்தின் கீழ் ஆயிரத்து 921 விவசாயிகள் 5 ஆயிரத்து 832 ஏக்கரில் நெல் பயிரிட்டுள்ள நிலையில் இவர்களுக்கான உரமானியக்கொடுப்பனவாக 2 கோடியே 91 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாவும், முருங்கன் கமநல சேவை நிலையத்தின் கீழ் 2 ஆயிரத்து 13 விவசாயிகள் 6 ஆயிரத்து 103.25 ஏக்கரில் நெல் பயிரிட்டுள்ள நிலையில் இவர்களுக்கான உரமானியக் கொடுப்பனவாக 3 கோடியே 51 இலட்சத்து 6 ஆயிரத்து 250 ரூபாவும், பி.பி.பொற்கேணி கமநல சேவை நிலையத்தின் கீழுள்ள ஆயிரத்து 54 விவசாயிகள் ஆயிரத்து 93.7 ஏக்கரில் நெல் பயிரிட்டுள்ள நிலையில் இவர்களுக்கான உரமானியக் கொடுப்பனவாக ஒரு கோடியே 36 இலட்சத்து 71 ஆயிரத்து 250 ரூபாவும், சிலாவத்துறை கமநல சேவை நிலையத்தின் கீழ் ஆயிரத்து 459 விவசாயிகள் ஆயிரத்து 381.60 ஏக்கரில் நெல் பயிரிட்டுள்ள நிலையில் இவர்களுக்கான உரமானியக் கொடுப்பனவாக ஒரு கோடியே 72 இலட்சத்து 70 ஆயிரம் ரூபாவும், இலுப்பைக் கடவை கமநல சேவை நிலையத்தின் கீழ் 655 விவசாயிகள் 2 ஆயிரத்து 578.25 ஏக்கரில் நெல் பயிரிட்டுள்ள நிலையில் இவர்களுக்கான உரமானியக் கொடுப்பனவாக ஒரு கோடியே 28 இலட்சத்து 91 ஆயிரத்து 250 ரூபாவும், விடத்தல்தீவு கமநல சேவை நிலையத்தின் கீழ் 498 விவசாயிகள் ஆயிரத்து 993.25 ஏக்கரில் நெல் பயிரிட்டுள்ள நிலையில் இவர்களுக்கான உரமானியக் கொடுப்பனவாக 99 இலட்சத்து 66 ஆயிரத்து 250 ரூபாவும், இரணை இலுப்பைக்குளம் கமநல சேவை நிலையத்தின் கீழ் 413 விவசாயிகள் ஆயிரத்து 52.75 ஏக்கரில் நெல் பயிரிட்டுள்ள நிலையில் இவர்களுக்கான உரமானியக் கொடுப்பனவாக 52 இலட்சத்து 63 ஆயிரத்து 750 ரூபாவும், மன்னார் தீவு கமநல சேவை நிலையத்தின் கீழ் ஒரு விவசாயி மட்டும் தனது 5 ஏக்கரில் நெல் பயிரிட்டுள்ள நிலையில் இவருக்கு உரமானியக் கொடுப்பனவாக 25 ஆயிரம் ரூபாவுமாக மொத்தம் 12 ஆயிரத்து 391 விவசாயிகளின் 36 ஆயிரத்து 759.25 ஏக்கர் நெற் செய்கைக்கு 18 கோடியே 37 இலட்சத்து 96 ஆயிரத்து 250 ரூபாவை உரமானியக் கொடுப்பனவாக வழங்குவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருவதாக மன்னார் மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் உதவி ஆணையாளர் பி.தேவரதன் தெரிவித்துள்ளார். (2-15)

முல்லையில் 68 மில். ரூபா செலவில் 138 வேலைத்திட்டங்கள் முன்னெடுப்பு

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தின் கிராம அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் 68 மில்லியன் ரூபா செலவில் 138 வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக மாவட்டச்செயலகப் புள்ளிவிபரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் பல்வேறு நிதியீட்டங்கள் ஊடாக பல்வேறு அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் கிராம அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் 138 வேலைகள் 68 மில்லியன் ரூபா செலவில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதில் 99 வேலைகள் நிறைவுறுத்தப்பட்டுள்ளதாகவும் ஏனைய வேலைகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் இது வரை 4.4.4 மில்லியன் ரூபா நிதி விடுவிக்கப்பட்டிருப்பதாகவும் மாவட்டச்செயலகப் புள்ளிவிபரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி கரைதுரைப்பற்றுப்பிரதேச செயலர் பிரிவில் 47 வேலைத்திட்டங்கள் 23 மில்லியன் ரூபா செலவிலும் புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவில் 19 வேலைத்திட்டங்கள் 9.5 மில்லியன் ரூபா செலவிலும் ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவில் 24 வேலைத்திட்டங்கள் 13.5 மில்லியன் ரூபா செலவிலும் துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் 24 வேலைத்திட்டங்கள் 10 மில்லியன் ரூபா செலவிலும் மாந்தை கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் 15 வேலைத்திட்டங்கள் 7.5 மில்லியன் ரூபா செலவிலும் வெலிஓயா பிரதேச செயலர் பிரிவில் 9 வேலைத்திட்டங்கள் 4.5 மில்லியன் ரூபா செலவிலும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதனைவிட கிராம அபிவிருத்தித்திட்டத்தின் கீழ் விசேட வேலைத்திட்டத்தின் கீழ் 14 வேலைத்திட்டங்கள் 19 மில்லியன் ரூபா செலவில் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-315)

331 மலசலகூடங்கள் அமைப்பு

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தின் தனிநபர் சுகாதாரத்தை பேணும் வகையில் மீள்குடியேற்ற அமைச்சினூடாக 331 மலசலகூடங்கள் அமைக்கப்பட்டு வருவதாக மாவட்டச் செயலகப் புள்ளிவிபரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.முல்லைத்தீவு மாவட்டத்தில் மீள்குடியேறிய மக்களின் தனி நபர் சுகாதாரத்தைப் பேணும் வகையில் பல்வேறு திட்டங்கள் ஊடாக மலசலகூடங்கள் குடிநீர்வசதிகள்என்பன ஏற்படுத்தப்பட்டுவருகின்றன.

அந்த வகையில் இவ்வாண்டு மீள்குடியேற்ற அமைச்சினுடைய நிதியொதுக்கீட்டின் கீழ் இருபது மில்லியன் ரூபா செலவில் முல்லைத்தீவு மாவட்டத்தில் ஆறு பிரதேச செயலர் பிரிவுகளிலும் 331 மலசலகூடங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன என மாவட்ட செயலகப் புள்ளி விபரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-315)

வவுனிக்குளத்தின் கீழ் இவ்வாண்டு 6ஆயிரத்து 60 ஏக்கரில் நெற்செய்கை

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தில் பாரிய நீர்ப்பாசனக் குளங்களில் ஒன்றான வவுனிக்குளத்தின் கீழ் இவ்வாண்டு 6 ஆயிரத்து 60 ஏக்கர் நிலப்பரப்பில் நெற்செய்கை முன்னெடுக்கப்பட்டு வருவதாக வவுனிக்குளம் நீர்ப்பாசனத் திணைக்களத்தின் கீழ் காணப்படுகின்ற 6 ஆயிரத்து 60 ஏக்கர் நிலப்பரப்பில் கடந்த காலங்களில் பயிர்ச்செய்கை மேற்கொள்ளக்கூடிய நிலையில் குளத்தின் நீரைத்தேக்க முடியாத நிலை மற்றும் கடந்த கால யுத்தம் காரணமாக பல ஏக்கர் வயல் நிலங்கள் கைவிடப்பட்ட நிலையில் காணப்பட்டன.

இந்நிலையில் கடந்த 2013 ஆம் ஆண்டு குறித்த குளம் புனரமைக்கப்பட்டதுடன், தொடர்ந்து வந்த ஆண்டுகளிலும் ஏனைய அபிவிருத்தி வேலைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

தற்போது குளத்தில் 26 அடி நீரைத் தேக்கக்கூடியதுடன், 6 ஆயிரத்து 60 ஏக்கருக்குரிய நீர்ப்பாசனத்தையும் செய்யக்கூடியதாக இருப்பதாகவும் தெரிவித்துள்ள வவுனிக்குளம் நீர்ப்பாசனத் திணைக்களம் ஏற்கனவே காலபோக பயிர்ச்செய்கை கூட்டத்திற்கு அமைவாக விவசாயிகள் பயிர்ச் செய்கைகளை முன்னெடுத்து வருகின்றனர் என்றும் நீர்ப்பாசனத் திணைக்களத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-315)

இந்திய மீனவர்களின் இழுவைப்படகுகளை முல்லை. கடற்பரப்பில் முற்றாக தடை செய்க

கடற்றொழில் அமைப்பின் பிரதிநிதிகள் மனு கையளிப்பு

(பணிக்கன்குளம்)

முல்லைத்தீவு கடற்பரப்பில் இந்திய மீனவர்களின் இழுவைப் படகுகளின் அத்து மீறிய வருகை அதிகரித்துள்ளது. இதனை முற்றாகத் தடை செய்ய வேண்டும். இதனால் கடல் வளங்கள் முற்றாக அழிக்கப்படுவதாக முல்லைத்தீவு மாவட்ட மீனவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

இது தொடர்பில் இந்திய மீனவர்களின் இழுவைப்படகினை முற்றாக தடைசெய்ய கோரி வட்டுவாகல் பகுதியில் அமைந்துள்ள கடற்படை முகாமிற்கு சென்று கடற்றொழில் அமைப்பின் பிரதிநிதிகள் முறையிட்டுள்ளார்கள்.

கோத்தபாய கடற்படை முகாமிற்கு முன்பாக நேற்று முன்தினம் பிற்பகல் ஒன்று திரண்ட மாவட்ட கடற்றொழில் அமைப்பின் பிரதிநிதிகள் கடற்படை அதிகாரியை சந்தித்து தங்கள் மனுவை வழங்கினர். இதன்போது வடக்கு மாகாண சபை உறுப்பினரும் சம்பவ இடத்திற்கு வருகை தந்திருந்தார்.

இவர்களின் கோரிக்கைக்கு பதிலளித்த கடற்படையினர் நேற்று முன்தினம் இரவில் இருந்து தாங்கள் இரண்டு படகுகளை கடலில் விட்டு கண்காணிப்பதாகவும் மக்களை கடலில் இறங்க வேண்டாம் என்றும் தெரிவித்தனர். (2-281)

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேச செயலக அபிவிருத்திக் குழு கூட்டம் நேற்று முற்பகல் 10 மணியளவில் பிரதேச அபிவிருத்திக்குழு இணைத் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சி.சிவமோகன் தலைமையில் ஆரம்பமானது. கலந்துரையாடலில் பாராளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான், வடக்கு மாகாண விவசாய அமைச்சர் க.சிவநேசன், வடக்கு மாகாண சபை பிரதி அவைத் தலைவர் வ.கமலேஸ்வரன், வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான து. ரவிகரன் , ஆ. புவனேஸ்வரன் , புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் ம. பிரதீபன் மற்றும் திணைக்கள உத்தியோகத்தர்கள், இராணுவம், பொலிஸார், சமூக மட்ட பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். குறிப்பாக இராணுவத்தால் சுவீகரிக்கப்பட்ட காணிகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

(படங்கள்:-பனிக்கன்குளம் செய்தியாளர்)

மாகாண எல்லை இடநிர்ணயம் தொடர்பான கருத்தறியும் அமர்வு

முல்லைத்தீவில் நடைபெற்றது

(பனிக்கன்குளம்)

மாகாண எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் மாகாண சபை தேர்தலுக்கான இட நிர்ணயம் தொடர்பான கருத்தறியும் அமர்வு நேற்றுக் காலை 8.30 மணிக்கு முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் நடைபெற்றுள்ளது.

முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் தலைமையில் மாகாண எல்லை நிர்ணய குழுவின் தவிசாளர் கே. தவலிங்கம் தலைமையிலான குழுவினர் மக்கள் கருத்தறியும் அமர்வை நடத்தியுள்ளனர்.

இதன்போது முல்லைத்தீவு மாவட்டத்தை 3 தொகுதிகளாக பிரிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்கான மக்கள் கருத்தறியும் செயற்பாடு நேற்று நடைபெற்றுள்ளது. இதில் அரசியல் கட்சியினர், வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் என பலரும் கலந்து கொண்டு தங்கள் கருத்துக்களை முன்வைத்தனர். (2-281)

பனைசார் உற்பத்தி பொருட்களின் கண்காட்சியும் பரிசளிப்பு நிகழ்வும்

(பூநகரி)

பெண்கள் மற்றும் சிறுவர் விவகார அமைச்சின் அனுசரணையுடன் பூநகரி பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் பனைசார் உற்பத்திப் பொருட்களை ஊக்குவிக்கும் முகமாக நான்கு வார பயிற்சி நெறி மட்டுவில் நாடு மேற்கு கிராம அலுவலர் பிரிவில் வசிக்கின்ற பெண் தலைமைத்துவக் குடும்பங்களைச் சேர்ந்த 20 பெண் பயிற்சியாளர்களுக்கு பூநகரி பிரதேச செயலக பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி சத்திய பிரியா கிருஷ்ணகுமார் தலைமையில் நடைபெற்று வந்தது.

பூநகரிப் பிரதேச செயலகத்தில் இறுதி நாள் நிகழ்வும் கண்காட்சியும் , பரிசளிப்பு நிகழ்வும் நேற்று முற்பகல் 10 மணியளவில் பூநகரி பிரதேச செயலர் சி.ச.கிருஷ்ணேந்திரன் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது பயிற்சியாளர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் பரிசளிப்பும், ஊக்குவிப்பு பொருட்களும் வழங்கப்பட்டன.

இந் நிகழ்வில் பூநகரி பிரதேச செயலக கணக்காளர் பே. பிரேமசந்திரன், நிர்வாக உத்தியோகத்தர் சி.ஜெயசிறி உட்பட பலர் கலந்து கொண்டிருந்தனர். (2-84)

உலக மீனவர் தினத்தையொட்டி

தமிழ், சிங்கள மீனவர்கள் மன்னாரில் மாபெரும் பேரணி

(பனிக்கன்குளம்)

"சமூக பொருளாதார மற்றும் கலாசார உரிமைகளை" அடிப்படை மனித உரிமையாக புதிய யாப்பினுள் உறுதி செய்வோம் எனும் தொனிப் பொருளில் மன்னாரில் மாபெரும்பேரணி நடைபெற்றுள்ளது.

உலக மீனவர் தினத்தை முன்னிட்டு தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் வழி நடத்தலில், மன்னார் மாவட்ட மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் காலை 9 மணியளவில் மன்னார் பிரதான பாலத்தடியில் ஆரம்பமான குறித்த பேரணி மன்னார் பஸார் பகுதியூடாகச் சென்று மன்னார் நகர மண்டபத்தை சென்றடைந்தது.

குறித்த பேரணியில் மன்னார் மாவட்டம் உட்பட 14 மாவட்டங்களைச் சேர்ந்த தமிழ், சிங்கள மீனவர்கள் மற்றும் விவசாயிகள் என பல நூற்றுக்கணக்கான வர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது "சமூக பொருளாதார மற்றும் கலாசார உரிமைகளை" அடிப்படை மனித உரிமையாக புதிய யாப்பினுள் உறுதி செய்ய வழியுறுத்தியும், மீனவர்களின் சுதந்திரம் காக்கப்பட வேண்டும் எனவும், விடுவிக்கப்படாத மக்களின் காணிகள் விடுவிக்கப்பட வேண்டும் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்தும், பல்வேறு வசனங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறும் ஊர்வலத்தில் மக்கள் கலந்து கொண்டிருந்தனர்.

அதனைத் தொடர்ந்து மன்னார் நகர மண்டபத்தில் நிகழ்வுகள் இடம்பெற்றன.

மன்னார் மாவட்ட மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் இணைப்பாளர் பெனடிக் குரூஸ் தலைமையில் இடம் பெற்ற் நிகழ்வின் போது விருந்தினர்களாக மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை அன்ரனி விக்டர் சோசை, வடக்கு மாகாண அமைச்சர்களான க.சிவநேசன், அமைச்சர் அனந்தி சசிதரன், தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் வட கிழக்கு மாகாண இணைப்பாளர் அன்டனி ஜேசுதாஸ், தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் தேசிய அமைப்பாளர் ஹர்மன்குமார ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது மீனவர்களின் நிலைமை தொடர்பில் பல்வேறு நிகழ்வுகள் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது. (2-281)

இ.போ.ச. பிரதி பொதுமுகாமையாளருடனான பேச்சு தோல்வி; தொடர்கிறது பணிப்புறக்கணிப்பு

இலங்கை போக்குவரத்து சபை பிரதி பொது முகாமையாளருடன் நடைபெற்ற பேச்சுக்கள் தோல்வியடைந்துள்ளதால் வடமாகாண இலங்கை போக்குவரத்து சபை பேருந்துகளின் பணிப் புறக்கணிப்பு தொடரும் என வடபிராந்திய சாலைகளின் இணைந்த தொழிற்சங்கத்தின் தலைவர் எஸ்.வர்மதேவன் தெரிவித்துள்ளார்.

வவுனியா இலங்கை போக்குவரத்து சாலையில் இலங்கை போக்குவரத்து சபை பிரதி பொது முகாமையாளர் சந்திரசிறிக்கும் வடக்கின் ஐந்து மாவட்டங்களை உள்ளடக்கிய 6 சாலை ஊழியர்கள், உறுப் பினர்கள் உள்ளடங்கிய தொழிற் சங்கத்தினருக்கும் இடையில் நேற்று சந்திப்பு இடம் பெற்றது. இச் சந்திப்பின் பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரி வித்தார். அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில்,

இலங்கை போக்குவரத்து சபையின் வடபிராந்திய முகாமையாளர் மற்றும் வடபிராந்திய பாதுகாப்பு அதிகாரி ஆகியோரை உடனடியாக

பதவி விலக்குமாறு கோரி வவுனியா சாலை ஊழியர்களால் கடந்த 18 ஆம் திகதி சேவைப் புறக்கணிப்பு மேற் கொள்ளப்பட்டிருந்தது. அன்றைய தினம் எமது தலைமைக் காரியாலயத்தால் இவர்கள் இருவரையும் மாற்றித் தருவதாக உறுதி மொழி வழங்கியிருந்தார்கள். ஆனால் 10 நாட்கள் கடந்தும் எந்த நடவடிக்கையும் எடுக்காமையால் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை முதல் நாம் வடக்கு மாகாணம் தழுவிய ரீதியில் பணிப்புறக்கணிப்பை மேற்கொண்டுள்ளோம். இதனால் இலங்கை போக்குவரத்து சபை பேருந்தில் பயணிக்கும் மாணவர்கள், அரச உத்தியோகத்தர்கள், பொது மக்கள் எனப் பலரும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர். வீதிகளில் காத்து இருக்கின்றனர். ஆனால் இன்றைய தினம் எமது சாலைக்கு வருகை தந்த அதிகாரிகள்கூட உரிய தீர்வைத் தரவில்லை. இதனால் நாம் தொடர்ந்தும் சேவைப் புறக்கணிப்பில் ஈடுபட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது எனத் தெரிவித்தார்.

இதேவேளை, எதிர் வரும் முதலாம் திகதி கொழும்பில் இலங்கை போக்குவரத்து சபை தலைவருக்கும், வடபிராந்திய சாலைகளின் இணைந்த தொழிற் சங்கத்திற்கும் இடையில் பேச்சுவார்த்தை இடம்பெறும் எனவும் அதன் பின் இது குறித்து தீர்வு காண்பதாக கொழும்பில் இருந்து வருகை தந்த போக்குவரத்து சபையின் பிரதி பொது முகாமையாளர் தெரிவித்திருந்த போதும் ஊழியர் தொழிற்சங்கம் அதனை ஏற்றுக்கொள்ள மறுத்ததையடுத்து தொடர் புறக்கணிப்பு நடைபெறுகிறது.

அரச பேருந்துகள் சேவையில் ஈடுபடாமையால் வடக்கு மாகாணத்தில் பல பகுதிகளில் மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர். (2-250)

கலைத் தரிசனம்

பரதநாட்டிய கலைஞர் வன்னிமயில் க.கருணானந்தன்

அவர்களுடனான சந்திப்பு

2006 ஆம் ஆண்டு தேசியத் தலைவர் வே.பிரபாகரன் அவர்களினால் ''வன்னி மயில்'' என்ற பட்டத்தைப் பெற்ற இவர் 1987 ஆம் ஆண்டு வைகாசி மாதம் 10 ஆம் திகதி பருத்தித் துறையில் பிறந்தார். ஈழத்தில் சங்கநாதம் எனும் கலை நிகழ்வில் நடனமாடிப் பலரின் பாராட்டைப் பெற்றார். இலங்கையில் பல பாகங்களுக்குச் சென்று நடன ஆற்றுகையை நிகழ்த்தியுள்ளார். பரதநாட்டியம், கும்மி, கோலாட்டம், காவடி, கரகம் போன்ற துறைகளில் மட்டு மல்லாது பிறேக், டிஸ்கோ, வெஸ்ரன், பலே போன்ற நடன ங்களிலும் சிறந்து விளங்குகின்றார். பெண் வேடங்களில் நடனமாடி தனக்கென ஒரு முத்திரையைப் பதித்துக் கொண்டோர். பல் துறைகளில் சிறந்து விளங்கும் வன்னி மயில் க.கருணா னந்தன் தன் கலைப்பணி பற்றி மனந்திறந்து கூறியவை வலம்புரியில் பிரசுரமாகிறது.

❖ தாங்கள் நடனத் துறைக்குள் எவ்வாறு கால் பதித்தீர்கள்?

எனது தாயார் ஒரு நடனக் கலைஞர். அந்தக் காலத்தில் சதிர்கச்சேரி, சின்னமேளம் என அழைத்து வந்தனர். தற்போது தான் பரத நாட்டியம் என அழைக் கின்றார்கள். கொடிகாமத்தில் அமைந்திருக்கும் சுட்டிபுரம் அம்மன் கோவில், வல்லிபுர ஆழ்வார் கோயில்களின் திருவி ழாக் காலங்களில் சின்னமேளக் கலைஞர்கள் வந்து அத் திரு விழாவை மிகவும் திறம்பட சிறப் பிப்பார்கள். அதில் ஒருவர்தான் எனது தாயார். ''கன்னம் கறுத்த கிளி..'', '' நலந்தானா... நலந்தானா...?'' போன்ற பாடல் களுக்கு எனது தாயார் நடன மாடி பாராட்டை பெற்றிருந்தார். எனக்கு 4 வயதில் நிகழ்கால த்திற்கேற்ப முறைப்படி பரதக்க லையை கற்றுக் கொடுத்தார். அதனை நானும் விருப்புத்தோடு கற்று பல சாதனைகளைப் புரிந்தேன்.

ஆரம்பக் கல்வியை யாழ்நாகர் கோவில் மகாவித்தியாலயத்தி லும் பின் நாட்டில் ஏற்பட்ட அசா தாரண சூழ்நிலை காரணமாக 1996 ஆம் ஆண்டு இடம் பெயர்ந்து விசுவமடுவில் வாழ்ந்து வந்த போது க.பொ.த.சாதாரணம் வரை மு/பாரதி வித்தியாலத் திலும், உயர் தரத்தினை மு/ உடையார்கட்டு மகா வித்தியா லத்திலும் கற்று பல்கலைக்கழ கம் தெரிவானேன். எனது தாயார் ஒரு நடனக் கலைஞர் என்ப தால் நான் அக்கலையை நான்கு வயதில் இருந்து முறைப்படி கற்று வந்தேன். 2007 ஆம் ஆண்டு மு/தேராவில் தமிழ் வித்தியா லயத்தில் நடன ஆசிரியராக கட மையாற்றினேன். பின் 2012 ஆம் ஆண்டு சிவில் பாதுகாப்பு திணைக்களத்தில் இணைந்து கலைப் பணி ஆற்றினேன். பின் இந்தியா சென்று பல இடங்களில் கலை நிகழ்வுகளை நடத்தி பாராட்டை பெற்றேன். இதற்கு Offer நிறுவனம் உறு துணையாக இருந்ததது. நான் பரத நாட்டியம், கும்மி, கோலா ட்டம், காவடி, கரகம் போன்றன மட்டுமல்லாமல் பிறேக், டிஸ்கோ, வெஸ்ரன், பலே போன்ற நடன ங்களிலும் தேர்ச்சி பெற்று பல பட்டங்களையும் வென்றுள்ளேன். 2014 ஆம் ஆண்டு புதுக்குடி யிருப்பு பிரதேச கலை இலக்கிய விழாவில் கௌரவிப்பு நடந்தது.

சிறுகதை எழுதுவதிலும் ஆர் வமுள்ள நான் கலை வரலா ற்றில் 26 வருடங்கள் கடந்த போதிலும், தற்போது அரச தி ணைக்களமொன்றில் பணியா ற்றிவரும் நான் இலைமறை காயாக இருக்கும் பல இளம் கலை ஞர்களை உருவாக்கி வருகின்றேன்.

❖ தாங்கள் எங்கெல்லாம் சென்று நடனத்தை வழங்கி யுள்ளீர்கள்?

பாடசாலைக் காலங்களில்

நடைபெறும் ஒளிவிழா, வாணி விழா, பரிசளிப்பு விழா போன்ற நிகழ்வுகளிலும் தமிழ்த் தினப் போட் டிகளிலும் பங்கு பற்றி கோட்டம், வலயம், மாகாணம், தேசியமென சென்றமையால் 2003 ஆம் ஆண்டு அப்போதைய ஜனாதிபதியாக இரு ந்த சந்திரிகா அம்மையார் முன் னிலையில் ஆடி பரிசில்களை யும், பாராட்டையும் பெற்றேன். பின்னர் நான் தமிழீழ எழுச்சிப் பாடல்களுக்கு ஆடியுள்ளேன். 2009 ஆம் ஆண்டுக்கு முன்னர் தமிழீழத்தில் '' சங்கநாதம்'' எனும் கலைநிகழ்வில் நடனக் கலைஞ னாக நடனமாடி பலரின் பாராட் டையும் பெற்றேன். இச் சங்கநாத நிகழ்வை பார்ப்பதற்காக பல மாவ ட்டங்களில் இருந்தும் ரசிகர்கள் வரு வார்கள். 2006 ஆம் ஆண்டு தமி ழீழ தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்கள் முன்னிலையில் ''வன்னி மண்ணிலே மயில் கூத்தாடுமா? இல்லை போராடுமா?'' எனும் பாட லுக்கு நடன மாடி ''வன்னி மயில்'' எனப் பட்டம் தந்து கௌரவித்தார். 2007 இல் தமிழீழமகளிர் அரசியல் துறைப் பெறுப்பாளராக இருந்த தமிழினி அக்கா அவர்களால் ''சங்க நாத சூரியன்'', '' சிறந்த நடனக் கலைஞன்'' என கிளிநொச்சி பொன் விழா மண்டபத்தில் நடைபெற்ற விழாவொன்றில் ''விழிமடல் மூடி துயில்கின்ற வீரரே'' எனும் பாட லுக்கு ஆடி பாராட்டை யும் பட்டத் தையும் பெற்றேன். தொடர்ந்து இடத்திலும். கொழும்பு, காலி, கண்டி குறிப்பாக தாமரைத்தடாகம், பண்டாரநாயக்க ஞாபகார்த்த மண் டபம், வெள்ளவத்தை இராமகிரு ஷ்ண மண்டபம் என 25 மாவட்ட ங்களிலும் நான் ஆடியிருக்கிறேன். அத்தோடு இந்தியாவில் வேலச் சேரி, சென்னை, மதுரை, திருச்சி போன்ற இடங்க ளிலும் நடனத்தை வழங்கியுள்ளேன்.

❖ தாங்கள் ஒரு ஆணாக இருந்து கொண்டு எப்படி பெண் பாத்திர வெளிப்பாடுகளை செய்ய முடிகிறது?

எங்களுடைய பரதக் கலை வரலா ற்றில் பெண் வேடம் பூண்டு நடிக் கும் திறமை கொண்டவர் மதிப்புக் குரிய '' வீரமணிஐயர்'' அவர்கள் தான். அவரின் ஞாபகார்த்தமாக இன்றும் கூட கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் வீரமணி ஐயர் கலையரங்கு இருக்கின்றது. பரதநா ட்டியக் கலைஞர்கள் ஆண்கள் பெண் வேடம் பூண்டும் பெண்கள் ஆண் வேடம் பூண்டும் நடிக்கும் குணாசித்திர நடிப்பாங்கை கொண் டவர்களாக இருப்பார்கள், நான் மட்டும் விதிவிலக்கல்ல. நான் காத் தவராயன் சிந்துநடைக் கூத் தில் முன்மாதியாக நடித்து பாராட்டைப் பெற்றேன். பின்னர் தற்காலத்திற் கேற்ப வெஸ்ரன், பிறேக் நடனங் களில் பெண்வேடமிட்டு ஆடியுள் ளேன்.

❖ தாங்கள் பெற்ற விருது கள்? வெற்றிகள்?

2000ஆம் ஆண்டு நடனக் கலைஞன் விருது, 2003 ஆம் ஆண்டு ஜனாதிபதி முன்னிலையில் ஆடி பரிசு பெற்றமை, 2006 ஆம் ஆண்டு தமிழீழ தேவியத் தலைவர் முன்னிலையில் ஆடி ''வன்னிமயில்'' பட்டம், 2007 ஆம் ஆண்டு '' சங்கநாதம் சூரியன்'' சிறந்த நடனக் கலைஞன், 2010 ஆம் ஆண்டு அப்போதைய ஜனாதிபதி முன்னி லையில் ஆடி ''நடனமயில்'' பட்டம், 2013,2014 ஆம் ஆண்டு ''தேசத் தின் மகுடம்'' எனும் நிகழ்வின் மூலம் '' சிறந்த நடன இயக்குநர் விருது'', 2014 ஆம் ஆண்டு புதுக் குடியிருப்பு பிரதேச கலை இலக்கிய விழா கௌரவிப்பு ,2015.11.05 ஆம் திகதி தற்போதைய ஜனாதிபதி அவர்கள் கிளிநொச்சி வட்டக்கச்சிப் பகுதியில் விவசாய சம்பந்தமாக முதன் முதலாக வடமாகாணம் வந்த போது வரவேற்பு நடனமாடி பாராட்டைப் பெற்றேன். 2016. 01.09 அன்று கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் ஜனா திபதியின் ஓரா ண்டு நிகழ்வில் கலந்து கொண்டு நடனமாடி பாராட்டைப் பெற்றமை.

❖ இன்றைய நடனத்துறை யின் போக்கு எப்படி இருக்கிறது?

முன்னைய காலங்களில் பரத நாட்டியம் ஆடுபவர்களை ஏளனம் செய்தனர். 1960 ஆம் ஆண்டுகளில் பரதநாட்டியத்தை ஏளனம் செய்து சுவரொட்டிகள் ஒட்டி கொச்சைப்படு த்தினார். அதற்கு பதிலடியாக வீரம ணிஐயர், ஏரம்பு சுப்பையா, ருக் மணிதேவி அருண்டேல் போன்ற நடனப் பெரியார்கள் பதிலடி கொடு த்தனர். இன்றும் கூட பரதநாட்டிய கலை புனிதமாக பேணப்பட்டு வருகிறது.

❖ தாங்கள் வெளியீடு செய்த இறுவெட்டுக்கள் பற்றி?

நிறைய இருக்கின்றன. சுருக் கமாகச் சொல்கிறேன். அதாவது தமிழீழ காலப்பகுதியில் ''கல்லறை மேனிகள் கண் திறப்பார்களே'' பிரபாகரன் வழி நில்லு பகை பிளக் கும் புலி வீரம் வழி நின்று வெல்லு'' , ''கல்லறைக்குள்ளே இருந்து பல குரல்கள் பேசும்'', ''அழகான கலை களுள் அழியாத பரதத்தில் ஆடிடும் பாவையடி'', ''போரம்மாஉனையின்றி யாரம்மா'' போன்ற பாடல்கள் என் னால் இன்றும் மறக்க முடியாதவை.

❖ தங்களின் நடனப்பள்ளி கள் பற்றி?

என்னிடம் 380 இற்கு மேற் பட்ட கலைஞர்கள் பயிற்சி பெற்று வருகின்றனர். ஆதிபராசக்தி நடன ப்பள்ளி, ஆதவன் நடனப்பள்ளி, சத்ரங்கா நடனப்பள்ளி போன்ற பள்ளிகளை நடத்தி வருகிறேன்.

❖ கலையுலகில் தங்களால் மறக்க முடியாத அனுபவங் கள்?

நிறைய அனுபவங்கள் உள் ளன. முக்கியமானதை மட்டும் கூறுகிறேன். 2006 ஆம் ஆண்டு தேசியத் தலைவர் அவர்களால் ''வன்னி மண்ணிலே மயில் கூத் தாடுமா'' எனும் பாடலுக்கு ஆடி ''வன்னி மயில்'' பட்டம் பெற்ற போது தலைவர் அவர்கள் சொன் னார் இயற்கையாகவே இறைவன் ஆண் மயிலுக்குத்தான் தோகை யைக் கொடுத்தான். ஆகையால் அது அழகாக ஆடுகிறது. அதனை நிரூபித்து விட்டார் இவர். அதனால் இவருக்கு வன்னிமயில்எனக் கொடு க்கிறேன் என்று கூறியமை என் னால் மறக்க முடியாது. அத் தோடு 2007 ஆம் ஆண்டு இரணைமடு குளப் பகுதியில் ஒரு வீடியோ காட்சி இடம் பெற்றது.

அதாவது ''கல்லறைக் குள்ளே இருந்து பல குரல்கள் பேசும்'' எனும் பாடலுக்கு ஒளிப்பதிவு நடை பெற்றபோது திடீ ரென கிபிர் வந்து குண்டு வீசியது. அதில் நான் அதிர் ஷ்டவசமாக உயிர் தப்பி னேன். இத னையும் என்னால் மறக்க முடியாது.

❖ தாங்கள் இறுதியாக மனம் திறந்து கூறுவது

திறமைக்கு வயதெல்லை தேவை யில்லை. கலைக்கு திறமை முக்கி யம். அதனால்தான் சிறுவயதிலேபல சாதனைகளை செய்ய முடிந்தது. என்னுடைய இந்தப் பயணத்திற்கு உந்து சக்தியாக இருந்து என்னை ஊக்கப்படுத்திய பெற்றோர், ஆசா ன்கள், ரசிகர்கள் அனைவருக்கும் நன்றிகூறிக்கொள்கின்றேன். வாழ்க பரதக்கலை. வளரட்டும்கலைஞர்கள்.

நேர்காணல்:
ஜெயம் ஜெகன்

போர் வெற்றி புறக்கணிப்பு; மாவீரர் தினம் அனுஷ்டிப்பு

வடக்கு புலிகள் தேசம்!

சிங்கள மக்கள் அச்சமடைந்துள்ளனர் என்கிறார் விமல்

(கொழும்பு)

தமிழர்கள் வேதனை கொள்வார்கள் என்பதற்காக இராணுவ வெற்றி தினத்தை நிராகரித்த அரசாங்கம், ஏன் புலிகளின் மாவீரர் தினத்தை அனுமதிக்கின்றது என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச எம்.பி.கேள்வி எழுப்பினார். நாம் தேசியம் பேசவேண்டும் எனக் கூறும் நபர்கள் வடக்கில் புலிக்கொடியை பறக்கவிட்டு வடக்கை புலிகள் தேசம் என்கின்றனர். இதனால் சிங்கள மக்கள் அச்சமடைந்துள்ளனர் எனவும் அவர் தெரிவித்தார்.

புதிய அரசியல் அமைப்பு நாட்டின் பிளவின் அடித்தளம் என்ற தொனிப்பொருளில் தேசிய சுதந்திர முன்னணி நாடு பூராகவும் முன்னெடுத்து வரும் பிரசாரக் கூட்டங்களில் ஒன்று நேற்று முன்தினம் கொழும்பில் இடம் பெற்றது. இதில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

நாடு இன்று பயணிக்கும் திசையானது நாம் மகிழ்ச்சியடையும் நிலையில் இல்லை. மிகவும் மோசமானதும், பயங்கரமானதுமான விளைவுகளை ஏற்படுத்தும் வகையிலும் அமைந்துள்ளது. இங்கு நாம் தேசியம் பற்றி பேசிக்கொண்டு நல்லிணக்கம் ஒன்றை உருவாக்க வேண்டும் என கூறிக்கொண்டுள்ளோம். எனினும் வடக்கில் பிரபாகரனை கொண்டாடும் நிகழ்வுகளும், புலிகளை நினைவுபடுத்தும் சம்பவங்களும் இடம்பெற்று வருகின்றன. புலிக்கொடியை பறக்கவிட்டு வடக்கு புலிகளின் தேசம் என்பதையே தெரிவித்து வருகின்றனர்.

வடக்கில் பல்வேறு இடங்களில் சில தமிழர்கள் புலிகளை நியாயப்படுத்தி போராட்டம் செய்து வருகின்றனர். வவுனியாவில் மூவின மக்கள் கற்கும் பாடசாலைகளில் ஒருசில தமிழ் மாணவர்கள் கேக் வெட்டி கொண்டாடியினை வழங்கியுள்ளது. இராணுவ வெற்றி தினத்தை கொண்டாட வேண்டாம் என்றால் அதே நிலைப்பாட்டில் இருந்து புலிகளை அனுஷ்டிக்கப்படுவதையும் தடுக்க வேண்டும்.

ஒரு இனத்தவரை மாத்திரம் போஷிப்பதா நாட்டில் நல்லிணக்கத்தையும், ஜனநாயகத்தையும் உருவாக்கும் பாதை. புலிகளை மாத்திரம் பலப்படுத்திக்கொண்டு நாட்டின் பெரும்பான்மை மக்களை மேலும் கோபப்படுத்துவதா நல்லிணக்கத்தை உருவாக்கும் செயற்பாடு? இந்த அரசாங்கம் நாட்டில் அபிவிருத்திகளை, பொருளாதார வளர்ச்சியை உருவாக்குவதில் வெற்றிபெறவில்லை. ஆனால் நாட்டில் புலிகளை மீண்டும் உயிர்பெற வைக்கும் செயற்பாடுகளையேனும் தடுத்து நிறுத்த வேண்டும். எனினும் இன்று நாட்டில் இடம்பெற்றுவரும் செயற்பாடுகள், வடக்கில் இடம்பெற்று வரும் சம்பவங்கள் இந்த நாட்டில் மீண்டும் ஒரு ஆயுதப் போராட்டம் ஒன்றை தோற்றுவிக்கும் பாதையை உருவாக்கிச் செல்கின்றதா? என்ற சந்தேகம் எழத்தோன்றும் வகையில் அமைந்துள்ளது.

ஒருபுறம் நாட்டை பிரிக்கும் சமஷ்டி அரசியல் அமைப்பு உருவாக்கப்பட்டு வருகின்றது. சர்வதேச புலம்பெயர் அமைப்புக்களின் தேவைக்கு அமையவும் புலம்பெயர் புலி அமைப்புக்களை திருப்திப்படுத்தவும் அரசாங்கம் புதிய அரசியல் அமைப்பை உருவாக்கும் முயற்சிகளை முன்னெடுத்து வருகின்றது. மறுபுறம் இந்த நாட்டிலே இன்றும் புலிகளின் கொள்கையை ஆதரிக்கும் நபர்களின் மூலமாக மீண்டும் வடக்கில் புலிகளை உருவாக்கும் முயற்சிகள் படிப்படியாக இடம்பெற்று வருகின்றது. ஆகவே நாட்டை நேசிக்கும், ஐக்கியத்தை விரும்பும் மக்கள் இன்று தமது தவறுகளை உணர்ந்து செயற்படும் நேரம் வந்துள்ளது. ஆட்சி மாற்றத்தை ஆதரித்த 62 இலட்சம் மக்களின் நோக்கமும் நாட்டை பிரிப்பதா? அல்லது ஐக்கியத்தை விரும்புவதா? என்பதை தெரிவிக்க வேண்டும். இந்த நாட்டை ஐக்கியப்படுத்தும் போராட்டத்தில் எம்முடன் கைகோர்க்க வர வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

ஒழுக்கத்தை மீறிய கோப் குழு உறுப்பினர்களுக்கு தண்டனை

பந்துல குணவர்த்தன வலியுறுத்து

(கொழும்பு)

இலங்கை "மத்திய வங்கியின் பிணை முறி விவகாரம் தொடர்பில் சம்பந்தப்பட்ட தரப்புடன் கலந்துரையாடலை முன்னெடுத்த கோப் குழுவின் உறுப்பினர்கள் குற்றவாளிகள் சட்டத்தின் கீழ் தண்டிக்கப்பட வேண்டும்" என நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

"வரலாற்றில் என்றுமில்லாதவாறு இடம்பெற்றுள்ள குறித்த பிணைமுறி மோசடி காரணமாக நாட்டின் பொருளாதாரம் மீளமுடியாத வீழ்ச்சிக்கு சென்றுள்ளதாகவும், வட்டிவீதம் 100 வீதமாக அதிகரித்துள்ளதாகவும்" அவர் தெரிவித்தார். இதன்காரணமாக கடந்த 3 வருடங்களில் 1500-2000 பில்லியன் நட்டம் ஏற்பட்டுள்ளதாகவும் பந்துல குணவர்த்தன தெரிவித்தார். (இ-7)

கிழக்கில் அடைமழையால் இருள் மெழுகுவர்த்தி வெளிச்சத்தில் பரீட்சை எழுதிய மாணவர்கள்!

(ஏறாவூர்)

கிழக்கு மாகாணத்தில் காற்றுடன் கூடிய கடும் மழை பெய்து வருகின்றது.

இதேவேளை, பாடசாலை மாணவர்களுக்கான மூன்றாம் தவணைப் பரீட்சைகள் நடைபெற்று வருகின்றன. காலைநேரத்திலும் இருள் சூழ்ந்து காணப்படுவதால் வகுப்பறைகளும் இருளடைந்து காட்சியளிக்கின்றன.

பல பாடசாலைகளில் மாணவர்கள், மெழுவர்த்தி ஒளியிலேயே பரீட்சை எழுதி வருகின்றனர்.

குருமண்வெளி சிவசக்தி வித்தியாலய மாணவர்கள், மெழுவர்த்தி ஒளியிலேயே பரீட்சை எழுதினர். (இ-7)

பிரித்தானிய பிரதி உயர்ஸ்தானிகரும் கிழக்கு மாகாண ஆளுநரும் சந்திப்பு

(ஏறாவூர்)

கிழக்கு மாகாண ஆளுநர் ரோஹித போகொல்லாக மவிற்கும் பிரித்தானிய பிரதி உயர்ஸ்தானிகர் டொம் பேன் (TOM BURN) இடையிலான சந்திப்பொன்று நேற்று முன்தினம் பிற்பகல் ஆளுநர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இக்கலந்துரையாடலில் கிழக்கு மாகாணத்தில் அனைத்து இன மக்களின் இன நல்லிணக்கம், அபிவிருத்தி, அரசியல் பற்றி ஆளுநரிடம் வினவியதுடன் கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது ஜனாதிபதி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவுக்கு அதிகளவில் வாக்குகள் கிடைக்கப் பெற்றது. அந்த வாக்குகள் தொடர்ந்தும் இருக்கின்றதா? எனவும் பிரித்தானிய பிரதி உயரிஸ்தானிகர் கேள்வி எழுப்பினார்.

இதற்கு கிழக்கு மாகாண ஆளுநர் ரோஹித போகொல்லாகம கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம் மக்கள் பொருளாதாரத்தில் முன்னேற்ற மடைந்துள்ளனர். சுற்றுலாத் துறை, கல்வித்துறை போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு எதிர்காலத்தில் கிழக்கு மாகாணத்தை அபிவிருத்தி அடையச்செய்வதே நோக்கமாகும் எனவும் ஜனாதிபதிக்கான ஆதரவு பெருகி வருவதாகவும் கூறினார். (இ-7)

பாரதம்

முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவிற்கு பெண் குழந்தை பிறந்தது உண்மை

(பெங்களூர்)

மறைந்த தமிழக முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவிற்கு பெண் குழந்தை பிறந்தது உண்மை என ஜெயலலிதாவின் நெருங்கிய உறவினரான லலிதா என்பவர் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் பெங்களூரில் ஊடகம் ஒன்றிற்கு வழங்கிய நேர்காணலின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

எனது தாயாரான ஜெய்சிகாவின் சகோதரர் ஜெயராமின் மகளே ஜெயலலிதா. 1971ஆம் ஆண்டு ஜெயலலிதாவின் தாயார் மரணமடைந்து விட்டார். இதனால் அவர்களுடனான தொடர்பு குறைந்தது.

அதன் பின்னர் 1980 ஆம் ஆண்டு ஜெயலலிதாவிற்கு பெண் குழந்தை ஒன்று பிறந்தது. எனது பெரியம்மாவான ஜெயலக்ஷ்மியே பிரசவத்தினையும் பார்த்தார்.

அந்த சந்தர்ப்பத்தில் ஜெயலலிதா இந்த குழந்தை விடயத்தினை யாருக்கும் சொல்லக்கூடாது என சத்தியம் வாங்கிக்கொண்டார்.

அதன்பின்னர் வருடங்கள் கடந்துவிட்டன. இப்போது புதிதாக நானே ஜெயலலிதாவின் மகள் எனக்கூறிக் கொண்டு அம்ருதா என்ற பெண் வழக்கு தொடர்ந்துள்ளார்.

எனினும் அவர் ஜெயலலிதாவின் உண்மையான மகள் தானா என்பது குறித்து எனக்கு தெரியாது. ஜெயலலிதாவிற்கு குழந்தை பிறந்தது உண்மை. ஆனால் அது அம்ருதாவா என்பது மரபணு பரிசோதனையின் மூலம் மட்டுமே கண்டுபிடிக்க முடியும் எனவும் லலிதா தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பெங்களூரைச் சேர்ந்த அம்ருதா, தன்னை ஜெயலலிதாவின் மகள் என அறிவிக்க வேண்டும், ஜெயலலிதாவின் புதைத்த உடலை தோண்டி மரபணு பரிசோதனை செய்ய வேண்டும் எனவும் உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார்.

குறித்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளதோடு கர்நாடக உயர்நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்யுமாறும் நீதிமன்றம் அறிவித்ததனைத் தொடர்ந்து கர்நாடக உயர் நீதிமன்றத்தில் அம்ருதா வழக்கு தொடரவுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந் நிலையில் ஜெயலலிதாவின் நெருங்கிய உறவினரான லலிதா கூறியுள்ள தகவல்கள் காரணமாக தமிழகத்தில் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

அதன்படி ஜெயலலிதாவின் உடல் தோண்டப்படுமா? என்ற எதிர்பார்ப்பு மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது.

அதேபோன்று இந்தவிடயம் தமிழக துணை முதல்வர் பன்னீர்செல்வத்திற்கு முன்னரே தெரியுமென அம்ருதா கூறியிருந்தபோதும் இதுவரை அவரிடம் இருந்து மறுப்பு வெளிவரவில்லை என்பதோடு அதற்கு அவர் என்ன கூறப்போகின்றார் என்ற எதிர்பார்ப்புகளும் அதிகரித்துள்ளன. (இ-7)

வெடித்துச் சிதறிய இந்தோ



(ஜகார்த்தா)

தென்கிழக்கு ஆசிய நாடான இந்தோனேஷியாவின் பாலி தீவிலுள்ள, மவுன்ட் அகுங் எரிமலை, 54 ஆண்டுகளுக்கு பின், பயங்கர சத்தத்துடன் வெடித்துச் சிதறியது.

ஆயிரக்கணக்கான எரிமலைகள் உள்ள இந்தோனேஷியாவில், 120 எரிமலைகள் இன்னும் உயிர்ப்புடன் உள்ளன.

பாலி தீவில், அதிகளவில் சுற்றுலா பயணியர் வரக்கூடிய குடா பகுதி அருகே, மவுன்ட் அகுங் எரிமலை உள்ளது. 54 ஆண்டுகளுக்கு முன், இந்த எரிமலை வெடித்தபோது, 7.5 கி.மீ. தொலைவுக்கு நெருப்புக் குழம்புகள் பரவியது. அதில், 1,100 பேர் இறந்தனர்.

இந்நிலையில், சமீபகாலமாக, இந்த எரிமலை மீண்டும் குழம்பைக் கக்கத் தொடங்கியது.

கடும் சீற்றத்துடன், புகையுடன் கூடிய சாம்பல் வெளியேறியது. இதையடுத்து, எரிமலையின் சுற்றுப்பகுதியிலுள்ள, 22 கிராமங்களில் வசிக்கும், ஒரு இலட்சம் பேர், உடனடியாக வெளியேற்றப்பட்டனர்.

பாலியிலுள்ள சர்வதேச விமான நிலையத்தில் இருந்து, விமானங்கள் இரத்து செய்யப்பட்டதால், 55 ஆயிரம் சுற்றுலா பயணியர் பாதிக்கப்பட்டனர்.

நேற்று முன்தினம் இந்த எரிமலை பயங்கர சத்தத்துடன் வெடித்துச் சிதறியதில், நெருப்புக் குழம்புகள் ஆறாக பெருக்கெடுத்து, கிராமப் பகுதிகளில் பாய்ந்தன.

எரிமலை வெடித்த சத்தம், 12 கி.மீ., தொலைவுக்கு கேட்டது. இந்நிலையில், இந்தோனேஷியாவில் வசிக்கும் இந்தியர்கள் பத்திரமாக இருப்பதாகவும், அவர்களுக்காக உதவி மையம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும், வெளியுறவுத் துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜ் தெரிவித்துள்ளார். (இ-7)

உழல் வழக்

இளவரசர் மி

(ஜெட்டா)

உழல் வழக்கில் கைது செய்யப்பட்ட சவுதி இளவரசர் மிதெப்பின் அப்துல்லா விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

மன்னராட்சி நடைபெற்று வரும் சவுதி அரேபியாவில் அமைச்சர்கள் உட்பட பல முக்கிய பொறுப்புகளை அரச குடும்பத்தினரே வகித்து வந்தனர். மன்னர் சல்மானின் மகனான முகம்மது பின் சல்மான் பட்டத்து இளவரசராக பொறுப்பேற்றதும் சில

லஷ்கர் – இதொய்பாவின் தீவிர ஆதரவாளன் நான்

முஷரப் பரபரப்பு பேட்டி

(டுபாய்)

எல்லையோரத்தில் இந்திய படைகளுக்கு அச்சுறுத்தலாக இருக்கும் லஷ்கர் இ தொய்பா தீவிரவாத இயக்கத்தின் தீவிரவாத ஆதரவாளர் நான் என பாகிஸ்தான் முன்னாள் ஜனாதிபதி முஷரப் தெரிவித்துள்ளார்.

மும்பை தொடர் குண்டு வெடிப்பு தாக்குதலில் மூளையாக செயற்பட்டு 166 பேரின் இறப்புக்கு காரணமான லஷ்கர் இ தொய்பா தீவிரவாத இயக்கத்தின் தலைவனும், அமெரிக்க அரசால் தேடப்படும் சர்வதேச தீவிரவாதியாக அறிவிக்கப்பட்டு தலைக்கு ஒரு கோடி டொலர் பரிசு அறிவிக்கப்பட்டவனுமான ஹபிஸ் சயீத் வீட்டுச் சிறையில் இருந்து அண்மையில் விடுவிக்கப்பட்டான்.

இந்நிலையில், டுபாய் நாட்டில் அரசியல் தஞ்சம் அடைந்துள்ள பாகிஸ்தான் முன்னாள்ஜனாதிபதிபர்வேஸ் முஷரப் பிரபல செய்தி நிறுவனம் ஒன்றுக்கு பேட்டியளித்துள்ளார். ஹபிஸ் சயீத் தொடர்பான செய்தியாளர்களின் கேள்விக்கு பதிலளித்த முஷரப் நான் லஷ்கர் இ தொய்பாவின் தீவிர ஆதரவாளர் என்று தெரிவித்துள்ளார்.

லஷ்கர் இ தொய்பா என்பது ஆற்றல் வாய்ந்த பெரிய அமைப்பு. அமெரிக்காவுடன் கைகோர்த்து கொண்ட இந்தியா லஷ்கர் இ தொய்பா இயக்கத்தினரை தடை செய்யப்பட்ட தீவிரவாத அமைப்பாக அறிவித்து தடை விதிக்க வைத்தது.

காஷ்மீர் விவகாரத்தில் லஷ்கர் இ தொய்பா அமைப்பினரின் தலையீடு உள்ளது. அது இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான பிரச்சினை. ஜம்மு-காஷ்மீரில் இந்திய படைகளுக்கு சவால் விடும் வகையில் செயற்பட்டுவரும் லஷ்கர் இ தொய்பா அமைப்பையும், அதன் கிளை அமைப்பான ஜமாத்உத்தாவா அமைப்பையும், அதன் தலைவர் ஹபிஸ் சயீதையும் நான் பலமாக ஆதரிக்கிறேன். இதேபோல், அவர்களும் என்னை விரும்புகிறார்கள் என்பது எனக்கு தெரியும் என அவர் தெரிவித்தார்.

உங்கள் ஆட்சி காலத்தில்தான் லஷ்கர் இ தொய்பா தீவிரவாத அமைப்பாக அறிவிக்கப்பட்டு தடை செய்யப்பட்டது என்பதை நினைவுபடுத்திய நிருபரின் கேள்விக்கு 'அது வேறொரு சூழலில் எடுக்கப்பட்ட முடிவு' என முஷரப் பதிலளித்துள்ளார். (இ-7)

ரோஹிஞ்யா விவகாரத்தில் பா

ஒக்ஸ்போர்ட் சுதந்திர

ஆங் சான் சூகியிடமிருந்து

(லண்டன்)

மியன்மாரின் வடக்குப் பகுதியான ரக்கினே மாநிலத்தில் சிறுபான்மை ரோஹிஞ்யா இன முஸ்லிம்கள் அதிகளவில் வாழ்ந்து வருகின்றனர். பங்களாதேஷ் நாட்டில் இருந்து குடிபெயர்ந்து மியன்மாரில் பத்து இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் தொகையை கொண்டவர்களாக இருக்கும் இவர்களில் சிலர், கடந்த 2012ஆம் ஆண்டில் இருந்து ஆட்சியாளர்களின் ஒடுக்குமுறைக்கு எதிராக ஆயுதம் தாங்கிய போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

மியன்மாரில் ராணுவ நடவடிக்கைகள் தொடங்கிய நாளில் இருந்து சுமார் 6 இலட்சம் ரோஹிஞ்யா முஸ்லிம்கள் அங்கிருந்து வெளியேறி அண்டைநாடான பங்களாதேஷத்தில் அகதிகளாக தஞ்சம் அடைந்துள்ளனர். ரக்கினே மாநிலத்துக்குள் பத்திரிகையாளர்கள்செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளது. பலகாலமாக மியன்மாரின் ஆட்சியை கைப்பற்றி வைத்திருந்த ராணுவம் ஆட்சியாளர்களின் கட்டளைக்கு கீழ்ப்படிய மறுத்து இஸ்லாம் மதத்தினரான ரோஹிஞ்யா மக்கள் மீது அடக்குமுறையை பயன்படுத்தி வருவதாக பல நாடுகள் குற்றம் சாட்டியுள்ளன.

மியன்மாரில் ரோஹிஞ்யா முஸ்லிம்கள் மீது ராணுவம் நடத்திவரும் ஒடுக்குமுறைகளுக்கு ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் அந்தோனியோ குற்ரேரஸ் கண்டனம் தெரிவித்தார். ரோஹிஞ்யா முஸ்லிம்களுக்கு மியன்மார் அரசு சட்ட அங்கீகாரம் வழங்க வேண்டும் எனவும் அவர்

வெளிநாடு

...ானேஷிய எரிமலை



மியன்மார் அரசு பல சவால்களுக்கு முகங்கொடுத்துள்ளது - சூகி கவலை

(ரங்கூன்)

மியன்மார் நாட்டு அரசாங்கம் பல சவால்களுக்கு முகங்கொடுத்துள்ளதாக, மியன்மாரின் தேசிய ஆலோசகரும் சமாதானத்துக்கான நோபல் பரிசு பெற்றவருமான ஆங்சான் சூகி தெரிவித்துள்ளார்.

மியன்மாருக்கு விஜயம் செய்துள்ள பாப்பரசர் பிரான்சிஸை வரவேற்கும் நிகழ்வு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே, மியன்மாரின் தேசிய ஆலோசகரும் சமாதானத்துக்கான நோபல் பரிசு பெற்றவருமான ஆங்சான் சூகி மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றியபோது, மியன்மாரின் ராஹினி மாநிலத்தில் நிலவும் வன்முறை சர்வதேச சமூகத்தின் கவனத்தையீர்த்துள்ளது.

இந்நிலையில் எமது அரசாங்கம் பல சவால்களுக்கு முகங்கொடுத்துள்ளது என்றார்.



மேலும், ராஹினி மாநிலத்திலுள்ள பல்வேறு சமூகங்களுக்கிடையில் காணப்பட்டுவந்த புரிந்துணர்வு, ஒத்துழைப்பு, நம்பிக்கை, நல்லிணக்கம் ஆகியவை அரசியல், பொருளாதார சமூக ரீதியாக அழிக்கப்பட்டுள்ளன எனவும் அவர் கவலையுடன் தெரிவித்தார். (இ-7)

...ழக்கில் கைது செய்யப்பட்ட ...மிதெப்பின் அப்துல்லா விடுவிப்பு

அதிரடி நடவடிக்கைகளை எடுத்தார். அரச குடும்பத்தினரே ஊழலில் ஈடுபட்டாலும் கடும் தண்டனை இருக்கிறது என அவர் அறிவித்தார்.

இந்நிலையில், பட்டத்து இளவரசர் முகம்மது பின் சல்மான் தலைமையில் ஊழல் தடுப்பு ஆணையகம் அமைக்கப்பட்டுள்ளதாக மன்னர் அறிவித்தார்.

இந்த அறிவிப்பு வெளியான சில மணி நேரங்களிலேயே உலக முன்னணி கோடீஸ்வரர்களில் ஒருவரான அல்வாலித் பின் தலால் உள்ளிட்ட 11 இளவரசர்கள் கைது செய்யப்பட்டனர். கைது செய்யப்பட்ட மற்ற இளவரசர்களில் பலர் முக்கிய துறைகளை வகிக்கும் அமைச்சர்களாக இருந்து வந்தனர். தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையில் 200க்கும் மேற்பட்ட முக்கிய பிரமுகர்கள் கைது செய்யப் பட்டனர்.

இந்த நிலையில், இளவரசர் மிதெப்பின் அப்துல்லா சுமார் 3 வாரங்களுக்கு பின் நேற்று சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளார். (இ-7)

அடங்க மறுக்கும் வடகொரியா மீண்டும் ஏவுகணைச் சோதனை

(பியாங்யாங்)

கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணை சோதனையை வடகொரியா நேற்று மீண்டும் நடத்தியுள்ளது. இது ஜப்பான் கடற்பகுதியில் விழுந்ததால் பெரும் பதற்றம் ஏற்பட்டுள்ளது.

வடகொரியாவும், தென் கொரியாவும் நிரந்தர பகை நாடுகளாக இருந்து வருகின்றன.

வடகொரியா, தன் அணு ஆயுதப் பலத்தை நிரூபிக்கும் வகையில், பசுபிக் பெருங் கடலில், தொடர்ந்து ஏவுகணை சோதனை நடத்தி வருகிறது. தென் கொரியாவுக்கு ஆதரவாக அமெரிக்கா செயற்பட்டு வருகிறது. இதனால் அமெரிக்காவுடன் வடகொரியா மோதல் போக்கில் ஈடுபட்டுள்ளது.

இந்நிலையில் கண்டம் விட்டு கண்டம் பாயும் சக்தி வாய்ந்த ஏவுகணையை வடகொரியா சோதனை செய்துள்ளது.

இந்த ஏவுகணை ஜப்பான் கடற்பகுதியில் விழுந்ததால் பெரும் பதற்றம் ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் வடகொரியா ஏவுகணைச் சோதனை நடத்தியது உண்மைதான் என பென்டகன் உறுதிப்படுத்தியுள்ளது.

ஐ.நா., மற்றும் உலக நாடுகள் பலவற்றின் எதிர்ப்பையும் மீறி, வடகொரியாவின் இந்த தொடர் ஏவுகணைச் சோதனைக்கு அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் உள்ளிட்ட தலைவர்கள் பலரும் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர். (இ-7)

சசிகலா - தினகரன் நேற்று சந்திப்பு

(பெங்களூர்)

பெங்களூர் சிறையில் சசிகலாவை டிடிவி தினகரன் மற்றும் அவரது குடும்பத்தினர் சந்தித்து பேசினர்.

சொத்துக் குவிப்பு வழக்கில் 4 ஆண்டுகள் சிறைத்தண்டனை பெற்ற சசிகலா பெங்களூர் பரப்பன அக்ரஹார சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

ஆர்.கே.நகர் தேர்தல் திகதி அறிவிக்கப் பட்டுள்ள நிலையில், சசி கலாவை டி.டி.வி.தினகரன் நேற்று

சந்தித்து பேச முடிவு செய்தார். இதற்காக பரப்பன அக்ரஹார சிறை அதிகாரியிடம் அனுமதி பெறப்பட்டது.

இதையடுத்து, நேற்றுக் காலை தினகரன் சென்னை பெசன்ட் நகரில் உள்ள வீட்டில் இருந்து காரில் பெங்களூர் புறப்பட்டார். பள்ளிகொண்டா, ஆம்பூர், ஓசூர் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் வழி நெடுக அவருக்கு அவரது ஆதரவாளர்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர்.

பெங்களூர் சென்ற டிடிவி தினகரன் நேற்றுப் பிற்பகலில் சசிகலாவை சந்தித்து பேசினார். அவருடன் டாக்டர் வெங்க டேஷ், இளவரசியின் மகன் விவேக், மருமகள் கீர்த்தனா, மகள் ஷகிலா, மருமகன் ராஜராஜன் உள்ளிட்டோர் சந்தித்து பேசினர். (இ-7)

...ம் பாராமுகம் ...ர விருது ...ந்து பறிப்பு



வலியுறுத்தினார்.

பங்களாதேஷத்தில் அகதிகளாக தஞ்சம் அடைந்துள்ள ரோஹிஞ்யா மக்களை திரும்பப்பெற மியன்மார் அரசு சம்மதம் தெரிவித்துள்ள நிலையில் இதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் தொடங்கியுள்ளதாக பங்களாதேஷ் நாட்டின் வெளியுறவுத்துறை அமைச்சர் மஹ்மூத் அலி கடந்த மாதம் அறிவித்தார்.

பிலிப்பைன்ஸ் தலைநகர் மணிலாவில் நடைபெற்ற ஆசியான் உச்சி மாநாட்டுக்கு இடையில் மியன்மார் அரசின் தலைமை ஆலோசகரும், அமைதிக்கான நோபல் பரிசு பெற்ற வருமான ஆங் சான் சூகியை ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் அந்தோனியோ குற்ரேரஸ் சந்தித்தார்.

ரக்கினே மாநிலத்தில் உள்ள மக்களுக்கு மனிதநேய அடிப்படையிலான உதவிகள் சென்று சேருவதை உறுதிப்படுத்த வேண்டும். ரோஹிஞ்யா மக்கள் பாதுகாப்பாகவும், கண்ணியத்துடனும் வாழ்வதற்கான வழிவகைகள் ஏற்படுத்தி தரப்பட வேண்டும் என ஆங் சான் சூகியிடம் அந்தோனியோ குற்ரேரஸ் வலியுறுத்தியதாக ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் அலுவலகம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதேபோல் அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் ரெக்ஸ் டில்லர்சன் சமீபத்தில் ஆங் சான் சூகியை சந்தித்து இதே கோரிக்கையை வலியுறுத்தினார். உலகம் முழுவதும் வாழும் கத்தோலிக்க கிறிஸ்தவர்களின் தலைமை மதகுருவான போப்பிரான்சிஸ் தற்போது இவ்விவகாரம் தொடர்பாக ஆலோசனை நடத்துவதற்காக மியன்மார் நாட்டுக்கு வந்துள்ளார்.

இந்நிலையில், மியன்மார் நாட்டில் ரோஹிஞ்யா முஸ்லிம்களுக்கு எதிரான ஒடுக்குமுறை விவகாரத்தில் பாராமுகமாக இருந்த அந்நாட்டு அரசின் தலைமை ஆலோசகர் ஆங் சான் சூகியின் ஒக்ஸ்போர்ட் சுதந்திர விருது பறிக்கப்பட்டது.

இதுதொடர்பாக, நேற்று முன்தினம் நடைபெற்ற ஒக்ஸ்போர்ட் நகர குழுக் கூட்டத்தில் 1997-ம் ஆண்டு ஆங் சான் சூகிக்கு அளிக்கப்பட்ட ஒக்ஸ்போர்ட் (Freedom of Oxford award) விருதினை பறிக்கும் தீர்மானத்துக்கு ஒருமனதாக ஒப்புதல் அளிக்கப்பட்டது.

இதுதொடர்பாக, ஒருமனதாக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் கூறப்பட்டுள்ளதாவது.

மியன்மார் நாட்டின் சிறுபான்மை இனத்தவர்களான ரோஹிஞ்யா மக்கள் மீதான ஒடுக்குமுறைக்கு எதிராக நடவடிக்கை எடுக்க தவறியதால் ஆங் சான் சூகிக்கு அளிக்கப்பட்ட ஒக்ஸ்போர்ட் நகரின் மிக உயரிய கௌரவத் துக்குரிய விருதினை பறிக்க தீர்மானிக்கப்படுகிறது. இதன் மூலம் ரோஹிஞ்யா மக்களுக்கான நீதி மற்றும் மனித உரிமைகளுக்கு ஆதரவாக நமது சிறிய குரலை பதிவு செய்துள்ளோம்.

முன்னர் மியன்மார் நாட்டில் நடைபெற்ற ராணுவ ஆட்சிக்கும் ஒடுக்குறைக்கும் எதிராக வெகுண்டெழுந்த சகிப்புத்தன்மை மற்றும் உலகமயம் தொடர்பான பிரதிபலிப்புகள் ஆங் சான் சூகியிடம் காணப்பட்டதால் இந்த விருது அவருக்கு அளிக்கப்பட்டது.

ரோஹிஞ்யா மக்கள் வசித்துவந்த கிராமங்களில் உள்ள வீடுகள் தீக்கிரையாக்கப்பட்ட காட்சிகள் செயற்கைக் கோள் படங்கள் மூலம் கிடைத்துள்ளன. இந்த நடவடிக்கையை இன அழிப்புக்கான உதாரணமான பாடப் புத்தகம் என ஐக்கிய நாடுகள் சபை குறிப்பிட்டுள்ளது.

ஆனால், இந்த குற்றச்சாட்டுகளை எல்லாம் மறுத்து வரும் ஆங் சான் சூகி, ரோஹிஞ்யா இனப் பெண்களுக்கு எதிராக கட்டவிழ்த்து விடப்பட்ட பாலியல் வன்முறை சம்பவங்களையும் பொய்க் குற்றச்சாட்டு எனக் கூறி வருகிறார்.

வன்முறைக்கு எதிராக பாராமுகமாக இருப்பவர்களை கௌரவிப்பதால் பன்முகத் தன்மை கொண்ட மக்கள் வாழும் ஒக்ஸ்போர்ட் நகரின் நீண்டகால பாரம்பரியம் மற்றும் நமது நன்மதிப்புக்கு களங்கம் நேரிடும் என்பதால் ஆங் சான் சூகிக்கு முன்னர் அளிக்கப்பட்ட ஒக்ஸ்போர்ட் சுதந்திர விருது பறிக்கப்படுகிறது.

இவ்வாறு அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-7)

படஜெட்டை தோற்கடிக்க வேண்டும்

சு.கவுக்கு மகிந்த அணி நிபந்தனை

(கொழும்பு)

உள்ளூராட்சித் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைந்து போட்டியிடுவதனால் ஐ.தே.கவுடனான கூட்டு அரசாங்கத்தை விட்டு வெளியேறி வரவு-செலவுத் திட்டத்திற்கு எதிராக வாக்களிக்க வேண்டும் என்ற நிபந்தனையை விதித்துள்ளது மகிந்த ராஜபக்ஷவின் தலைமையிலான கூட்டு எதிரணி.

இது தொடர்பாக கூட்டு எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர் காமினி லொக்குகே கருத்து வெளியிடுகையில்,

"ஐ.தே.கவுடன் கூட்டு அரசாங்கத்தில் இருந்து கொண்டு, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி உள்ளூராட்சித் தேர்தலில் கூட்டு எதிரணியுடன் இணைந்து போட்டியிட முடியாது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் பேசுவதற்கு நாங்கள் குழுவொன்றை அமைத்துள்ளோம். ஆனாலும், இவை எமது நிபந்தனைகள்.

இந்த நிபந்தனைகளுக்கு அவர்கள் இணங்காவிடின், ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி ஊடாக கூட்டு எதிரணி, உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடும்.

கூட்டு எதிரணியின் நாடாளுமன்றக் குழுக் கூட்டத்திலேயே இந்த நிபந்தனைகள் குறித்து முடிவெடுக்கப்பட்டது" என்றும் அவர் தெரிவித்துள்ளார். (இ-7)

ஐ.தே.கவினர் வெளிநாடு செல்லத் தடை

பிரதமர் ரணில் கண்டிப்பான உத்தரவு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் யாரும் வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொள்ளக் கூடாது என்று அந்தக் கட்சியின் தலைவரான பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உத்தரவிட்டுள்ளார்.

எதிர்வரும் டிசெம்பர் 9ஆம் திகதி நாடாளுமன்றத்தில் 2018ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட இறுதி வாக்கெடுப்பு நடத்தப் படவுள்ளது.

இந்த வாக்கெடுப்பு முடியும்வரையில் ஐ.தே.க அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் எவரும் வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொள்ளக் கூடாது என்று ரணில் விக்கிரமசிங்க உத்தரவிட்டுள்ளார்.

முன்னரே விடுக்கப்பட்டிருந்த அதிகாரபூர்வ அழைப்புகளை ஏற்றுக் கொண்டிருந்தாலும் கூட, இந்தக் காலப் பகுதியில் வெளிநாடு செல்வதற்கு அமைச்சர்களோ நாடாளுமன்ற உறுப்பினர்களோ அனுமதிக்கப்படமாட்டார்கள்.

நாடாளுமன்ற வளாகத்தில் நடந்த ஐ.தே.கவின் நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் ரணில் விக்கிரமசிங்க இந்த கண்டிப்பான உத்தரவை பிறப்பித்துள்ளார்.

கூட்டு எதிரணியினருடன் இணைந்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினர் வரவு-செலவுத் திட்டத்தை தோற்கடிக்கும் வாய்ப்புகளை இல்லாமல் செய்யும் நோக்கிலேயே, பிரதமர் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார். (இ-7)

ஜனாதிபதிகள் எதிர்பாராத சந்திப்பு

(சிங்கப்பூர்)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும், தென்கொரிய ஜனாதிபதி மூன் ஜா-இன்னும் நேற்று முன்தினம் எதிர்பாராத வகையில் திடீரென சந்தித்தனர்.

தென்கொரிய ஜனாதிபதியின் அழைப்பின் பேரில், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மூன்று நாட்கள் பயணமாக நேற்று முன்தினம் காலை சிங்கப்பூரைச் சென்றடைந்தார்.

இந்த நிலையில் ஜனாதிபதி மைத்திரிபால நேற்று முன்தினம் சிங்கப்பூரில் உள்ள பௌத்த ஆலயத்தில் வழிபாடு செய்யச் சென்றிருந்தார்.

அங்கு வந்திருந்த தென்கொரிய ஜனாதிபதி ஜனாதிபதி மைத்திரியை எதிர்பாராத முறையில் வரவேற்றார்.

இதையடுத்து இரு தலைவர்களும் இணைந்து வழிபாடுகளை மேற்கொண்டது

டன் பௌத்த விக்குகளுடனும் கலந்துரையாடினர். (இ-7)

மகிந்த-மைத்திரி அணிகளை இணைக்கும் பேச்சு தோல்வி

(கொழும்பு)

உள்ளூராட்சித் தேர்தலில் இணைந்து போட்டியிடுவது தொடர்பாக மகிந்த அணியிலிருந்து, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி நேற்று முன்தினம் நடத்திய பேச்சுக்களும் தோல்வியில் முடிந்துள்ளன.

உள்ளூராட்சித் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியில் தனித்தும் போட்டியிடுவதற்கான ஏற்பாடுகளில் மகிந்த ராஜபக்ஷ அணியினர் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். பல்வேறு மாவட்டங்களில் அவர்கள் கட்டுப்பணத்தைச் செலுத்தி வேட்புமனுவுக்கான விண்ணப்பங்களையும் பெற்றுள்ளனர்.

அதேவேளை, மகிந்த அணியினரையும் இணைத்து உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிட வைப்பதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சித் தலைவர்கள் முயற்சிகளை மேற் கொண்டுள்ளனர்.

அமைச்சர் சுசில் பிரேம ஜெயந்த உள்ளிட்ட அமைச்சர்கள் இந்த முயற்சிகளில் ஈடுபட்டனர்.

ஏற்கனவே நடத்தப்பட்ட முதல்சுற்று பேச்சுக்களில் இணக்கப்பாடு எட்டப்படாத நிலையில் நேற்று முன்தினம் மீண்டும் ஒரு பேச்சு நடத்தப்பட்டது.

நாடாளுமன்ற வளாகத்தில் நடத்தப்பட்ட இந்தப் பேச்சும் தோல்வியில் முடிந்துள்ளது.

இந்தக் கூட்டத்தில் இணைந்து போட்டியிடுவது தொடர்பாக எந்த முடிவும் எட்டப்படவில்லை.

இந்தப் பேச்சுக்கு கூட்டு எதிரணி தரப்பில் தலைமை தாங்கிய மகிந்த யாப்பா அபேவர்த்தன, அடுத்த சுற்றுப் பேச்சுக்களை நடத்துவது குறித்து எந்த முடிவும் எடுக்கப்படவில்லை என்று தெரிவித்துள்ளார். (இ-7)

இன்று ஒரு தகவல்

முகத்திற்கு நேரே கேட்டால்?

என்னைப் பற்றி அப்படிச் சொன்னீர்களாமே? என்று எவராவது முகத்திற்கு நேரேயும் நேருக்கு நேரும் கேட்டால் அதை எத்தனை பேரால் தாங்கிக் கொள்ள முடியும்? எத்தனை பேரால் அதை சமாளிக்க முடியும்?

மாறாக என்னைப் பற்றி ரொம்பத் தப்பாப் போசியிருக்காரு. இவர் மட்டும் ரொம்ப ஒழுங்கா என்ன? என்று நம்மை நன்கு அறிந்த வட்டத்தில் ஒரு பத்துப் பேரிடத்தில் நம்மைப்பற்றி ஒருவர் குறைபட்டுக் கொண்டாலும் நாம் அதைக் கேட்டுக்கெண்டு சும்மா இருக்கத் தயாராக இருக்கிறோம்.

ரொம்ப சந்தோசம். இப்படி நேரடியாகக் கேட்டதற்கு. அங்கே சொல்லி இங்கே சொல்லிப் புலம்புவதைவிட, இது எவ்வளவோ பரவாயில்லை. உங்களோட துணிவையும் நேர்மையையும்-நான் ரொம்பவும் பாராட்டுறேன் என்கிற வசனத்தை எத்தனை முறை உண்மையாகப் பேசியிருக்கிறோம்? கிடையவே கிடையாது அல்லது மிகக் குறைவு.

காரணம் நமக்கு எதிரான விடயங்களை நேரடியாக எதிர்கொள்ளும் மனத் துணிவோ திடமோ திட்பமோ நமக்கு அறவே இருப்பதில்லை.

இச் செய்தி வேறு யார் மூலமாக வந்தாலும் சரி எத்தனை பேர் மூலமாக வந்தாலும் சரி அப்படியா சொன்னார்? என்று கொஞ்சமும் கவலைப்படாமல் கேட்டுக் கொள்வோம்.

இருவருக்குள் முடிந்துபோயிருக்க வேண்டிய ஒரு விடயம். இப்படி நம் வட்டாரமெல்லாம் பரவுகிறதே என்கிற கவலை நம்மில் பலருக்கு அறவே இல்லை. மாறாக 90 டிகிரி கோணத்தில் நாம் கிளப்பிவிட்ட அந்த வீணான விவகாரத்தைச் சந்திக்க நமக்கு திராணி இருப்பதில்லை.

எதையும் நேருக்கு நேர் கேட்டுக் கொள்ள ஒரு தனிப் பெருந்தன்மை வேண்டும். இது நம்மில் நூற்றுக்கு 90 பேரிடம் அறவே இல்லாத- ஆனால் மாபெரும் மனச்சொத்து.

அவசரப்பட்டு ஏதாவது பேசி விட வேண்டியது. அப்புறம் அதை எதிர்கொள்ள முடியாமல் ஓடி ஒளிவது. இவை நமக்கு ரொம்பவும் வாடிக்கையாகிவிட்ட விடயங்கள்.

எதையும் நேருக்கு நேர் கேட்பதைத்தான் அவர் விரும்புவார். சுற்றி வளைத்து அணுகுவது அவருக்கு பிடிக்கவே பிடிக்காது என்கிற கருத்து நம்மைப் பற்றிப் பரவ வேண்டும். இதற்கெல அவரவர் ஓர் ஐந்தாண்டுத் திட்டமே போடலாம்.

இப்படித் திட்டமிட்டுச் செயற்படுவதன் மூலம் இரண்டு நன்மைகள் விளையும்.

நம்மைப பற்றிய அநாவசிய விமர்சனங்கள் எழ வாய்ப்பு இல்லாமல் போய்விடும்.

இதைவிடப் பெரிய நன்மை என்னவென்றால், எதையெல்லாம் நாம் எதிர்கொள்ளத் தயாராக இருக்கிறோமோ அந்த விடயங்களைப் பற்றி மட்டுமே பேசக் கூடிய நேர்மையும் துணிவும் நம்மையுமறியாமல் நமக்குள் சேர்ந்து விட்டிருக்கும்!.

லெனோ தமிழ்வாணன்

பகவத்கீதையில் பல உருவ வழிபாடு குறித்து பகவான் பகர்வது என்ன?

இன்று பகவத்கீதை ஜெயந்தி தினமாகும். அதாவது இற்றைக்கு 5000 வருடங்களுக்கு முன்பு பகவான் கிருஷ்ணர் குருஷேத்திரப் போர்க் களத்தில் அர்ஜுனனுக்கு கீதையை உபதேசம் செய்த தினம் இன்றாகும். இதேவேளை சின்மயா மிஷனின் பரம பூஜ்ய குரு சுவாமி தபோவன் மகராஜ் அவர்களின் ஜெயந்தியும் இதே தினத்தில் அமைந்துள்ளது.

வேத சாஸ்திரங்களில் ஒரு பகுதியான இதிகாசங்களில் மகாபாரதம் முக்கிய இடம் வகிக்கின்றது.இது ஐந்தாவது வேதம் எனப் போற்றப்படு கின்றது. இதனை இற்றை க்கு 5000 வருடங்களுக்கு முன்னர் வேதவியாசர் எனப் போற்றப்படும் பாதராயணர் அவர்கள் தொகுத்து அருளி யுள்ளார். இது ஒரு இலட்சம் சுலோகங்களைக் கொண்ட ஓர் சிறந்த இதிகாசமாகும். இதனைவியாசபகவான்தொகு த்து வழங்க விநாயகப் பெரு மான் தனது ஒரு தந்தத்தை முறித்து அதனை எழுத்தா ணியாகப் பாவித்து எழுதினார் என வரலாறு கூறுகின்றது.

மகாபாரதத்தின் மத்தியில் 18 அத்தியாயங்களையும் 700 சுலோகங்களையும் கொண்ட தாக பகவத்கீதை அமைந்துள் ளது.

மகாபாரதத்தில் பாண்ட வர்களுக்கும் கௌரவர்களு க்கும் அதாவது தர்மத்துக்கும் அதர்மத்துக்கும் இடையில் போர் மூண்டது.

குருஷேத்திரம் எனும் இடத் தில் நடைபெற்ற இந்த போர்க் களத்தில் பாண்டவர்களில் சிறந்த வில்வீரனான அர்ஜு னன் எதிர்த்தரப்பினரின் படைப் பலம் மற்றும் இங்கு போரிட முன் வந்திருக்கும் குரு, பிதா மகர், பீஷ்மர் மற்றும்உறவினர் களைக் கண்டு மனந்தளர்ந்து சோர்வடைந்தான். இதனை கண்ணுற்ற அர்ஜுனனின் தேரோட்டியான பகவான் கிருஷ்ணர் அவனது சோர்வைப் போக்கி உற்சாக மூட்டுவதற் காககூறப்பட்ட அறிவுரை களே பகவத் கீதையாகும். பகவா னால் கீதை உருவில் கூற ப்பட்டதால் பகவத்கீதை என் றும் பெயர் பெற்றது.

இந்த உபதேச மொழிகள், சஞ்சயன் என்பவர், தமக்கு வியாச பகவான் அருளிய ஞானதிருஷ்டியினால்குருஷே த்திரத்தில் நடைபெறுவதைப் பார்த்து துரியோதனனின் தந் தையாரான (அந்தகன்) திருத ராஷ்டினனுக்கு கூறியதாக அமைந்துள்ளது. அதாவது அர்ஜுனனுக்கும் பகவானுக் கும் இடையில் நடந்த சம்பாஷ ணையை சஞ்சயர் திருதராட் டினனுக்கு கூறியுள்ளதாக அர்ஜுனனின்நிலையில் செய் வதறியாது கலங்கி நிற்கும் சகல மக்களுக்கான உபதே சமாக அமைந்துள்ளது.

இதில் பகவானை உணரா மல் பல உருவ வழிபாடுகள் செய்யும்மக்கள்குறித்துஅர்ஜு னன் எழுப்பிய கேள்விக்கும் பகவான் விடை பகர்கின்றார். அவற்றை தொடர்ந்து பார்ப் போம்.

பல உருவ வழிபாடு

உலகளாவியரீதியில்இந்து க்கள், எங்கும் நிறைந்த பரம் பொருளை (நிர்க்குண நிரா காரப் பிரம்மத்தை) தத்தமக்கு விருப்பமான உருவங்களில் (சகுண சாகாரப்பிரம்மமாக)வழி பாடாற்றி வருகின்றனர். உதார ணமாக சிவன், சக்தி, விநாய கர், முருகன், மகாவிஷ்ணு, சூரியன் போன்ற வடிவங்க ளில் வழிபாடாற்றுகின்றனர். அவ்வாறே வெவ்வேறு சமயத் தினரும் தத்தமது மத ஸ்தாப கர்களைபுத்தர், யேசு, அல்லா என வழிபடுகின்றனர். இது குறித்து எல்லாம் பரமாத்மா தான் என்பதை ஏன் மக்கள் புரிந்து கொள்கின்றார்கள் இல்லை? என்ற அர்ஜுனனின் கேள்விக்கு பகவான் பகரும் விடைபகவத்கீதையின்ஏழாம் அத்தியாயத்தில் காணப்படு கின்றது.

அதாவது உலகியலில்நிரந் தரமற்றஆசைகளினால்அலை க்களிக்கப்பட்டு புலனின்பங் களுக்கு அடிமையாக வாழும் மனிதர்களால் உண்மையை உணர முடிவதில்லை. அவர் கள் தத்தமது ஆசைகளை நிறைவேற்றும் பொருட்டு அந் நிய தேவதைகளை வணங்கி பூஜை வழிபாடுகள் மற்றும் யாகங்கள் போன்றவற்றை செய்கின்றார்கள். அதனால் அவர்கள்தம்தற்காலிகதேவை களை நிறைவேற்றவும் செய் கின்றனர். இதற்குக் காரண மான தேவதைகளுக்கு அவர் களதுதேவைகளை நிறைவேற் றும் சத்தியைக் கொடுப்பவ னும் நானே என்று கூறியுள் ளார். அதுமட்டுமன்றி அம் மனிதர்களுக்கு அத் தேவதை கள் மீதான சிரத்தையை அசையாததாகவும் செய்கின் றேன் என்றும் கூறியுள்ளார். இது குறித்துச் சுவாமி சின்ம

யானந்தர் அவர்கள் எழுதிய விளக்கவுரையில் கூறியுள் ளதைப் பார்ப்போம்.

எல்லோரும் ஒரே உருவ த்தில் இறைவனை வணங்கு வதில்லை என்பது தெரிந்ததே. அவரவர்களுக்கு விருப்பமான உருவங்களில் வணங்குகின் றார்கள். கோயில்களிலும் மசூ திகளிலும் குடிசைகளிலும் குகைகளிலும்அங்கிங்கெனாத படி எங்கும் சிரத்தையுடன் வழிபடுகின்றார்கள். யாராயி ருந்தாலும் அவர்களுடைய சிரத்தையை நான் கலங்கா உறுதி பெறச் செய்கின்றேன் என்று கிருஷ்ணர் கூறுகின் றார். கீதையின்கருத்தைஉண் மையாகப் பின்பற்றுபவர்க ளுக்குகுறிப்பமதவேற்றுமை கள் இருக்க முடியாது. வேறு உருவங்களில்கடவுளை வழிப டுபவர்களைக் கண்டு ஆத் திரங் கொள்ளமாட்டார்கள். எந்தஉருவத்தில்சிரத்தையுடன் இறைவனை வணங்கினாலும் அவருடைய ஈடுபாட்டைத் தாம் மேலும் வளர்ப்பதாகக் கிருஷ் ணர்அறிவிக்கின்றார்.

மேலும் எதற்காக பக வான் பல உருவ வழிபாட்டை ஆத ரிக்கின்றார் என்று நோக்கு வோம். இவ்வாறு தாம் விரு ம்பிய உருவ வழிபாட்டினால் அதில்ஈடுபடுபவர்கள் தம்முள் மன ஒருமைப்பாட்டை வளர் த்துக் கொள்கின்றார்கள்.

மனமானதுஎண்ணங்களின் ஓட்டம். வெள்ளம் பள்ளத்தை நோக்கி ஓடுவது இயற்கை. இதற்கு அணை போட்டு தடு த்து நிறுத்தினால் நீர்ப்பாச னம் செய்து அதிக விவசாய விளைச்சலைப் பெறலாம். இதேபோல்இயற்கையாகஆசா பாசங்களில் மூழ்கி தற்காலிக இன்பங்களை நாடும் மனதை உரிய இடத்தில் ஒரு நிலைப் படுத்தும் போது மனிதன் எத னையும் சாதிக்கும் பலத்தைப் பெறுகின்றான். மனித வாழ் வின் இறுதி இலக்கான தன் னைத் தானறிதல் என்னும் ஆனந்தநிலைக்குச்செல்லவும் இது வழி வகுக்கும். இவற்றை முன்னிட்டே பகவான்பலஉருவ வழிபாட்டை ஆதரித்துள்ளார்.

ஆதலால் யார் யார் எந் தெந்த உருவ வழிபாட்டில் ஈடுபட்டாலும் இறுதி இலக்கு ஒன்றேதான் என்பதை உண ர்ந்து கொள்வோம். இம் மன ஒருமைப்பாட்டின் மூலம் மனி தன் பலம் பெறுகின்றான். நல் லனவற்றை சாதிக்கின்றான் என்பதை எமது இளஞ் சமு தாயத்தின் மனதில் பதிய வைக் கும் நோக்குடன் யாழ் சின் மயா மிஷன், வதிவிட ஆச் சார்யார் பிரம்மச்சாரி ஜாக்ரத சைதன்யா அவர்களின் வழி நடத்தலில் எனது மனம் எனது பலம் என்னும் கருப் பொரு ளில் வதிவிடப் பயிற்சி முகாம் ஒன்றை நடத்த உள்ளது. யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி யில் எதிர்வரும் 22 ஆம் திகதி முதல் 25 ஆம் திகதி வரை நடைபெற உள்ள இப் பயிற்சி முகாமில் 12 வயது முதல் 18 வயது வரையான பாடசாலை மாணவர்கள்கலந்துபயன்பெற லாம். மேலதிக விபரங்களை கீழ்க் காணும் தொலைபேசி இலக்கங்களுடன்தொடர்புகொண்டு அறிந்து கொள் ளலாம். 021 222 3447, 076 8343153

-ஓம் தத் சத்-

சின்மயாமிஷன்
யாழ்ப்பாணம்

வடமாகாண சபையின் 2017 ஆம் ஆண்டிற்கான பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டிலிருந்து மகளிர் விவகார அமைச்சர் திருமதி அனந்தி சசிதரனால் மாணவர்களுக்கு துவிச்சக்கரவண்டிகள் வழங்கப்பட்டுள்ளன. மிகவும் வறுமைக் கோட்டிற்குள் வாழும் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களின் கற்றல் செயற்பாட்டினை ஊக்குவிக்கும் வகையில் அவர்களுக்கு துவிச்சக்கரவண்டிகள் வழங்கப்பட்டுள்ளன. மகளிர் விவகார அமைச்சர் அனந்தி சசிதரனால் தெரிவுசெய்யப்பட்ட ஏழு மாணவர்களுக்கு இவ்வாறு துவிச்சக்கர வண்டிகள் வழங்கப்பட்டன. வடமாகாண கல்வித் திணைக்கள வளாகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இந்நிகழ்வு இடம்பெற்றது.

தனது 2017ஆம் .ஆண்டுக்கான மாகாணசபையின் நிதியொதுக்கீட்டின் கீழ் தேவைக்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு துவிச்சக்கரவண்டிகளை வடமாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன் வழங்கி வைத்தார். நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மருதனார்மடத்தில் அமைந்துள்ள வடமாகாண கல்வித்திணைக்களப் பணிமனையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் மேற்படி துவிச்சக்கரவண்டிகள் பயனாளிகளிடம் கையளிக்கப்பட்டன. வடமாகாணசபை உறுப்பினருடன் மாகாண கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார், மாகாண திட்டமிடல் உதவிக் கல்விப் பணிப்பாளர் ஜெனால்ட் அன்ரனி, பயனாளிகளான மாணவர்கள், பெற்றோர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

Womens in self employment (wise) நிறுவனத்தின் வருடாந்த பொதுக் கூட்டமும் கண்காட்சி நிகழ்வும் நேற்று முன்தினம் அச்சுவேலி கலாமினி திருமண மண்டபத்தில் இடம்பெற்றது. இதில் விருந்தினர்களாக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் என்.வேதநாயகன், ஆளுநரின் செயலா ளர் இ.இளங்கோவன், கோப்பாய் பிரதேச செயலாளர், அச்சுவேலி பொலிஸ் நிலைய அதிகாரி மற்றும் பலர் கலந்து கொண்டனர். (படங்கள்:-மகாலிங்கம்)

இந்த வாரத்திற்குள் தேர்தல் குறித்து அரசு மௌனம் கலைக்காவிட்டால் கொழும்பை சுற்றிவளைப்போம்

ஜே.வி.பி. கடும் எச்சரிக்கை

(கொழும்பு)

மகிந்த ராஜபக்ஷவுடன் ஒட்டிக்கொண்டு தமது இருப்பை தக்கவைக்கும் முயற்சிகளையே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்னெடுத்து வருகின்றார்.

தேர்தலைப் பிற்போடுவதன் முழுப்பொறுப்பையும் ஜனாதிபதியே ஏற்றுக்கொள்ள வேண்டும் என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

இந்த வாரத்தினுள் தேர்தல் குறித்து அரசாங்கம் மௌனம் கலைக்காவிட்டால் நாடு பூராகவும் மக்களை ஒன்றுதிரட்டி கொழும்பை சுற்றி வளைப்போம் எனவும் அவர் எச்சரித்தார்.

மக்கள் விடுதலை முன்னணியின் செய்தியாளர் சந்திப்பு நேற்று முன்தினம் கட்சி அலுவலகத்தில் இடம் பெற்றது.

இதில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். (இ-7)

மஹியங்கனை நீதிமன்றத்தில்
வழக்கு விசாரணையின் போது வெடித்த துப்பாக்கியால் குழப்பம்

(கொழும்பு)

மஹியங்கனை நீதவான் நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் வழக்கு விசாரணை நடைபெற்றுக் கொண்டிருந்த சந்தர்ப்பத்தில் திடீரென துப்பாக்கிப் பிரயோகம்மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தவறுதலாக இடம்பெற்ற இந்த அனர்த்தம் காரணமாக, நீதிமன்ற வளாகத்திற்குள் பரபரப்பு நிலை ஏற்பட்டுள்ளது.

இலங்கையில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கி ஒன்றே இவ்வாறு வெடித்துள்ளதாக ஆரம்ப விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

தம்பான பிரதேசத்தில் பொலிஸ் பொறுப்பில் எடுக்கப்பட்ட இந்தத் துப்பாக்கி, வழக்கு விசாரணைக்காக கொண்டு வரப்பட்ட வேளையில் தன்னிச்சையாக வெடித்துள்ளது.

இந்தச் சம்பவத்தினால் ஒருவருக்கும் பாதிப்பு ஏற்படாத போதிலும் நீதிமன்ற கட்டடத்திற்கு சேதம் ஏற்பட்டுள்ளது. (இ-7)

நாட்டுக்குள் முரண்பாடு நிலவ அரச தரப்பினரே முழுக் காரணம்
அஸ்கிரிய பீடம் விசனம்

(கொழும்பு)

அரசாங்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தரப்பினருக்கிடையில் இணக்கப்பாடு இல்லாமை காரணமாக நாட்டுக்குள் முரண்பாடான நிலைமை அதிகரித்து வருவதாக அஸ்கிரிய பீடத்தின் ஆனமடுவே தம்மதஸ்ஸீ தேரர் தெரிவித்துள்ளார்.

கனியவள தொழிற்சங்கப் பிரதிநிதிகள் சிலர் அஸ்கிரிய மற்றும் மல்வத்து பீடங்களுக்கு கடந்த 27 ஆம் திகதி விஜயம் செய்துள்ளனர்.

இதன்போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இதேவேளை, திருகோணமலை எண்ணெய்களஞ்சிய அபிவிருத்தி, சபுகஸ்கந்த கனிய எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை நவீனமயப்படுத்தல் என்பன தொடர்பான விடயங்கள் அடங்கிய கடிதமொன்றையும் அஸ்கிரிய மற்றும் மல்வத்து பீடங்களிடம் கையளித்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (இ-7)

கோத்தபாயவை சிறையிலடைப்பது முறையாகாது!
அபேதிஸ்ஸ தேரர் எதிர்ப்பு

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ ஏதேனும் தவறிழைத்திருந்தால், அவருக்கு எதிராக நீதிமன்றில் வழக்குப் பதிவு செய்யுங்கள். அதைவிடுத்து அவரை கைது செய்வதோ அல்லது அவரை சிறையில் அடைப்பதோ முறையாகாது என மெதகொட அபேதிஸ்ஸ தேரர் கண்டனம் தெரிவித்தார்.

எலிய அமைப்பினால் நேற்று முன்தினம் கொழும்பு தேசிய நூலகசாலையின் கேட்போர் கூடத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனை தெரிவித்தார். (இ-7)

அளுத்கமையில் துப்பாக்கிச் சூடு

(கொழும்ப)

அளுத்கம பகுதியில் வெளிநாட்டு நாணயமாற்று நிலையமொன்றில் நேற்று முன்தினம் மாலை கொள்ளையிடவந்த நபர்கள் குறித்த முயற்சி வெற்றியளிக்காத பட்சத்தில் துப்பாக்கிச்சூடு நடத்திவிட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

எனினும், துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தினால் எவருக்கும் காயங்கள் ஏற்படவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கொள்ளையர்கள் முகம் மறையக் கூடிய விதத்தில் பாதுகாப்பான தலைக்கவசம் அணிந்து வந்துள்ளதாக அளுத்கம பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ-7)

சப்ரகமுவ பல்கலையில் மருத்துவபீடம் ஆரம்பம்

(கொழும்பு)

சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில் வைத்தியபீடத்தை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்வதாக உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார நேற்று பாராளுமன்றத்தில் எழுப்பிய கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதேவேளை வைத்திய பீடத்துக்கான பாடப்பிரிவுகள் பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழுவினால் தயாரிக்கப்பட்டு வருவதாகவும் இந்த வருட பெறுபேறுகளின் அடிப்படையில் 75 மாணவர்களை உள்வாங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் உயர்கல்வி அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

கோத்தபாயவைக் கைது செய்தால் கொழும்புக்குள் படையெடுப்போம்
மேர்வின் சில்வா எச்சரிக்கை

(கொழும்பு)

முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷவைக் கைது செய்தால் கொழும்புக்குள் படையெடுத்துப் போராட்டங்களை முன்னெடுப்போம் என முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா எச்சரித்தார்.

கொழும்பு மாவட்ட நீதிமன்றத்திற்கு நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை வழக்கு விசாரணைக்காக வருகை தந்தபோது, ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் அவர் இதனைத் தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

"கோத்தபாய ராஜபக்ஷ கைது செய்யப்பட்டால், அனைத்து மக்களையும் ஒன்று திரட்டி கொழும்புக்குள் பிரவேசித்துப் போராட்டங்களை முன்னெடுப்போம். கோத்தபாய ராஜபக்ஷ யுத்தத்தினை நிறைவுக்குக் கொண்டு வந்து பயங்கரவாதத்தினைத் தோற்கடிப்பதற்கு பெரும் பங்களிப்புச் செய்தவர்.

எனவே கோத்தபாய கைது செய்யப்பட்டால் சிங்கள மக்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து கொழும்புக்கு வந்து பல போராட்டங்களை முன்னெடுத்து அரசாங்கத்தின் செயற்பாடுகளை முடக்குவோம்" என மேர்வின் சில்வா மேலும் எச்சரித்தார். (இ-7)

சிறுவன் மீது பாலியல் துஷ்பிரயோகம்; தீர்ப்பு அடுத்த வாரத்திற்கு ஒத்தி வைப்பு

(குருமன்காடு)

வவுனியாவில் கணித பாட ஆசிரியர் ஒருவர் 10ஆம் வகுப்பு படிக்கும் சிறுவன் ஒருவனுக்கு பிரத்தியேக பரீட்சை வகுப்பு நடத்துவதாகத் தெரிவித்து அச்சிறுவனை பாலியல் துஷ்பிரயோகம் புரிந்துள்ள குற்றத்திற்கு வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி பாலேந்திரன் சசிமகேந்திரன் குறித்த ஆசிரியரை குற்ற வாளியாக இனங்கண்டுள்ளதுடன் அடுத்த வாரத்திற்கு தீர்ப்பிற்கு ஒத்திவைத்துள்ளார்.

பாடசாலைச் சிறுவன் தனக்கு இலவசமாக கல்வி கற்பித்த ஆசிரியருக்கு எதிராக தன்னை அவர் பாரதூரமான பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தினார் என்ற குற்றச்சாட்டின் அடிப்படையில் தாக்கல் செய்யப்பட்ட குறித்த வழக்கானது நேற்று முன்தினம் வவுனியா மேல் நீதிமன்றில் இடம்பெற்ற போதே இவ்வாறு தீர்ப்பு ஒத்தி வைக்கப்பட்டது. இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது.

கடந்த 2011 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 22 மற்றும் 23ஆம் திகதிகளில் செட்டிகுளம், வீரபுரம் பகுதியில் 10ஆம் வகுப்பு படித்த சிறுவன் ஒருவனை கணிதபாட ஆசிரியரான 34வயது நிரம்பிய நபர் ஒருவர் பாலியல் துஷ்பிரயோகம் செய்துள்ளார்.

குறித்த ஆசிரியர் தனது வீட்டிற்குப்பக்கத்தில் தனியார் வகுப்பு ஒன்றை நடத்தி வந்திருந்ததுடன் மாணவர்களை பரீட்சைக்கு பிரத்தியேகமாக தயார்படுத்துகின்ற சேவையையும் மேற்கொண்டு வந்துள்ளார்.

இவ்வாறு பரீட்சைக்குத் தோற்றுகின்ற மாணவர்கள் அவரது வீட்டில் தங்கியிருந்த வேளையில் தன்னிடம் கணித பாடம் படிப்பதற்காக பிரத்தியேக வகுப்பிற்கு வந்து இரவில் அவரது வீட்டில் தங்கி நின்று படித்த 10ஆம் வகுப்பு மாணவன் ஒருவனை பாலியல் துஷ்பிரயோகம் புரிந்ததாக சாட்சிகள் மூலம் தெரிய வந்துள்ளது.

மேலும் குறித்த நபர் குறித்த குற்றத்தை புரிந்துள்ளார் என சாட்சியங்கள் ஊடாக தெரியவந்ததையடுத்து குறித்த ஆசிரியருக்கு எதிரான குற்றச்சாட்டுக்கான தீர்ப்பு அடுத்த வாரம் வழங்கப்படும் என வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி பாலேந்திரன் சசிமகேந்திரன் தெரிவித்துள்ளார். இவ்வழக்கை அரச சட்டவாதி மாதினி விக்னேஸ்வரன் நெறிப்படுத்தியிருந்தார். (2-250)

இ.போ.ச.ஊழியர்களின் சேவை பணிப்புறக்கணிப்பு நேற்று இரண்டாவது நாளாகவும் தொடர்ந்தது

(குருமன்காடு)

வடக்கு மாகாண இ.போ.ச. சேவைகள் இரண்டாவது நாளாக தமது சேவை பணிப்பறக்கணிப்பை மேற்கொண்டு வருகின்றன. நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை காலை முதல் ஆரம்பிக்கப்பட்ட இ.போ.ச. சேவை ஊழியர்களின் பணிப்புறக்கணிப்பு நேற்றும் தொடர்ந்து நடைபெற்றது.

இதன்காரணமாக பயணிகள் தமது பயணத்தை மேற்கொள்வதற்கு பேருந்து நிலையம் சென்று ஏமாற்றத்துடன் காத்திருந்தனர்.

தமது கோரிக்கையான இலங்கைப் போக்குவரத்துச் சபையின் வடபிராந்திய முகாமையாளர் மற்றும் வடபிராந்திய பாதுகாப்பு அதிகாரி ஆகியோரை இடமாற்றம் செய்யக்கோரி வடக்கு மாகாண இலங்கைப் போக்குவரத்து ஊழியர்கள் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளதுடன், இரண்டாவது நாளான நேற்றும் தமது போராட்டத்தை முன்னெடுத்தனர்.

வடபிராந்திய சாலைகளின் இணைந்த தொழிற் சங்கத்தின் ஏற்பாட்டில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இதனால் மாணவர்கள், அரச உத்தியோகத்தர்கள், பொதுமக்கள்எனப்பலரும்பாதிக்கப்பட்டுள்ளனர். (2-250)

மக்களுக்கு சிகிச்சை வழங்கினார் வடக்கு மாகாண சுகாதார அமைச்சர்

(பனிக்கன்குளம்)

மடு பிரதேசச் செயலாளர் பிரிவிற்குற்பட்ட இரணை இலுப்பைக்குளம் ஆரம்ப சுகாதார பராமரிப்பு நிலையத்திற்கு நேற்று முன்தினம் திடீர் விஜயத்தை மேற்கொண்டிருந்த வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் வைத்திய கலாநிதி ஜீ.குணசீலன் அங்கு சிகிச்சைக்காக வருகை தந்திருந்த மக்களுக்கு மருத்துவ பரிசோதனை மற்றும் சிகிச்சை வழங்கிய சம்பவம் நடைபெற்றுள்ளது.

இரணை இலுப்பைக்குளம் ஆரம்ப சுகாதார பராமரிப்பு நிலையத்தில் உள்ள குறைபாடுகளை பார்வையிடுவதற்காகச் சென்ற சுகாதார அமைச்சர், அங்கு சிகிச்சை பெற்றுக்கொள்ள மக்கள் அதிகமாக காணப்பட்ட நிலையில் அங்கு நின்ற மக்களுக்கு உடனடியாக மருத்துவ பரிசோதனை மற்றும் சிகிச்சைகளை வழங்கியுள்ளார்.

ஆரம்ப சுகாதார பராமரிப்பு நிலையம் பல்வேறு அடிப்படை வசதிகள் இன்றி இயங்கி வருகின்றது.

எனினும் குறித்த சுகாதார பராமரிப்பு நிலையத்தில் கடமையாற்றுகின்ற வைத்தியர் அடிப்படை வசதிகள் இன்றி சேவையாற்றி வருகின்றார்.

சுகாதார அமைச்சர் மக்களை நீண்ட நேரம் காத்து நிற்க விடாது மருத்துவ பரிசோதனை மற்றும் சிகிச்சை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-281-4-15)

கட்டுப்பாட்டு விலையில் உரவகைகள் விநியோகம்

துணுக்காய் கமநலசேவை அபிவிருத்தி உத்தியோகத்தர் தெரிவிப்பு

(மல்லாவி)

துணுக்காய் கமநல சேவை நிலையத்தின் கீழ் உள்ள உரக்களஞ்சியம் ஊடாக விவசாயிகளுக்கு கட்டுப்பாட்டு விலையில் யூரியா, பொட்டாசியம், அடிக்கட்டுப் பசளை ஆகியன விநியோகிக்கப்பட்டு வருவதாக துணுக்காய் கமநல சேவை நிலையத்தின் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் சி.பிரபாகரன் அறிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், துணுக்காய்கமநலசேவைநிலையத்தின் கீழ் நடப்பாண்டுக் குரிய காலபோக நெற் செய்கையை 2 ஆயிரத்து 242 விவசாயிகள் 6 ஆயிரத்து 997.50 ஏக்கரில்நெல்பயிரிட்டுள்ளநிலையில், விவசாயிகளின்நலன்கருதி 50 கிலோ கிராம் நிறையுடைய அனைத்து உர வகைகளும்தலா 2 ஆயிரத்து 500 எனும் அரச கட்டுப்பாட்டு விலையில் வழங்கப்பட்டு வருகின்றது.

இதே உரவகைகள் தனியார் விற்பனை நிலையங்களில் 2 ஆயிரத்து 650 ரூபா தொடக்கம் 3 ஆயிரம் ரூபா வரையிலான அதிகூடிய விலையில் விற்பனை செய்யப்படுகின்றது.

இந் நிலையில், விவசாயிகளுக்கு தேவையான உரவகைகள் கையிருப்பில் இருப்பதால் கமநல சேவை நிலையத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம்என அவர்மேலும் தெரிவித்துள்ளார். (2-15)

facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1264

கோபால்

வேணு

விஷ்வா

வினுஜன்

நிமலன்

கஜா

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

வடமாகாண சபைத் தேர்தல் தொகுதி நிர்ணயம் தொடர்பான முன்மொழிவுகள்

(இது கட்டுரை ஆசிரியரின் தனிப்பட்ட முன்மொழிவுகள்)

மன்னார் மாவட்டத்தில் மூன்று மாகாண சபைத் தேர்தல் தொகுதிகள் நிர்ணயம் செய்யப் படும். மாவட்டத்தில் ஒரு தொகு தியின் சராசரி மக்கள் தொகை 99570÷3=33190 ஆகும். சராசரி யின் +10 வீதம் 36509 ஆகவும் சராசரியின் -10 வீதம் 29871 ஆகவும்

இம்மாவட்டத்திற்குரிய மூன்று தேர்தல் தொகுதிகள் மன்னார், மாந்தை, நானாட்டான்/ முசலி என அமைக்கலாம்.

மன்னார் தேர்தல் தொகுதி யின் பிரிவும் மக்கள் தொகை யும் பின்வருமாறு,

இத்தொகுதிகளில் தமிழ்-முஸ்லிம் மக்களுக்கிடையே மக்கள் தொகையிலும் பார்க்க வாக்காளர் பதிவு எண்ணிக்கை யில் வித்தியாசம் குறைவாக இருக்கின்றது.

மாந்தை தேர்தல் தொகுதி

இத்தொகுதிக்குள் அடங்கும் பிரிவும் மக்கள் தொகையும் பின்வருமாறு,

இத்தொகுதியில் இந்துக்கள் ஏனைய மதப் பிரிவினரிலும் பார்க்கக்கூடுதலாக இருக்கின்றனரெனி னும் பெரும்பான்மையாக இல்லை.மன்னார் மாவட்டத்தில் தங்கள் பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்த இத்தொகுதியை இந்துக்கள் உரிமைகோரும் தகுதி காணப்படுகின்றது.

நானாட்டான்- முசலி தேர்தல் தொகுதி

இங்கு முன்மொழியப்பட்ட நானாட்டான், முசலி தேர்தல் தொகுதி நானாட்டான் பிரதேச செயலகப் பிரிவையும் முசலி பிரதேச செயலகப் பிரிவையும் முழுமையாக உள்ளடக்குகின் றது. மேலும் மடுப் பிரதேச செயலகத்துக்குட்பட்ட ஒன்பது கிராம அதிகாரி பிரிவுகளுள் இத்தொகுதியில் அடங்கும்.

இந்தத் தேர்தல் தொகுதியின் பரப்பும் மக்கள் தொகையும் பின்வருமாறு,

நானாட்டான் பிரிவில் தமிழர்கள் 94.69 வீதம் , முஸ்லிம்கள் 3.66 வீதமாகவும் இருந்தனர். இப்பிரிவின் சமயக் கூட்டின் பண்பை நோக்கின் பௌத்தர்கள் 1.40 வீதமாகவும் இந்துக்கள் 19.21 வீதமாகவும் இஸ்லாமியர் 3.73 வீதமாகவும் கத்தோலிக்கர்கள் 68.35 வீதமாக வும் ஏனைய கிறிஸ்தவர்கள் 7.25 வீதமாகவும் இருந்தனர். முசலிப் பிரிவில் தமிழர்கள் 38.31 வீதமாகவும் முஸ்லிம்கள் 59.74 வீதமாகவும் இருந்தனர். முசலியில் இன்றும் மீள்குடி யேற்றம் முற்றுப் பெறவில்லை. எனினும் வாக்காளர் பதிவு சரியாகப் பேணப்படுகின்றது.

பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை
வாழ்நாள் பேராசிரியர்
முன்னாள் துணைவேந்தர்

1981 ஆம் ஆண்டு குடிக்க ணிப்பின்படி முசலிப் பிரிவில் 13917 மக்கள் இருந்துள்ளனர். இவர்களுள் 62.5 வீதம் முஸ் லிம்களாகும்.

மடுப்பிரிவுக்குள் வரும் ஒன் பது கிராம அதிகாரி பிரிவுகளில் 8 பிரிவுகளில் தமிழ்மக்கள் மிகப்பெரும்பான்மையாக வாழ் கிறார்கள். MN 130 பூமலந்தான் கிராமத்தில் 277 பேர் வாழ்ந்தனர்.

முசலிப் பிரிவில் இன்றைய மக்கள் தொகை 25 ஆயிரத்திற் கும் மேற்பட்டதாக மன்னார் மாவட்டப் புள்ளிவிபரக் கையேடு தெரிவிக்கின்றது.

Mannar District PC Electorates



பிரிவு (முசலி- நானாட்டான்)	மக்கள் தொகை
நானாட்டான் பிரதேச செயலகப் பிரிவு	17391
முசலி பிரதேச செயலகப் பிரிவு	9119
MN 37 மடு கி.அ.பி	1227
MN 38 பெரிய பண்டி விரிச்சான் மேற்கு கி.அ.பி	492
MN 39 பெரிய பண்டி விரிச்சான் கிழக்கு கி.அ.பி	698
MN 128 மழவராயர் கட்டை அடம்பன் கி.அ.பி	1527
MN 129 உள்ள வெட் டுவான் கி.அ.பி	179
MN 130 பூமலந்தான்	277
MN 131 திக்கம் கி.அ.பி	34
MN 132 மாதாகிராமம்	513
MN 133 பெரிய முறிப்பு	220
மொத்தம்	30368

மேலும் மீள்குடியேற்றங்கள் நடைபெற்றுக் கொண்டிருப் பதால் 2012 குடிசனப் புள்ளிவி பரங்களில் இருந்து முசலிப் பிரிவு குறிப்பிடத்தக்க வேறு பாடுகள் கொண்டதாக இருக்க லாம். இதைப்போல மன்னார் மாவட்டத்தின் குடிப் புள்ளி விபரங்கள் 2012 குடிப் புள்ளி

மன்னார் பிரிவு (மன்னார் தேர்தல் தொகுதி)	மக்கள் தொகை
MN 48 தலைமன்னார் துறை கி.அ.பி	968
MN 49 தலைமன்னார் தெற்கு கி.அ.பி	522
MN 50 தலைமன்னார் துறை கி.அ.பி	88
MN 51 தலைமன்னார் துறை கிழக்கு கி.அ.பி	1288
MN 52 தலைமன்னார் கி.அ.பி	754
MN 53 காட்டுக்காரன் குடியிருப்புப் கி.அ.பி	315
MN 54 துள்ளுக் குடியிருப்பு கி.அ.பி	1155
MN 55 பேசாலை மேற்கு கி.அ.பி	1150
MN 56 பேசாலை தெற்கு கி.அ.பி	2488
MN 57 பேசாலை வடக்கு கி.அ.பி	1198
MN 58 பேசாலை மேற்குகி.அ.பி	1150
MN 59 பெரிய கரிசல் கி.அ.பி	852
MN 60 ஓலைத் தொடுவாய் கி.அ.பி	638
MN 61 புதுக்குடியி ருப்புப் கி.அ.பி	1776
MN 62 தோட்ட வெளி கி.அ.பி	1834
MN 63 எருக்கலம் பிட்டி மேற்கு கி.அ.பி	617
MN 64 எருக்கலம் பிட்டி வடக்கு கி.அ.பி	417
MN 65 எருக்கலம் பிட்டி கிழக்கு கி.அ.பி	753
MN 66 எருக்கலம் பிட்டி தெற்கு கி.அ.பி	368
MN 67 எருக்கலம் பிட்டி மத்தி கி.அ.பி	513
MN 68 தாராபுரம் மேற்கு கி.அ.பி	736
MN 69 தாராபுரம் கிழக்கு கி.அ.பி	334
MN 70 தாழ்வுப்பாடு கி.அ.பி	2353
MN 75 சாவற்கட்டு கி.அ.பி	1834
MN 78 சின்னக்கடை கி.அ.பி	1386
MN 81 மூர்வீதி கி.அ.பி	2180
MN 82 உப்புக்குளம் வடக்கு கி.அ.பி	2064
MN 83 உப்புக்குளம் தெற்கு கி.அ.பி	977
MN 84 பள்ளிமுனை கிழக்கு கி.அ.பி	1526
MN 85 பள்ளிமுனை மேற்கு கி.அ.பி	1504
மொத்தம்	33936

விபரங்களிலிருந்து குறிப்பிடத் தக்க இனவிகிதாசார வேறுபாடு களை கொண்டதாக இருக்கிற தாகத் தெரிகிறது.

இங்கு சிங்களவரின் விகிதம் 63.18 வீதமாக இருந்தது குறிப் பிடத்தக்கது. (தொடரும்)

பிரிவு (மாந்தை தேர்தல் தொகுதி	மக்கள் தொகை
மன்னார் பிரதேச செயலகப் பிரிவுக்குள் அடங்கும் கிராம அதி காரி பிரிவுகள்	
MN 71 பட்டி தோட்டம் கி.அ.பி	1486
MN 72 எழுத்தூர் கி.அ.பி	3407
MN 73 சவுத்பார் கி.அ.பி	2005
MN 74 எமில்நகர் கி.அ.பி	2114
MN 76 பனங்கட்டுக் கொட்டு மேற்கு கி.அ.பி	1526
MN 77 பனங்கட்டுக் கொட்டு கிழக்கு கி.அ.பி	790
MN78 பெற்றா கி.அ.பி	941
MN 80 பெரியகடை கி.அ.பி	677
MN 87 பெரிய நாவற் குளம் கி.அ.பி	15
MN 86 திருக்கேதீஸ் வரம் கி.அ.பி	442
MN 88 நாகதாழ்வு கி.அ.பி	186
MN 89 நீலாச்சேனை கி.அ.பி	63
MN 90 கள்ளிக் கட் டைக்காடு கி.அ.பி	393
MN 91 புதுக்குளம் கி.அ.பி	849
MN 92 உயிலங்குளம் கி.அ.பி	433
MN 93 மாதோட்டம் கி.அ.பி	322
MN 94 வண்ணா மோட்டை கி.அ.பி	23
MN 95 உருத்திராயங் குளம் கி.அ.பி	317
MN 96 பரப்பான் கண்டல் கி.அ.பி	705
மாந்தை மேற்கு பிர தேச செயலகப் பிரிவு	14771
மடுப்பிரதேச செயல கப் பிரிவுக்குள் அடங் கும் கிராம அதிகாரி பிரிவுகள்	
MN 40 பாலம்பிட்டி கி.அ.பி	700
MN 41 கீரிசுட்டான் கி.அ.பி	134
MN 42 இரணை இலுப் பைக்குளம் கி.அ.பி	938
MN 43 விளாத்திக்கு ளம் கி.அ.பி	252
MN 44 பரசங்குளம் பிரிவு	489
MN 45 காக்கையன் குளம் மேற்கு கி.அ.பி	230
MN 46 காக்கையன் குளம் கிழக்கு கி.அ.பி	264
MN 47 கல்மடு கி.அ.பி	289

போர்க்குற்றச்சாட்டுக்கு விரைவில் பதிலளிப்போம்

வெளிவிவகார அமைச்சர் மாரப்பன தெரிவிப்பு

(கொழும்பு)

பிரிட்டனின் நாடாளுமன்ற உறுப்பினர் நெசர்பே பிரபுவின் கருத்தை அடிப்படையாகக் கொண்டு யுத்தக் குற்றச்செயல் தொடர்பாக இலங்கை அரச படைகள் மீதான குற்றச்சாட்டுக்கு விரைவில் பதிலளிக்கப்படும் என வெளிவிவகார அமைச்சர் திலக் மாரப்பன தெரிவித்துள்ளார்.

இலங்கையில் யுத்தக் குற்றச்செயல்கள் இடம்பெற்றதாகக் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ள நிலையில், இந்தக் குற்றச்சாட்டுகளுக்குப் பதிலளிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

பிரிட்டன் நாடாளுமன்ற உறுப்பினர் நெசர்பே பிரபுவின் கருத்துக்கு நன்றி தெரிவிக்கின்றேன். இறுதிக்கட்ட யுத்தத்தின் போது 40 ஆயிரம் பொது மக்கள் உயிரிழக்கவில்லை எனவும், 7 ஆயிரம் முதல் 8 ஆயிரம் பேர் வரையில் உயிரிழந்திருக்கலாம் எனவும் நெசர்பே பிரபு தெரிவித்திருந்தார்.

இலங்கை தொடர்பில் குற்றம் சுமத்தி வரும் தரப்பினருக்கு நெசர்பே பிரபுவின் கருத்தை பதிலடியாகக் கொடுக்க முடியும் எனவும் திலக் மாரப்பன தெரிவித்தார்.

கொழும்பு சிங்கள ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

அன்னமுன்னா

குடும்பம்:- Annonaceae
சாதி:- AnnonaCorr.Serr
இனம்:- AnnonacherimolaMill.(செரிமோயா)
AnnonamuricataL.(முள் அன்னாமுன்னா)
Annonareticulate L.(மனல் அன்னாமுன்னா)
AnnonasquamosaL.(சீனி அன்னாமுன்னா)

உலகம் முழுவதும் பிரபல்யமாகவுள்ள அன்னாமுன்னா தென் அமெரிக்கா, ஆபிரிக்காவின் கிழக்கு பகுதியை தாயகமாக கொண்டுள்ளது.

இலங்கையில் வீட்டுத் தோட்டங்களில் முள் அன்னாமுன்னா, செரிமோயா, சீனி அன்னாமுன்னா, மனல் அன்னாமுன்னா செய்கை பண்ணப்படுகின்றது. இவை 5-10மீற்றர் உயரம் வரை வளரக் கூடியது. இதன் மரப்பட்டையானது கபில நிறமானதாகவும் காய்கள் பச்சை நிறமான அழுத்தமற்றதாகவும் காணப்படும். சதைப் பகுதி வெள்ளை நிறமானவையாகவும் விதைகள் கறுப்பு நிறமானவையாகவும் இருக்கும்.

அன்னாமுன்னாவிலிருந்து விதைகள், ஒட்டுதல், வேர்விட்ட துண்டம் மூலம் இனப்பெருக்கம் செய்ய முடியும். விதையின் முளைதிறன் காலம் குறைவாக காணப்படுவதனால் பழங்களிலிருந்து விதைகளை அகற்றியவுடன் முளைத்தலுக்கு பயன்படுத்துவது மிகவும் பொருத்தமானது. 5மீற்றர் X 5மீற்றர் இடைவெளியில் 160 மரங்களை நடுகை செய்யலாம். புரட்டாதி, ஐப்பசி மாதங்களில் நடுகை செய்வது உகந்தது.

நடுகை செய்யப்பட்டு மூன்று வருடங்களில் விளைவைப் பெற்றுக்கொள்ள முடியும். சாதகமான சூழல் காணப்படும் போது வருடம் முழுவதும் பழத்தினை பெற்றுக் கொள்ள முடியும். சாதாரணமாக ஒரு மரத்திலிருந்து 10-50 பழங்கள் வரை வருடமொன்றிற்கு பெற்றுக் கொள்ளலாம்.

ஐஸ்கிறீம், பழப்பானம் போன்ற பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகளை தயாரிப்பதற்கு அன்னாமுன்னா பயன்படுத்தப்படுகிறது. மென்பானமாகவும் பருகக்கூடிய தொன்றாகும். அன்னாமுன்னா தாவரப் பகுதிகளான இலை, வேர், தண்டு, காய், விதைகள் என்பனவற்றில் அடங்கியுள்ள இயற்கையான மருத்துவக் குணங்களினால் மலச்சிக்கல், மூட்டுவலிகள், உணவு நஞ்சாதல், வாந்தி, கண் நோய்கள், தோல் நோய்கள், நீரிழிவு, சிறுநீரகம் சாந்த நோய்கள், புற்று நோய் என்பவற்றைக் குணப்படுத்துவதற்கு பயன்படுத்தப்படுகின்றது.

அன்னாமுன்னா வேர், இலை மற்றும் விதை என்பவற்றில் இருந்து பெறப்பட்ட சாறுகளை தாவர பீடை விரட்டிகளாக பயன்படுத்த முடியும்.

பல்வேறு வகையிலும் நன்மையளிக்கும் அன்னாமுன்னாவை நடுகை செய்து ஆரோக்கியமான வாழ்விற்கு வழிவகுப்போம்.

செல்வி. குணரத்தினம் அபிராமி
குமுழமுனை விவசாயப் போதனாசிரியர்,
பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர்
அலுவலகம், முல்லைத்தீவு.

மும்பையில் பொருட் கண்காட்சி யாழ். வர்த்தகர்களுக்கு வாய்ப்பு

(யாழ்ப்பாணம்)

மும்பை நகரில் 2018 மார்ச் 22ஆம் திகதி முதல் 24 ஆம் திகதி வரை நடைபெறும் மாபெரும் பொருட் கண்காட்சியில் பிளாஸ்ரிக் பொருட்கள், வாசனைத் திரவியங்கள், அழகுசாதனப் பொருட்கள், இரசாயனப் பதார்த்தங்கள் மற்றும் அதனோடு இணைந்த பொருட்கள், பூச்சு வகைகள் தயாரிப்புக்கான மூலப்பொருட்கள், கப்பற் பொருட்கள் மூலிகைகள் போன்ற பல்வகைப் பொருட்களின் உற்பத்தியாளர்கள் பங்குபற்றவுள்ளதுடன் கொள்வனவாளர்களுடன் நேரடித் தொடர்புகள் மூலமாகவும் வர்த்தக உறவுகளை மேம்படுத்தவும் உள்ளனர்.

இவ்வாறான பொருட்களில் ஏற்கனவே வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள இறக்குமதியாளர்களுக்கு இலவச பயண மற்றும் தங்குமிட வசதிகள் வழங்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான விபரங்கள் இந்திய துணைத்தூதரகம் யாழ். வணிகர் கழகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. ஆர்வமுள்ள இறக்குமதியாளர்கள் யாழ். வணிகர் கழகத்துடன் 021 222 8593 இலக்கத் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு விபரங்களை தெரிந்து கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

மழையில் நனைந்தபடி மக்கள் முறைப்பாடு



(கரணவாய்)

நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் பொது மக்களின் முறைப்பாடு எடுக்கும் காரியாலய அறையின் ஓடுகளும் சீற்றும் உடைந்து காணப்படுவதால் மழையில் நனைந்த படி பொதுமக்கள் முறைப்பாடு செய்கின்றனர்.

எனவே இக் காரியாலய அறையின் கூரைத்தினை புனரமைப்பு செய்யுமாறு பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளிடம், பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-60)

ஆரோக்கியமான வேலைச்சூழல் தொடர்பான கலந்துரையாடலும் இலவச சட்ட உதவியும்

(யாழ்ப்பாணம்)

வர்த்தக நிலையங்களிலும் மற்றும் அங்காடிகளிலும் பணி புரியும் அனைத்து ஊழியர்களுக்குமான விழிப்புணர்வையும் இலவச சட்ட ஆலோசனைகளையும் வழங்குமுகமாக யாழ். மாவட்ட அரசாங்க அதிபரூடாக சொலிடாரிற்றி என்னும் அரசார்பற்ற நிறுவனம் 03.12.2017 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு 165, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள யாழ். வணிகர் கழக பணிமனையில் நிகழ்வொன்றை நடத்த முன்வந்துள்ளது.

எனவே அனைத்து வர்த்தக நிலையங்களிலும் மற்றும் அங்காடிகளிலும் பணி புரியும் அனைத்து ஊழியர்களும் தவறாது பங்குபற்றுமாறும் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்கள் இதற்கு அனுசரணையாக ஒத்துழைப்பு வழங்கும் படியும் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர் என யாழ். வணிகர் கழகம் அறிவித்துள்ளது. (இ)

தீமைக்கும் நன்மை செய்!



(நேற்றைய தொடர்ச்சி)

அருகே வெள்ளை வெளேர் என்று மாமிசக் கொழுப்புடன் சனமற்று உறங்கும் அந்தப் பெரிய கொக்கைச் சற்று நேரம் உற்றுப் பார்த்தான். தொலைவில் நெருப்பு எரிவதையும் பார்த்தான். நாம் நம் ஊரை அடைய இன்னும் வெகுதூரம் நடந்து செல்ல வேண்டும். நாளைய சாப்பாட்டுக்கு என்ன செய்வது? அவனுடைய பழைய கிராதக மனம் விழித்துக் கொண்டது. 'உம்.. வேட்டையாடு. வேட்டையாடி வாழ்ந்தவன்தானே நீ?' என்று அது அவனை உசுப்பி விட்டது. தீய சக்திகளின் கட்டளைக்குப் பணிந்தவன்போல் அவன் திடீரென்று எழுந்தான்.

ஆழ்ந்த உறக்கத்தில் இருந்த கொக்கை அள்ளி எடுத்தான். சடாரென அதை நெருப்பில் போட்டு அதன் மாமிசத்தை உரித்து எடுத்து மறுநாள் சாப்பாட்டுக்கு வைத்துக் கொண்டு, அதிகாலையில் அந்த இடத்தை விட்டுப் புறப்பட்டு வேகவேகமாக நடக்கலானான். இதைத் தேவலோகத்திலிருந்து பார்த்துக் கொண்டிருந்த தேவேந்திரன் திகைப்பில் ஆழ்ந்தார். இப்படிக் கூட மனிதர்கள் நடந்துகொள்ள முடியுமா என்றெண்ணி அவர் விழிகள் கண்ணீர் உகுத்தன. நாள்தோறும் ராஜசிம்மக் கொக்கு ஒரு முறையேனும் பறந்து சென்று தன் அரக்க நண்பனான விரூபாட்சனோடு உரையாடி விட்டு வருவது வழக்கம். 'என்ன இது? ஓரிரு நாட்களாக கொக்கைக் காணோமே? அதுவும் கொக்கு என்னிடம் அனுப்பிய மனிதனான கௌதமன் அவ்வளவு நல்லவனாகத் தெரியவில்லை. கொக்கின் மனம் அதன் உடல் போல் வெளுத்தது. அது எல்லோரையுமே நல்லவர்களாக நினைக்கிறது. இந்த கௌதமன் அதைக் கொல்லாமல் இருக்க வேண்டுமே?' என்று வேதனைப்பட்ட விரூபாட்சன் தன் படை வீரர்களை அனுப்பி கொக்கு குறித்து அறிந்துவரச் சொன்னான். கொக்கின் பிய்ந்த இறக்கைகளைத்தான் அவர்கள் கொண்டு வந்தார்கள்.

தன் நண்பன் கொக்கின் இறக்கைகளைக் கண்ட அரக்கனின் கண்களில் கண்ணீர் வழிந்தது. "எங்கே அந்த கௌதமன்? பிடித்து வாருங்கள் அவனை!" என்று கர்ஜித்தான். கௌதமன் உடனடி வரப்பட்டான்.

"இவனை வெட்டி அந்த மாமிசத்தைச் சமைத்துச் சாப்பிடுங்கள்!" என்று உறுமினான் அரக்கன்.

"அரசே! அவன் உடலை வெட்டுகிறோம். ஆனால் நன்றி கொன்றவனின் மாமிசத்தைச் சாப்பிடும் அளவு நாங்கள் கேவலமானவர்கள் அல்ல!" என்ற அரக்கர்கள் அவன் உடலை வெட்டினார்கள். காட்டு விலங்குகளிடம் அந்த உடல் எறியப்பட்டது.

"இந்த நன்றி கொன்றவனின் மாட்டோம்!" என்று விலங்குகள் அனைத்தும் விலகிச் சென்றன. தன் கொக்கு நண்பனான ராஜசிம்மனின் எஞ்சிய உடலை சந்தனச் சிதையில் வைத்துக் கண்ணீர் மல்க எரிக்க முற்பட்டான் விரூபாட்சன். அப்போது அங்கே தேவேந்திரன் தோன்றினார். "விருந்தோம்பலில் சிறந்த இந்த அற்புதமான பறவையை நான் மீண்டும் உயிர்ப்பிக்கிறேன்!" என்று கூறி, அதற்கு உயிர் கொடுத்தார். என்ன ஆச்சரியம்! மறு கணம் எரியூட்டப்படவிருந்த சந்தனச் சிதையிலிருந்து ராஜசிம்மக் கொக்கு சிறகுகளைச் சிலிர்த்துக் கொண்டு எழுந்து நின்றது!

விரூபாட்சன் ஓடோடிச் சென்று அதைக்கட்டி அணைத்துக்கொண்டு அதன் சிறகுகளைக் கோதி விட்டான். நடந்தது அனைத்தையும் கேட்டறிந்தது, கொக்கு. தேவேந்திரன், "நட்பைப் போற்றும் என் அன்புப் பறவையே! உனக்கு ஒரே ஒரு வரம் தர விரும்புகிறேன்! நீ வேண்டியதைக் கேட்டுப் பெற்றுக் கொள். செல்வமா? நீண்ட ஆயுளா? இன்னும் அழகிய உடலா? இனிமையான குரலா? சொல். உனக்கு வேண்டிய ஏதாவது ஒரே ஒரு வரத்தை மட்டும் கேள்!" என்று பரிவோடு சொன்னார்.

தேவேந்திரனைக் கம்பீரமாகப் பார்த்த ராஜசிம்மக் கொக்கு, "தேவேந்திரரே! என் விருந்தாளியும் நண்பனுமான மனிதன் கௌதமன் மீண்டும் உயிர் பிழைக்குமாறு தாங்கள் வரம் தரவேண்டும். நான் மறுபடி பிழைத்தது மாதிரி என்னைக் கொன்ற என் விருந்தினனும் பிழைக்க வேண்டும் என்பதே நான் கேட்கும் ஒரே வரம்!" என்றது. தேவேந்திரன் கொக்கின் அற்புதமான பண்பைப் பார்த்து ஆச்சரியத்தில் ஆழ்ந்தான். வானுலகத்திலிருந்து எல்லாத் தேவர்களும் கொக்கின் மேல் பூமாரி பொழிந்தார்கள்.

மீண்டும் உயிர் பெற்று எழுந்த கௌதமன் கொக்கிடம் மன்னிப்பு வேண்டிக் கண்ணீர் உகுத்தபோது, கொக்கு அதன் சிறகுகளால் அவன் கண்ணீரைத் துடைத்து அவனை அணைத்துக் கொண்டது. விரூபாட்சனின் கண்களிலிருந்தும் கண்ணீர் பெருகியது. குணம் பல நேரங்களில் குலத்தால் அமைவதில்லை. குலம் எதுவானால் என்ன? குணத்தால் உயர்ந்தவர்களே உண்மையில் உயர்ந்தவர்கள் என்ற உண்மையை மனித குலம் இந்த நிகழ்ச்சி மூலம் புரிந்துகொண்டது. மனசாந்தி தரும் இந்தக் கதை மகாபாரதம் சாந்தி பருவத்தில் வருகிறது.

முற்றும்.

இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

30 11.2017

❖1718- நோர்வேயின் பிரெட்ரிக்ஸ்டன் கோட்டை முற்றுகையின் போது சுவீடன் மன்னன் பன்னிரண்டாம் சார்ள்ஸ் இறந்தான்.

❖1782- அமெரிக்கப் புரட்சிப் போர்: ஐக்கிய அமெரிக்கா மற்றும் ஐக்கிய இராச்சியம் இரண்டுக்கும் இடையே ஆரம்ப அமைதி உடன்பாடு பாரிசில் கையெழுத்திடப்பட்டது.

❖1806- நெப்போலியனின் படைகள் போலந்து தலைநகர் வார்சோவைக் கைப்பற்றினர்.

❖1936- லண்டனில் பளிங்கு அரண்மனை தீயினால் சேதமடைந்தது.

❖1939- சோவியத் படைகள் பின்லாந்தை முற்றுகையிட்டு குண்டுகளை வீசின.

❖1943- இரண்டாம் உலகப் போர்: டெஹ்ரானில் கூடிய அமெரிக்க ஜனாதிபதி பிராங்கிளின் ரூஸ்வெல்ட், பிரித்தானியத் தலைமை அமைச்சர் வின்ஸ்டன் சேர்ச்சில், ரஷ்ய ஜனாதிபதி ஜோசப் ஸ்டாலின் ஆகியோர் ஜூன் 1944 இல் ஐரோப்பாவைத் தாக்கும் தமது திட்டத்தை ஆராய்ந்தனர்.

❖1962- பர்மாவைச் சேர்ந்த யூ தாண்ட் ஐக்கிய நாடுகள் சபையின் 3வது பொதுச் செயலராகத் தெரிவானார்.

❖1966- ஐக்கிய இராச்சியத்திடம் இருந்து பார்போடஸ் விடுதலை பெற்றது.

❖1967- ஐக்கிய இராச்சியத்திடம் இருந்து தெற்கு யேமன் விடுதலை பெற்றது.

❖1967- சுல்பிகார் அலி பூட்டோ பாகிஸ்தான் மக்கள் கட்சியை ஆரம்பித்தார்.

❖1981- பனிப்போர்: ஜெனீவாவில் ஐக்கிய அமெரிக்கா மற்றும் சோவியத் பிரதிநிதிகள் ஐரோப்பாவில் நிலைகொண்டுள்ள நடுத்தர ஏவுகணைகளைக் குறைக்க பேச்சுவார்த்தையை ஆரம்பித்தனர்.

❖1995 - வளைகுடாப் போர் முடிவுக்கு வந்தது.

பிறப்புகள்

❖1667- ஜோனதன் ஸ்விப்ட், அயர்லாந்து எழுத்தாளர் (இ. 1745)

❖1874- வின்ஸ்டன் சர்ச்சில், ஐக்கிய இராச்சியத்தின் பிரதமர், நோபல் பரிசு பெற்றவர் (இ. 1965)

❖1948- கே. ஆர். விஜயா இந்திய திரைப்பட நடிகை

❖1950- வாணி ஜெயராம், இந்தியப் பாடகி

❖1988- பிலிப் ஹியூஸ், அவுஸ்திரேலியத் துடுப்பாளர் (இ. 2014)

இறப்புகள்

❖1930- பொன்னம்பலம் இராமநாதன், இலங்கைத் தமிழ் அரசியல்வாதி (பி. 1851)

❖1988-எம். கே. தொக்சாமி, இலங்கை இசைக் கலைஞர், இசையமைப்பாளர் (பி. 1932)

❖2013- ரகுராம், திரைப்பட நடன இயக்குநர், நடிகர் (பி. 1948)

❖2014- ஜார்பம் காம்லின், இந்திய அரசியல்வாதி (பி. 1961)

சிறப்பு நாள்

❖தியாகிகள் தினம் (ஐக்கிய அரபு அமீரகம்)

❖விடுதலை நாள் (பார்படோசு, 1966)

❖விடுதலை நாள் (தெற்கு யேமன், 1967)

❖புனித அந்திரேயா விழா
கத்தோலிக்கர் மற்றும் கிழக்கு மரபுவழித் திருச்சபையார்களால் கொண்டாடப்படுகிறது.

❖புனித அந்திரேயா தினம்
ஸ்கொட்லாந்து நாட்டில் தேசிய தினமாகவும், வங்கி விடுமுறை தினமாகவும் உள்ளது.

சந்தைகளில் நேற்றைய விலை

மரக்கறி வகைகள்	திருநெல்வேலி	கொடிகாமம்	சாவகச்சேரி	கிளிநொச்சி	மருதனார்மடம்
	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா
கத்தரிக்காய்	100	100	120	120	120
உருளைக்கிழங்கு	110	50	60	80	80
பச்சைமிளகாய்	600	500	600	800	800
தக்காளி	60	70	100	80	100
மரவள்ளிக்கிழங்கு	60	30	60	40	60
கோவா	140	140	160	200	120
கரட்	150	180	250	280	200
பூசணி	80	120	60	80	60
புடோல்	100	60	100	120	120
வாழைக்காய்	80	70	70	120	70
சின்ன வெங்காயம்	400	350	350	400	300
பெரிய வெங்காயம்	160	130	140	160	200
பாகற்காய்	300	200	240	400	500
வெள்ளரிக்காய்	100	100	100	120	160
கருணைக்கிழங்கு	60	50	60	80	60
பயற்றங்காய்	250	140	240	200	300
லீக்ஸ்	150	200	240	300	200
பீற்றூட்	150	120	120	160	120
கறிமிளகாய்	300	300	320	320	300
முருங்கைக்காய்	400	250	160	300	400
போஞ்சி	200	120	140	160	200
கத்தரித்தம்புள்ள	80	100	120	100	110
கீரை - 1கிடி	70	40	50	40	60
தேசிக்காய்	80	40	80	80	60
தேங்காய் (ஒன்று)	80	70	80	60-100	100
இராசவள்ளி	400	–	–	300	–
வெங்காயப்பூ	350	250	–	–	250
முள்ளங்கி	100	70	80	120	80
பொன்னாங்காணி	60	30	40	40	40
வல்லாரை	25	15	200	25	40
ஈரப்பலா	100	–	60	80	100

அதிர்ஷ்டத்தை வார்க்கும் அச்சு அவனவன் கையிலேயே இருக்கிறது.

– ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

தேர்தல் ஒன்றுதான் தமிழ் மக்களின் நாகாஸ்திரம்

குருசேத்திரப் போரில் கர்ணனிடம் இருந்த பலமான ஒரே ஆயுதம் நாகாஸ்திரம்.

நாகாஸ்திரத்தை ஏவினால் குருசேத்திரகளத்தில் இருந்து பாண்டவர் சேனை மீண்டு வருவது கடினம் என்பது கிருஷ்ண பரமாத்மாவுக்கு நன்கு தெரியும்.

இதனாலேயே போருக்கு முன்பாக குந்தி தேவியை கர்ணனிடம் அனுப்பி நாகாஸ்திரத்தை ஒரு தடவையன்றி மறுதடவை ஏவக் கூடாது என வரம் கேட்கப்பட்டது.

கொடுத்த வரத்தைக் காப்பாற்றும் கர்ணன் குருசேத்திரப் போரில் நாகாஸ்திரத்தை ஒரு தடவை மட்டும் ஏவ,

போர்ச்சூழ்ச்சி தெரிந்த பார்த்தசாரதி தேரை நிலத்திடை அமிழ்த்தி நாகாஸ்திரத்தில் இருந்து பாண்டவரைக் காப்பாற்றிக் கொண்டான்.

மீண்டும் நாகாஸ்திரத்தை ஏவினால் கர்ணனுக்கு வெற்றி என்ற நிலைமை இருந்ததாயினும் கொடுத்த வரத்தைக் காப்பாற்ற அதனை அவன் செய்யாதிருந்தான்.

கொடுத்த வரத்தைக் காப்பாற்றுவதே தனது அறம் என்று கர்ணன் உறுதியாக இருந்ததால் தான் அவனுக்குத் தோல்வி ஏற்பட்டதேயன்றி நாகாஸ்திரத்தின் தரக்குறைவால் கர்ணன் தோற்றானல்ல.

ஆக, நாகாஸ்திரம் என்பது மிகப்பலம் பொருந்திய ஆயுதம். அதிலிருந்து எவரும் தப்பித்துக் கொள்ள முடியாது.

அட, இப்படியொரு ஆயுதம் தமிழ் மக்களாகிய எங்களிடம் இருந்திருந்தால்... என்று கற்பனைப்புலம் வேலை செய்கிறது.

விடுதலைப் போராட்டம் நடந்த காலத்தில் இருதரப்பும் பயன்படுத்திய எத்தனையோ ஆயுதங்கள் பற்றித் தகவல்கள் வெளியாகியிருந்தன.

ஆனால் இன்று அவை அனைத்தும் களத்தில் இருந்து மறைவு பெற்றுள்ளன.

விடுதலைப் போராட்டம் தமிழ் மக்களுக்குத் தோல்வியாயிற்று. கூட இருந்தவர்களும் சர்வதேச சமூகமும் சேர்ந்து தமிழ் மக்களை வஞ்சித்து விட்டதனால் இன்று தமிழ் மக்கள் நடுத் தெருவில் நிற்க வேண்டியதாயிற்று.

நிலைமை இதுவாக இருக்க, தமிழ் மக்களின் வாக்கின் மூலம் அரசியல் பதவி பெற்று சலுகைகளை அனுபவிக்கும் தமிழ் அரசியல் வாதிகள் கூட,

தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தை – அதற்கான தியாகத்தைக் கொச்சைப்படுத்து கின்றனர்.

இந்நிலையில்தான் நாகாஸ்திரம் எங்களிடம் இருந்தால் என்று நினைக்கத் தோன்றுகிறது.

இந்த நினைப்பில் இருந்து எங்களிடம் நாகாஸ்திரம் இருக்கிறது. அதுதான் தமிழ் மக்களின் வாக்குகள் என்பதாக ஒரு செய்தி எழுகிறது.

ஆம், தமிழ் மக்களிடம் இப்போது இருக்கின்ற ஒரேயொரு பலமான ஆயுதம் வாக்கு எனும் நாகாஸ்திரம்தான்.

அந்த நாகாஸ்திரத்தை தமிழ் மக்கள் சரியாக – குறி தவறாமல் ஏவுவார்களாக இருந்தால், தமிழ் மக்கள் தாங்கள் யார் என்பதை நிரூபித்துக் காட்டிவிடுவார்கள்.

எனவே அரச சுகபோகம் தவிர்த்து தமிழ் மக்களுக்காக குரல் கொடுப்போம்.

அதனூடு உரிமைகளை வென்றெடுப்போம் என்ற உறுதியை தமிழ் அரசியல்வாதிகள் எடுத்துக் கொள்வர்.

ஆகையால் வரப்போகும் தேர்தலில் தமிழ் மக்களின் வாக்குகள் நாகாஸ்திரமாக அமையும் என்பது உறுதி.

தமிழ் - சிங்கள மாணவரிடையே முரண்பாடு

யாழ்.பல்கலை துணைவேந்தரிடம் முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனது பிறந்தநாள் மற்றும் மாவீரர் நாள் ஆகியவற்றை யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் அனுஷ்டித்ததையடுத்து பல்கலைகழகத்தினுள் தமிழ்-சிங்கள மாணவர்களிடையே முரண்பாடு ஏற்பட்டுள்ளது.

இவ் முரண்பாட்டினை தொடர்ந்து தமிழ் மாணவர்கள் இது தொடர்பாக பல்கலைக்கழக துணைவேந்தரிடம் முறையிட்டுள்ளதாக மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

கடந்த 26ஆம் திகதி தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனது பிறந்தநாள் நிகழ்வுகளை யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் கொண்டாடியிருந்தார்கள்.

இதன்போது அன்று பல்கலைக்கழக பெண்கள் விடுதிக்குள் சென்ற சிங்கள மாணவிகள் பிரபாகரனது படங்களை தமிழ் மாணவிகள் முன்னிலையில் மிதித்துள்ளனர்.

இதனையடுத்து தமிழ் மாணவிகள் மாணவர் ஒன்றியத்திற்கு அறிவித்ததையடுத்து அவர்களது தலையீட்டினால் அவ் சிங்கள மாணவிகள் மன்னிப்பு கேட்டிருந்தனர்.

இவ்வாறான நிலையில் நேற்றுமுன்தினம் மாவீரர் தினம் நிறைவடைந்த பின்னர் சிங்கள மாணவர்கள் பல்கலைக்கழக வளாகத்தில் ஒட்டப்பட்டிருந்த பிரபாகரனது படங்கள் காணப்பட்ட சுவரொட்டிகளை கிழித்தெறிந்துள்ளதுடன் அவர்களும் தமிழ் மாணவர்கள் முன்னிலையில் தமிழ் மாணவர்களை கோபமூட்டும் வகையில் இச் செயல்களை மேற்கொண்டுள்ளனர்.

இதன்போது தமிழ் மாணவர்களுக்கும் சிங்கள மாணவர்களுக்கும் இடையில் முரண்பாடு ஏற்பட்டுள்ளது.

இதனால் சில தமிழ் மாணவர்கள் பாதிப்படைந்துள்ளதாக தெரியவருகின்றது.

இதனைத் தொடர்ந்து குறித்த சம்பவம் தொடர்பாகவும் சிங்கள மாணவர்களது செயற்பாடு தொடர்பாகவும் பாதிப்புக்குள்ளான மாணவர்கள் யாழ்.பல்கலைகழக துணைவேந்தரிடம் முறைப்பாடு செய்துள்ளனர்.

இதேவேளை பிரபாகரனது பிறந்தநாளை கொண்டாடியதால் யாழ்.பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாகத்திலும் தமிழ்-சிங்கள மாணவர்களிடையே முரண்பாடு ஏற்பட்டு வவுனியா வளாகம் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும். (மு-4)

வலி.வடக்கில் 29 ஏக்கர் காணிகள் இன்று விடுவிப்பு

வலிகாமம் வடக்கு உயர் பாதுகாப்பு வலயத்தில் அமைந திருந்த வசாவிளான் பகுதியில் உள்ள 29 ஏக்கர் காணி இன்று இராணுவத்தினரிடமிருந்து பொதுமக்களின் பாவனைக்காக விடுவிக்கப்படவுள்ளது.

இதன்படி வசாவிளான் வடமூலை உத்தரிய மாதா கோவிலும் அதன் அருகில் உள்ள றோமன் கத்தோலிக்க தமிழ்கலவன் பாடசாலையும் அமைந்துள்ள சுமார் 29 ஏக்கர் காணி இராணுவத்தினரால் விடுவிக்கப்படவுள்ளது.

இன்று 30ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணிக்கு உத்தரிய மாதா கோவிலில் இடம்பெறும் நிகழ்வில் யாழ்.மாவட்ட தளபதி மேஜர் ஜெனரல் கெட்டியாராச்சியால் யாழ்.அரச அதிபரிடம் கையளிக்கப்படவுள்ளது.

அத்துடன் அன்றைய நிகழ்வின் பின்னர் நன்றி வழிபாடும் நடைபெறவுள்ளது. (மு-9)

சீனாவுடனான உறவை மேம்படுத்த

100 சீன ஜோடிகளுக்கு கொழும்பில் வைத்து திருமணம்

(கொழும்பு)

எதிர்வரும் 17ஆம் திகதி சீன நாட்டைச் சேர்ந்த 100 ஜோடிகளுக்கு கொழும்பு - நகர மண்டபப் பகுதியில் வைத்து திருமணம் செய்து வைக்கப்படவுள்ளதாக அமைச்சர் சம்பிக்க ரணவக்க குறிப்பிட்டுள்ளார்.

நேற்று இடம்பெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கருத்து வெளியிட்டுள்ளார்.

குறித்த சீன ஜோடிகளுக்கு இலங்கை முறைப்படி திருமணம் நடத்தி வைக்கப்படவுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

இந்த மாபெரும் திருமண நிகழ்வில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதன்மூலம் இலங்கை மற்றும் சீனாவுக்கு இடையிலான உறவை மேலும் வலுப்படுத்த முடியும் எனவும் சம்பிக்க ரணவக்க சுட்டிக் காட்டியுள்ளார். (மு-1)

தேங்காய் வாங்கச் சென்றவரிடம் ரூ.70 ஆயிரம் பணம் கொள்ளை

(கரணவாய்)

நேற்று அதிகாலை 5 மணியளவில் தேங்காய் கொள்முதல் செய்வதற்காக கொடிகாமம் யாக்கரை நோக்கி சென்ற புலோலி வடமேற்கைச் சேர்ந்த சிவபாதம் ரகு என்பவரை எதிரும் புதிருமாக மோட்டார் சைக்கிளில் வந்த 4 பேர் இடைமறித்து சட்டை பையினுள் இருந்த எழுபதாயிரம் ரூபாயினை பறித்து விட்டு அவரை கொட்டனால் தாக்கிவிட்டு வேகமாக ஓடி மறைந்துள்ளார்கள். தாக்கு தலுக்கு உள்ளானவர் நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். (மு-60)

எழுதுமட்டுவாழில் விபத்து இருவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் எழுதுமட்டுவாழ் பகுதியில் நேற்று புதன்கிழமை மாலை 6.30 மணியளவில் இரு மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

இச்சம்பவத்தில் காயமடைந்த நபர்கள் சிகிச்சைக்காக சாவகச்சேரி வைத்திய சாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பாக கொடிகாமம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (மு-78)

சரணம் சரணம் ஐயப்பா இறுவெட்டு வெளியீடு

(யாழ்ப்பாணம்)

சிவசாயி கலைக் கூடத்தின் அனுசரணையில் சபரி ஐயப்பன் புகழ்பாடும் சரணம் சரணம் ஐயப்பா இறுவெட்டு வெளியீட்டுவிழா இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் வேலணை கிழக்கு தீவக சபரிமலை ஆலயத்தில் இடம் பெறும். (இ-10)

சக்திய தரிசனம்

கோபத்தின் பலன் குழப்பம்

❖ கடமையைக் கருத்துடன் செய்வது மனிதரின் பொறுப்பு. பலனை வழங்குவது ஆண்டவனின் பொறுப்பு.

❖ நமக்கு கிடைத்ததை பிறருக்கு கொடுத்து மகிழ வேண்டும். கிடைத்ததை பிறருக்கு வழங்குங்கள். கிடைக்காவிட்டால், உங்களையே வழங்குவதே தியாக உணர்வாகும்.

❖ மேலோட்டமான மற்றும் பயன்தராத புத்தக அறிவை விட, எதையும் அனுபவம் மூலமாகச் சோதித்து உணருங்கள். ஆழ்ந்த பயன் தரக்கூடிய அறிவைத் தேடுவதுடன், அதன்மூலம் புத்தியை வளப்படுத்திக் கொள்ளுங்கள்.

❖ கோபம் ஏற்படும் போது எந்தச் செயலையும் செய்யக்கூடாது. கோபம், பதற்றம், வேகம் இவை மூன்றும் சேர்ந்தால் குழப்பம் தான் ஏற்படும். விவேகம் இல்லாமல் கவலையே மிஞ்சும்.

❖ பிரிப்பதும், பிரித்தாள்வதும் அரசியலுக்கு ஏற்றதாக இருந்தாலும், மனித வளர்ச்சிக்கும், மேம்பாட்டுக்கும் உதவாது. மனிதனிடம் உள்ள தெய்வீகம் ஒற்றுமையில் வெளிப்படும். மனித சக்தி ஒற்றுமையில் தெய்வீகச் சக்தியாகிறது. பிரிவினையில் மிருக சக்தியாகிறது.

JSAC 16 2017
பெண்களுக்கெதிரான வன்முறை ஒழிப்புச் செயற்பாடு
(கார்த்திகை 25 முதல் மார்கழி 10 வரை)
சகலருக்கும் கல்வி சமத்துவமாய் வழங்குவோம். பாரினில் பெண்கள் சரிநிகராய் வளர்ச்சிபெற சமூகத்தில் பெண்களுக்கு எதிரான வன்முறையை ஒழித்திடுவோம்.
யாழ்.சமூக செயற்பாட்டு மையம்

அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்

குழந்தையைப் பெற்றவள் 40 நாட்கள் வெளியே போகக்கூடாது என்பது ஏன்?

குழந்தை பெற்ற தாய் இரண்டாவது பிறவி எடுக்கிறாள். அவளது உடல் நிலையில் நிறைய மாற்றங்கள் உருவாகும். சிசுதான் இருக்கும் இடத்தின் வெப்ப நிலைகளைக் கொஞ்சம் கொஞ்சமாக ஏற்றுக்கொண்டு வரும். இக்காலத்தில் தாயும் சேயும் அடிக்கடி வெளியே சென்றால் உடல் நலத்திற்குக் கேடு உண்டாகும். அதனாலேயே அக்காலப் பெண்கள் குழந்தை பெற்றவளை 40 நாட்கள் எங்கும் வெளியே செல்ல அனுப்பமாட்டார்கள். (தொடரும்)

'கால்பந்தாட்டத்திற்கு எல்லையில்லை'

யாழ்.மாவட்ட தெரிவு அணியை வீழ்த்தியது சுவிஸ் அணி

சுவிஸ் நாட்டிலிருந்து வருகை தந்த அணிக்கும் யாழ்.மாவட்ட தெரிவு அணிக்கும் இடையிலான கால் பந்தாட்டப் போட்டியொன்று கடந்த வாரம் இரவு யாழ்ப் பாணம் துரையப்பா விளை யாட்டரங்கில் நடைபெற்றது.

கால்பந்தாட்டத்துக்கு எல் லைகள் இல்லை என்னும் தொனிப்பொருளில் இலங் கையிலுள்ள, மாகாணங் களின் தெரிவு அணிகளு டன் விளையாடும் நோக்கில் சுவிஸ் அணி இலங்கைக்கு வருகை தந்திருந்தது.

அதற்கமைய முதலில் வடமாகாண தெரிவு அணி யுடன் போட்டிகளில் பங்கு பற்றுவதாக இருந்தது. எனி னும் வடமாகாணத்திலுள்ள அனைத்து லீக்குகளும் இத ற்கு ஒத்துழைப்பு வழங்கா மையால், யாழ்.மாவட்ட தெரிவு அணியுடன் சுவிஸ் அணி மோதியது.

போட்டியின், 18 ஆவது நிமிடத்தில் யாழ்ப்பாண அணியின் தலைவர் ஞான ரூபன் தனது அணிக்கான முதலாவது கோலை அடி த்தார்.

30 ஆவது நிமிடத்தில் சுவிஸ் அணியின் 16 இலக்க வீரர் டானியஸ் முல்லர் கொடுத்த பந்தை, 9 இலக்க வீரர் கனி அகொஸ்ரியன் கோலாக மாற்றி, சுவிஸ் அணிக்கான முதலாவது கோலைப் பெற்றுக் கொடுத் தார். முதற்பாதியாட்டம் 1:1 என சம நிலையில் முடிவ டைந்தது.

இரண்டாவது பாதியாட் டத்தின், 29 ஆவது நிமி டத்தில் சுவிஸ் அணியின் அகொஸ்ரியன் தனது அணிக் கான இரண்டாவது கோலை அடித்தார்.

முடிவில் சுவிஸ் அணி 2:1 என்ற கோல்கள் அடிப் படையில் வென்றது. (க-26)

துடுப்பாட்டம் மோசம் சண்டிமல் கவலை

இந்திய அணிக்கு எதி ரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் இலங்கை அணி யின் தோல்விக்கு, துடுப்பாட்ட வீரர்கள் தான் காரணம் என்று இலங்கை அணியின் தலைவர் தினேஷ் சண்டி மல் கூறியுள்ளார்.

நாக்பூரில் நடைபெற்ற இந்திய அணிக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டி யில் இலங்கை அணி இன் னிங்ஸ் மற்றும் 239 ஓட் டங்கள் வித்தியாசத்தில் மிகவும் மோசமான தோல் வியைப் பதிவு செய்தது.

இதனால் இலங்கை ரசி கர்கள் கடும் கோபத்தில் உள்ளனர்.

இந்நிலையில் இலங்கை அணியின் தலைவரான தினேஷ் சண்டிமல் கூறு கையில், நாணய சுழற்சியில் வென்றது சிறப்புத்தான், ஆனால் முதல் நாளிலே நாங்கள் மோசமாக விளை யாடி விட்டோம். இதனால் எங்கள் துடுப்பாட்டம் மிகவும் சரிவைச் சந்தித்தது.

இந்திய அணிக்கு எதிராக விளையாடும் போது குறை ந்த பட்சம் 350 ஓட்டங் களாவது எடுக்க வேண்டும் என இந்த தொடருக்கு முன் னதாக திட்டம் தீட்டியிருந் தோம். ஆட்டத்தை சிறப்பாக தொடங்குபவர்கள் நீண்ட நேரம் நிலைத்து நின்று விளையாட வேண்டும் என கூறியிருந்தோம்.

ஆனால் 50 முதல் 60 ஓட்டங்களை கடந்ததுமே வீரர்கள், விக்கெட்டை பறி கொடுத்து விட்டார்கள். (க)

அடுத்த போட்டி மரண அடியாக இருக்கும் அவுஸ்திரேலிய தலைவர் ஸ்மித் தெரிவிப்பு

இந்த ஆஷஸ் தொடரில் இங்கிலாந்து அணியை சும்மா விடப்போவதில்லை என்று அவுஸ்திரேலிய அணியின் தலைவர் ஸ்மித் கூறியுள்ளார்.

5 போட்டிகள் கொண்ட ஆஷஸ் தொடரின் முதல் போட்டி பிரிஸ்பேனில் நடைபெற்றது. இப் போட்டி யில் அவுஸ்திரேலியா அணி, இங்கிலாந்து அணி அசா ல்ட்டாக வெற்றி பெற்றது.

இந் நிலையில் வெற் றிக்கு பின் அவுஸ்திரே லியா அணியின் தலைவர்

ஸ்மித் கூறுகையில்,

அடுத்து நடக்கவிருக் கும் அடி லெய்ட் டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து அணி சில பவுலர்களை ஆட்டத்துக்குள் வரவைக் கும், அப் போட்டி பகலிரவு டெஸ்ட் என்பதால் இரவில் குறித்த பிட்சானது இன்னும் வேகம் காட்டும்.

இதனால் எங்கள் பந்து வீச்சாளர்கள் எப்படி சவா லாகத் திகழ்ந்தார்கள் என் பதை அறிவோம்.

அது மட்டுமின்றி அடி லெய்டிலும் இங்கிலாந் திற்கு அடி காத்திருக்கிறது. அது ஏன் இந்த ஆஷஸ் தொடர் முழுதும் அவுஸ் திரேலியா அணியின் தீவி ரம் குறையாது. இங்கிலாந்து அணியை சும்மா விடப் போவதில்லை என கூறி யுள்ளார். (க)

அஸ்வின் தலைசிறந்த வீரர் சுழல் நாயகன் முரளி புகழாரம்

தற்போதைய சூழலில் அஸ்வின் தான் உலகின் சிறந்த சுழற்பந்து வீச்சாளர் என இலங்கையின் ஜாம் பவான் முத்தையா முரளி தரன் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு எதிராக நாக்பூரில் நடைபெற்ற 2 ஆவது டெஸ்ட்டில் 8 விக் கெட்டுகள் வீழ்த்தியதன் மூலமாக சர்வதேச கிரிக் கெட் அரங்கில் விரைவாக 300 விக்கெட்டுகள் வீழ்த் திய பந்து வீச்சாளர் என் னும் சாதனையை அஸ் வின் படைத்தார்.

அவுஸ்திரேலியாவின் வேகப்பந்து வீச்சாளர் டெனிஸ் லில்லியே இதற்கு முன்பு இந்த சாதனையைப் படைத்திருந்தார்.

அவர், 56 டெஸ்டில் 300 விக்கெட்டுகளை வீழ் த்தியிருந்தார். ஆனால், அஸ்வின் 54 டெஸ்ட்களி லேயே 300 விக்கெட்டு களை கைப்பற்றியதன் மூலமாக 36 ஆண்டு சாத னையை முறியடித்துள் ளார்.

இலங்கையின் முன் னாள் சுழற்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் வாழ்த்துத் தெரிவித்துள் ளார்.

அவர் கூறுகையில், அஸ்வினுக்கு வாழ்த்து தெரிவித்துக் கொள்கிறேன்,



தற்போது அவர்தான் உல கின் சிறந்த சுழற்பந்து வீச்சாளர். ஒருநாள் போட்டி களில் தற்போது அவர் இடம் பெறவில்லை.

எனினும், விரைவில் ஒருநாள் போட்டிகளில் இடம்பெற்று பல ஆச்சரி யங்களைப் புரிவார் என்று தான் நம்புவதாக தெரிவித் துள்ளார். (க)

முந்நூறு ஆரம்பம் அறுநூறே இலக்கு அஸ்வின் தெரிவிப்பு

சர்வதேச டெஸ்ட் போட்டி யில் 600 விக்கெட்டுகள் வீழ்த்துவதே தமது இலக்கு என இந்திய சுழற்பந்து வீச் சாளர் அஸ்வின் தெரிவித் துள்ளார்.

இலங்கைக்கு எதிரான கடைசி டெஸ்டில் நான்கு விக்கெட்டுகள் வீழ்த்தியதன் மூலம், டெஸ்ட் போட்டிகளில் அதிவேகமாக 300 விக் கெட்டுகளை வீழ்த்திய பந்து வீச்சாளர் என்ற சாத னையை படைத்தார் அஸ் வின்.

இந்த சாதனை குறித்து அவர் கூறுகையில், '300 விக்கெட்டுகளை இரண்டு மடங்காக மாற்ற முடியும் என்ற நம்பிக்கை இருக் கிறது. 600 விக்கெட்டுகளை கைப்பற்றுவதே எனது இலக்காகும்.

இதுவரை 54 டெஸ்ட் களில் விளையாடி உள் ளேன். சுழற்பந்து வீச்சு என் பது அவ்வளவு எளிதானது அல்ல. எனினும், தற்போது வீர நடைபோல் எழுந்து இருக்கிறேன், ஆனால் அதற்கு பின்னால் நிறைய இருக்கிறது.

நானும், ஜடேஜாவும் அதிகமான ஓவர்கள் வீசி னோம், இதனால் விக்கெட் டுக்களை எடுப்பதற்கு உதவி யாக இருந்தது' என அஸ் வின் தெரிவித்துள்ளார். (க)

கடைசிப் போட்டியில் ஹேரத் இல்லை

இந்தியாவுக்கு எதிரான கடைசி டெஸ்ட் போட்டியில் சுழற்பந்து வீச்சாளர் ரங்கன ஹேரத் நீக்கப்பட்டுள் ளார்.

இடக்கை சுழற்பந்து வீச் சாளர் ரங்கன ஹேரத் இந் தியாவுக்கு எதிரான மூன் றாவது டெஸ்ட் போட்டியில் விளையாட மாட்டார் என இலங்கை கிரிக்கெட் வாரியம் தெரிவித்துள் ளது.

இவருக்கு பதிலாக சுழற் பந்து வீச்சாளர் ஜெ.ப்ரி வாண்ட்சே முதல் முறை யாக டெஸ்ட் போட்டியில் அறிமுகமாகவுள்ளார்.

முதல் டெஸ்டில் 8 ஓவர் கள் வீசிய ஹேரத் இர ண்டாவது டெஸ்டில் 39 ஓவ ர்கள் வீசி ஒரு விக் கெட்டை மட்டுமே எடுத்தது குறிப் பிடத்தக்கது. (க)

இ.போ.ச போராட்டம்...

இலங்கை போக்குவரத்துச் சபையின் தொழிற்சங்கப் பணிப் புறக்கணிப்புப் போராட்டம் இன்றும் தொடரும் என வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் தொழிற்சங்கத்தினர் தெரிவித்தனர்.

வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் பிரதான முகாமையாளர் மற்றும் பாதுகாப்பு அதிகாரி ஆகியோரை வடக்கிலிருந்து உடனடியாக இடமாற்றக்கோரி, வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் ஊழியர்கள் நேற்றுமுன்தினம் செவ்வாய்கிழமை தொடக்கம் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதனால், அரச பஸ் சேவைகள், வடக்கு முழுவதும் நேற்று இரண்டாவது நாளாக முடங்கியிருந்தன. இதனால், மாணவர்களும் பொதுமக்களும் அசௌகரியங்களை எதிர் கொண்டனர். (மு)

தென்.கொரியா...

உறவுகள் குறித்து கலந்துரையாடப்பட்டுள்ளது.

தென் கொரியாவிற்கும் இலங்கைக்கும் இடையேயான உறவுகள் 40 வருடங்கள் கடந்துள்ளன.

இந்த சந்தர்ப்பத்தில் இலங்கை ஜனாதிபதியின் தென்கொரிய விஜயமானது இரண்டு நாடுகளுக்கிடையேயான உறவை பலமானதாக மாற்றும் என தென்கொரிய ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

இரண்டு நாடுகளுக்கிடையேயான உறவு பல்வேறுப்பட்டநன்மைகளை கொண்டு வரும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த கலந்துரையாடலின் பின்னர், இலங்கை தென் கொரியாவுக்கிடையே ஐந்து உடன்படிக்கைகள் கைச்சாத்தாகின.

பொருளாதார ஒத்துழைப்பு, தொழில் அனுமதிபத்திர முறைமை, பொருளாதார ஒத்துழைப்பு நிதியத்தின் மூலம் பெற்றுக் கொள்ளக் கூடிய கடன், முதலீட்டு ஒத்துழைப்பு இரண்டு நாடுகளுக்கிடையேயான கலாசார, கலை நடவடிக்கைகள் மற்றும் கல்வி ஆகிய துறைகள் தொடர்பான உடன்படிக்கைகளே கைச்சாத்தாகின. (மு-1)

மோ.சைக்கிளில்...

சென்றனர் என்றும் கூறப்படுகின்றது.

இந்தநிலையில், தம்மால் எவரும் கைது செய்யப்படவில்லை என்று யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம் பொலிஸாரின் பாவனையில் பச்சை நிற முச்சக்கர வண்டிகள் எவையும் கிடையாது என்றும் அவர்கள் தெரிவித்தனர். (மு)

பேருந்து புதைந்தது...

குழாய்கள் தாழ்ப்பதற்கு வெட்டப்பட்ட கிடங்கில் புதையுண்டது.

இதனை பார்ப்பதற்கு இறங்கிய இவ்வாகனத்தின் சாரதி மாரடைப்பால் சம்பவ இடத்தில் மரணமடைந்துள்ளார்.

நேற்று காலை 9:00 மணியளவில் இடம பெற்ற இச் சம்பவத்தில் 69 வயதுடைய புதுத் தோட்டம் வீதி நெல்லியடி கரவெட்டியை சேர்ந்த குமாரசாமி நவரத்தினராஜா என்பவரே மாரடைப்புக் காரணமாக சம்பவவிடத்தில் மரணமடைந்துள்ளார்.

குறித்த சம்பவம் தொடர்பாக சாவகச்சேரி பொலிசார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (மு-1)

கடும் மழை; காற்று...

பகுதியிலும் நாடளாவிய ரீதியில் கடுமையான காற்றுடன் மழை பெய்து வருகிறது.

கொழும்பு, தெஹிவளை பகுதிகளில் நேற்றிரவு கடுமையான காற்று வீசியது. இதனால் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பல பகுதிகளில் மின் துண்டிக்கப்பட்டுள்ளது. இதனால் கொழும்பு இருளில் மூழ்கியது.

பல இடங்களில் மரங்கள் முறிந்து விழுந்ததால் வீடுகளுக்கு சேதங்கள் ஏற்பட்டுள்ள துடன் வீதிகளில் மர முறிவு ஏற்பட்டதால் போக்குவரத்திலும் இடைஞ்சல் ஏற்பட்டுள்ளது. இதனால் மக்கள் பெரும் அச்சமடைந்துள்ளனர்.

அடுத்த 24 மணி நேரம் வரை குறித்த காலநிலை தொடருமென்றும் மீனவர்கள் கடலுக்கு செல்ல வேண்டாமென்றும் வானிலை அவதான மத்திய நிலையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இந்நிலையில் இலங்கைக்கு அருகே உருவாகியுள்ள குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை கன்னியாகுமாரி கடற்கரைப்பகுதிக்குள் நகர்வதால் ஈரப்பதம் ஏற்பட்டு வடக்கில் இன்று அதிகாலை முதல் கனமழை பெய்யும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் நாளையும் மழை பெய்யலாம் என மேலும் தெரிவிக்கப்படுகிறது. (மு)

மீனவர், கடற்படை...

குறிப்பாக, தெற்கு மற்றும் தென்மேற்கு கரையோரப் பகுதிகளில் காற்றின் வேகம் மணிக்கு 100 கிலோமீற்றராக அதிகரிக்கவும வாய்ப்பிருக்கிறது எனவும் கூறப்பட்டுள்ளது.

இதேவேளை நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள மோசமான காலநிலை தொடர்ந்து நீடித்தால், பொலிஸ் உத்தியோகத்தர்களை அவசர நடவடிக்கைகளில் ஈடுபடுத்துவதற்குத் தயார் நிலையில் வைத்திருக்குமாறு சட்ட ஒழுங்குகளுக்கான அமைச்சர் சாகல ரத்நாயக்க பொலிஸ் மா அதிபருக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

நாட்டில் திடீரென ஏற்பட்டிருக்கும் அசாதாரண காலநிலையால் நாட்டின் பல பகுதிகளிலும் இயல்பு வாழ்க்கை கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

இந்நிலை மேலும் தொடர்ந்தால், அங்கு உதவி மற்றும் மீட்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்துவதற்காக பொலிஸ் உத்தியோகத்தர்களை அனுப்பி வைக்குமாறு அமைச்சர் தனது பணிப்புரையில் தெரிவித்துள்ளார். (மு-1)

அரசியல் கைதிகளின்...

வேண்டும்.

இவ்வாறு மேன்முறையீட்டு நீதிமன்றுக்கு நேற்று அறிவித்தார் சட்டமா அதிபர்.

அநுராதபுரம் சிறைச்சாலையில் உணவு ஒறுப்பில் ஈடுபட்ட அரசியல் கைதிகள் மூவரின் சார்பாக அவர்களுக்கு எதிரான வழக்கு விசாரணையை அநுராதபுரத்திலிருந்து வவுனியாவுக்கு மாற்றக் கோரி கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றில் மீளாய்வு மனு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

இந்த மனு கடந்த 15ஆம் திகதியன்று விசாரணைக்கு எடுத்துகொள்ளப்பட்டது.

அதன்போது சட்டமா அதிபர் சார்பாக முன்னிலையான அரச சட்டத்தரணி அரசியல் கைதிகள் மூவருக்கும் எதிரான சாட்சிகளாக மூன்று சாட்சிகள் காணப்படுகின்றனர். சாட்சிகள் மூவரும் வவுனியா மேல் நீதிமன்றுக்கு சாட்சியளிக்க வருவதில் தமக்கு பாதுகாப்பு அச்சுறுத்தல் இருப்பதாக கூறிய தன் காரணமாகவே இந்த வழக்கு அநுராதபுரம் மேல் நீதிமன்றுக்கு மாற்றப்பட்டது.

பின்னர் அரசியல் கைதிகளின் போராட்டத்தின் போது சாட்சிகளில் ஒருவருடன் தொடர்பு கொண்டு கேட்டபோது தான் வவுனியா நீதிமன்றத்திற்கு வந்து சாட்சியளிப்பதாக தெரிவித்துள்ளார். எனினும் மற்றைய சாட்சியாளருடன் தொடர்பு கொள்ள முடியாத நிலை காணப்படுவதாக குறிப்பிட்டிருந்தார். வெளி நாட்டில் வசிக்கும் சாட்சிகள் இருவருடனும் தொடர்பு கொள்வதற்குரிய கால அவகாசத்தை வழங்குமாறு அரச சட்டத்தரணி கேட்டுக்கொண்டார்.

இதனால் அந்த மனு மீதான விசாரணை நேற்று வரை மேன்முறையீட்டு நீதிமன்றால் ஒத்திவைக்கப்பட்டிருந்தது.

அந்த மனு நேற்றைய தினம் மீளவும் விசாரணைக்கு எடுத்துகொள்ளப்பட்டது.

இதன்போது சமுகமளித்திருந்த சட்டமா அதிபர் சார்பான அரச சட்டத்தரணி முன்னர் வெளிநாட்டிலுள்ள சாட்சிகள் இருவரையும் தம்மால் இதுவரை தொடர்பு கொள்ள முடியவில்லை என்பதால் தமக்கு இன்னும் கால அவகாசம் தேவைப்படுவதாக குறிப்பிட்டிருந்தார். மேலும் மதியரசன் சுலக்சன், கணேசன் தர்சன் மற்றும் இராசதுரை திருவருள் ஆகியோரின் வழக்கு விசாரணைகள் அநுராதபுரம் மேல் நீதிமன்றில் இனி இடம் பெறாது எனவும் அவர் அறிவித்தார்.

இவற்றை கவனத்தில் கொண்டு எதிர் வரும் 12ஆம் திகதிவரை அவர்களுக்கான கால அவகாசத்தை வழங்கிய மேன்முறையீட்டு நீதிமன்றம் மனு மீதான விசாரணையை ஒத்திவைத்தது. (மு-1)

சிங்களத் தலைவர்...

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் ஞானசார தேரர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அங்கு தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர், விடுதலைப் புலிகள் இயக்கமாக இருந்தாலும், இலங்கை இராணுவமாக இருந்தாலும், சிங்களவராக இருந்தாலும், தமிழ், முஸ்லிமாக இருந்தாலும் அவர்கள் மக்களே என்பதை நாங்கள் அனைவரும் ஏற்றுக் கொள்கின்றோம்.

பிரபாகரனது போராட்ட நோக்கம் சிறந்ததாக இருந்தது. எமது சிங்களத் தலைவர்களை விடவும் விடுதலைப் புலிகளின் தலைவர் சிறந்த தலைவர். அவருக்கு நேர்மை இருந்தது. அந்த நோக்கத்திற்கு உண்மைத் தன்மை இருந்தது.

எனினும் விடுதலைப் புலிகளின் தலைவர் தெரிவுசெய்த வழிதான் பிழை. அவர் ஆயுதத்தை கையில் ஏந்தியது தவறு என்றுதான் கூற வேண்டும்.

வடக்கில் இருப்பவர்கள் இந்தியாவின் ஒரு பிரிவைச் சேர்ந்தவர்கள் அல்லர். விடுதலைப் புலிகளின் போராட்டமும், ஜே.வி.பி போன்ற போராட்டத்தை ஒத்ததாகும்.

இந்த போராட்டத்தில் உயிரிழந்தவர்களும் எமது மக்களே. எனினும் போரில் உயிரிழந்தவர்களை நினைவு கூருவதாக தெற்கு மக்களுக்கு கூறிவிட்டு, வடக்கில் வேறொன்றைச் செய்வதை ஏற்கமுடியாது.

இதனூடாக இனங்களுக்கு இடையில் முரண்பாடு ஏற்படுகிறது. சாதாரண மக்கள் இதனைச் செய்ய மாட்டார்கள். இதனைத் தூண்டி ஏற்பாடு செய்கிறவர்களுக்கு எதிராகவே நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஞானசார தேரர் தெரிவித்துள்ளார். (மு-1)

ஆவா குழு உறுப்பினர் மூவர் கொழும்பில் கைது செய்யப்பட்டு யாழுக்கு கொண்டு வரப்பட்டனர்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் வாள்வெட்டு வன்முறைகளில் ஈடுபட்டுவிட்டு கொழும்பில் தலைமறைவாகியிருந்த ஆவா குழு உறுப்பினர்கள் மூவர் கைது செய்யப்பட்டு யாழ்ப்பாணத்துக்கு நேற்றுமுன்தினம் இரவு அழைத்து வரப்பட்டுள்ளதாக பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பொலிஸாரால் தேடப்பட்டு வந்த முஸ்லிம் இளைஞன் என நம்பப்படும் இக்ரம் உள்ளிட்ட மூவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் மூவரும், கொழும்பில் மறைந்திருப்பதாகக் கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில், யாழ்ப்பாணத்தில் இருந்து சென்ற சிறப்பு பொலிஸ் குழுவே, குறித்த நபர்களை கைதுசெய்துள்ளது.

கைதுசெய்யப்பட்டவர்களிடம் தீவிர விசாரணைகள் இடம்பெறுவதாகவும், அவர்களுடன் தொடர்புடைய மேலும் சிலர் கைது செய்யப்படவுள்ளனர் எனவும் பொலிஸ் தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன. (மு)

சிவப்பு எச்சரிக்கை விடுப்பு

(கொழும்பு)

மக்கள் மிகவும் அவதானத்துடன் இருக்குமாறு, வானிலை அவதான நிலையம் சிவப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.

கொழும்பு, காலி உள்ளிட்ட தென் மாவட்டங்களில் கடும் காற்றுடன் கூடிய அடை மழை பெய்து வருவதை அடுத்தே இந்த சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மீனவர்களும் கடற்படையினரும் கடலுக்குச் செல்லும் போது கூடிய அவதானத்துடன் இருக்கவேண்டுமென்றும் அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இந்த மோசமான வானிலை, சில நாட்களுக்கு நீடிக்குமென வானிலை அவதான நிலையம் எதிர்வுகூறியுள்ளது.

இதேவேளை, தெற்குக்கான ரயில் போக்குவரத்தும் பாதிக்கப்பட்டிருப்பதாக, ரயில்வேத் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதேவேளை, நேற்று வீசிய கடும் காற்றுக் காரணமாக காலி மாவட்டத்தில் பெரும் சேதம் ஏற்பட்டுள்ளதாக அறியமுடிகின்றது. அங்கு மரங்கள் முறிந்து விழுந்துள்ளமையால், சில இடங்களில் மின்சாரம் தடைப்பட்டுள்ளது. (மு-1)

அசாதாரண சூழ்நிலை காரணமாக 15 பேர் வைத்தியசாலையில் அனுமதி

(கொழும்பு)

தென்பகுதியில் நேற்றிரவு திடீரென வீசஆரம்பித்த காற்று, அதனுடன் கூடிய கடும் மழை என்பவற்றால் பலர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அவர்களில் இதுவரை பதினைந்து பேர் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

போதிய போக்குவரத்து வசதிகளை உடனடியாகப் பெற முடியாததால், பாதிக்கப்பட்ட பலர் இன்னும் மருத்துவ உதவிகளைப் பெற முடியாத சூழலுக்குத் தள்ளப்பட்டிருக்கலாம் என்றும் அஞ்சப்படுகிறது. (மு-1)

படகு கவிழ்ந்ததில் இரு இளைஞர்கள் பரிதாபமாக பலி

(கொழும்பு)

அட்டுழுகமயில் படகு கவிழ்ந்ததில் இரு இளைஞர்கள் பரிதாபமாக உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இச் சம்பவம் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்றுள்ளது.

அட்டுழுகமையைச் சேர்ந்த 6 இளைஞர்கள் படகொன்றில் பயணித்து கொண்டிருக்கும்போது தெல்கட எனும் பகுதியில் வைத்து குறித்த படகு திடீரென கவிழ்ந்ததில் இரு இளைஞர்கள் நீரில் மூழ்கி பரிதாபமாக உயிரிழந்துள்ளனர்.

இந்நிலையில், ஏனைய நான்கு பேரும் எவ்வித ஆபத்துமின்றி மீட்கப்பட்டுள்ளனர்.

இச் சம்பவத்தில் 17 மற்றும் 20 வயதுடைய இரு இளைஞர்களே உயிரிழந்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (மு-1)

சமஷ்டியை தந்தால்...

சமஷ்டியை தந்தால் தனிநாடு கோர மாட்டோம் என இலங்கைக்கான அவுஸ்திரேலிய தூதுவர் பிரைஸ் ஹட்ச்செசனிடம் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார். நேற்றையதினம் யாழ்ப்பாணம் வருகை தந்த தூதுவர் முதலமைச்சரை அவரது அலுவலகத்தில் நேற்று காலை சந்தித்து கலந்துரையாடியிருந்தார். இதன் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் பிரைஸ் ஹட்ச்செசன் என்னை சந்திக்க வந்திருந்தார். டயலொக் என்ற நிறுவனத்துடன் அவுஸதிரேலிய அரசாங்கம் உடன்படிக்கை ஒன்றை செய்துள்ள தாகவும், அதன்படி பின்தங் கிய கிராமங்களில் ஏரிஎம் இல்லாத பிரதேசங்களில் தொலைபேசி மூலமே பணப்பரிமாற்றங்களை செய்வதற்கு அந்த தொலைபேசி நிறுவனம் வசதிகளை செய்து கொடுத்துள்ளன. வருங்காலத்தில் இதற்குரிய அலுவலகத்தினை நிறுவுவார் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரேலிய அரசு எமக்கு அதிகமான உதவிகளை செய்து வருவதை சுட்டிகாட்டி நன்றி கூறியிருந்தேன். இதே போன்று நியதி சட்டம் தொடர்பிலும் பல்வேறு உதவிகளை மேற்கொண்டு வருகின்றனர். தகைமை விருத்திக்கான கருத்தமர்வுகளையும் ஆசியா பவுண்டேசன் அவுஸ்திரேலிய நிதியுதவியுடன் நடத்தியிருந்தார்கள். ஆசிய நிறுவனத்துடனான ஒப்பந்தம் இந்த வருடத்துடனும் நிறைவுறுவதாக சுட்டிக்காட்டி அதனை அடுத்த வருடமும் நீடிக்குமாறு கேட்டிருந்தேன். அதற்கு அவர் சம்மதம் தெரிவித்திருந்தார்.

அரசியல் ரீதியான விடயங்களை பேசும் போது அவுஸ்திரேலியாவில் உள்ளூராட்சி அலகு, மாகாண அலகு, சமஷ்டி அலகு உள்ளது. அங்கு எவ்வாறு ஒவ்வொரு மாகாண மக்களும் சமஷ்டியுடன் சுதந்திரமாக இருந்து வருகின்றார்கள் என்பதை சுட்டிக்காட்டி, அதனை தான் இங்கு நாங்கள் கேட்கின்றோம். ஆனால் அரசாங்கம் எவ்வாறு முட்டுக்கட்டையாக இருந்து வருகின்றது கூறியிருந்தேன். தனிநாடு எடுத்து கொண்டு சென்று விடுவார்கள் என்ற பயத்தில் தான் அவர்கள் இவற்றை தருகின்றார்கள் இல்லை.

எனினும் இவற்றை தராமல்விட்டால் தான் தமிழர்கள் தனிநாடு கோருவார்கள் என்பதனையும், எங்களுடைய சுய ஆட்சிக்கு இடையூறாக இல்லாவிட்டால் தனிநாடு கோர வேண்டிய அவசியம் எமக்கு ஏற்படாது என்ற யதார்த்தத்தையும் அவருக்கு எடுத்து காட்டியிருந்தேன்.

மேலும் தனியார்துறை விருத்தி தொடர்பில் ஆராய்ந்திருந்தோம். சுற்றுலாத்துறை சம்பந்தமாக பல விடயங்களை பேசியிருந்தோம். அவுஸ்திரேலிய நிபுணர் அன்ட்ரூ பெய்லி இலங்கை அரசுக்கு சுற்றுலாத்துறை தொடர்பில் ஆலோசனைகளை வழங்குவதாக கூறியிருந்தார். அவரை வடக்கு மாகாணத்திற்கும் அனுப்பி ஆலோசனை வழங்குவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என கோரினேன். அதனையும் அவர் ஏற்றுக் கொண்டார் என முதலமைச்சர் தெரிவித்தார். (மு-4)

Mega Sale

மார்கழி 1ஆம் திகதி முதல் ஏசியன் தளபாட நிலையத்தில் வீடு மற்றும் அலுவலகங்களுக்குத் தேவையான அனைத்துப் பொருட்களுக்கும் விசேட விலைக்கழிவு!

(கையிருப்பு உள்ளவரை மட்டுமே!!)

தொடர்புகளுக்கு : 076 821 9415

(இலுப்பையடிச்சந்திக்கும் ஆனைப்பந்திக்கும் இடையில்)

(C-542)

டிசம்பர் 1,2,3 ஆம் திகதிகளில்

O/L மாணவர்களுக்கான கருத்தரங்கு

வரலாறு | ஆசிரியர்: R.S. சந்திரன்

கட்டணம் 500/-

TIME: 8.00 AM - 1.00 PM

➢ வெளி மாணவர்களும் பங்குபற்றலாம்.

➢ எதிர்பார்க்கை வினாக்களும், பாடக்குறிப்புக்களும் வழங்கப்படும்.

றோயல் அக்கடமி அரசடி வீதி, யாழ்ப்பாணம் 0776649134

திருமண நல்வாழ்த்துக்கள்

இன்று இல்லறம் எனும் நல்லறம்தனில் இணைசேரும்

சயந்தன் தட்சாயினி

புதுமணத் தம்பதிகள் எல்லா வளமும் பெற்று இல்வாழ்வில் வாழ்வாங்கு வாழ இறைவன் அருள் வேண்டி வாழ்த்துகின்றோம்.

வலம்புரி நண்பர்கள்

பொஸ்னிய இராணுவத் தளபதி...

லாந்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

பொஸ்னியாவில் வாழ்ந்து வந்த முஸ்லிமகளை, 1990களில் நாட்டை விட்டு விரட்டியும் கொலை செய்தும் இன அழிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டதாக ஸ்லோபொதான் ப்ரல்ஜாக் என்ற பொஸ்னிய இராணுவ முன்னாள் தளபதி உட்பட, க்ரோஷியாவைச் சேர்ந்த ஐந்து அரசியல்வாதிகளுக்கும் 20 ஆண்டு கால சிறைத் தண்டனை வழங்கித் தீர்ப்பளிக்கப்பட்டிருந்தது.

இந்தத் தீர்ப்பை எதிர்த்து ஸ்லோபொதான் மேன்முறையீடு செய்திருந்தார். அதன் மீதான விசாரணைகள் நிறைவுற்ற நிலையில், அவர் குற்றவாளி என்பது மீண்டும் நிரூபணமானது. இதையடுத்து அவர் மீதான தீர்ப்பு வாசிக்கப்படவிருந்தது.

அப்போது திடீரெனப் பேச ஆரம்பித்த ஸ்லோபொதான், தாம் நிரபராதி என்றும் இன அழிப்பில் ஈடுபடவில்லை என்றும் தாம் ஒரு போர்க் குற்றவாளி அல்ல என்றும் கூறியதுடன், கையில் வைத்திருந்த சிறு குப்பியில் இருந்த கருமையான திரவத்தை அருந்தினார்.

பிரதம நீதிபதி இதைக் கண்ணுற்ற போதும் சந்தேகம் ஏதும் எழாமையால் அவர் தீர்ப்பை வாசிக்கத் தொடங்கினார். ஒரு சில நொடிகளுக்குள், ஸ்லோபொதான் நிலை குலைந்து சரிந்து கீழே விழுந்தார்.

இதையடுத்து ஸ்லோபொதானின் சட்டத் தரணி "எனது சாட்சிக்காரர் விஷமருந்தி விட்டார்" எனக் கூச்சலிட்டார். இதையடுத்து தீர்ப்பு ஒத்திவைக்கப்பட்டதாக நீதிபதி அறிவித்தார்.

உடனடியாக மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டபோதும் சிகிச்சை பலன் தராத நிலையில் அவர் உயிரிழந்தார். (மு-1)

உள்ளூராட்சி தேர்தல்...

மாறு சட்டமா அதிபர் கோரிக்கை விடுத்திருந்தாலும் அந்த மனு இன்று விசாரணைக்கு எடுக்கப்பட மாட்டாது என மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் பிரதான பதிவாளர் தெரிவித்துள்ளார்.

ஏற்கெனவே மேன்முறையீட்டு நீதிமனறம் அறிவித்தபடி எதிர்வரும் 4 ஆம் திகதியே விசாரணைக்கு எடுக்கப்படும் எனவும் அவர் கூறியுள்ளார்.

உள்ளூராட்சி சபைத் தேர்தல் தொடர்பான எல்லை நிர்ணயம் சம்பந்தமாக துறைக்கு பொறுப்பான அமைச்சர் வெளியிட்ட வர்த்தமானி அறிவித்தலை தற்காலிகமா இடைநிறுத்தி, மேன்முறையீட்டு நீதிமன்றம் அண்மையில் உத்தரவிட்டிருந்தது.

இந்த நிலையில் கடந்த திங்கட்கிழமை மேன முறையீட்டு நீதிமன்றத்தில் மனுவொன்றை தாக்கல் செய்த சட்டமா அதிபர் மனுவை இன்று விசாரணைக்கு எடுககுமாறு கோரிக்கை விடுத்திருந்தார்.

எனினும் நீதியரசர்கள் வழங்கிய தீர்ப்புக்கு அமைய டிசம்பர் 4 ஆம் திகதியே மனு விசாரணைக்கு எடுக்கப்படும் எனவும் நீதிமன்ற பிரதான பதிவாளர் கூறியுள்ளார். (மு-1)

வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு

021 221 7603, 021 567 1532

விரைவு பொதிகள் சேவை, விமான பயணச்சீட்டுகள் விசா சேவைகள்

● அனைத்து சேவைகளும் மிக குறைந்த கட்டணத்தில்
● வெளிக கட்டணமின்றி பொதிகள் வீடுகளில் வந்தே பெற்றுக்கொள்ளப்படும்
● விடுமுறை நாட்களிலும் தாயிற்றுக்கிழமைகளிலும் அலுவலகங்கள் உண்டு
● எம்மிடம் சேவைகளை பெற்றுக்கொள்பவர்களுக்கு தங்கப்பவுண் மோட்டார் சைக்கிங்கள் வெல்லும் வாய்ப்பு (C-443)

UK-550/=Kg

மற்றும் அனைத்து நாடுகளுக்கும் குறைந்த விலையில்

DELIVERY IN 3 - 5 DAYS

V2 TRAVELS-0768226240

● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

உயர் கணக்கியல் கல்லூரி

சித்தன்கேணி

இறுதிக் கருத்தரங்கு

க.பொ.த (சா/த) வரலாறு

காலம் :- 01.12.2017 (வெள்ளிக்கிழமை)

நேரம் :- 9.00 - 3.00 மணி வரை

இறுதிப்பரீட்சைக்குரிய மாதிரி வடிவ வினாக்களுடன் கூடிய கையேடுகள் வழங்கப்படும்.

ஆசிரியர் S.S.தாஸ்

BA (Hons) MA (R) in His.

(1522)

எவரெஸ்ட் குமாரிக்கா சந்தனாதி தைலம்

- நீண்ட கூந்தல் வளர்ச்சிக்கும்
- இளநரையை போக்கவும்
- பொடுகிலிருந்து நிவாரணம் பெறவும்
- கண் எரிச்சல், தலை வலியை நீக்கவும்
- ஞாபக சக்தியை அதிகரிக்கச் செய்யவும்
- ஏழு வகையான மூலிகைகள் உள் அடங்கிய சிறப்பு தைலம்

100 வீதம் இயற்கையானது

(கற்றாழை, வல்லாரை, நெல்லிக்காய், கரிசலாங் கண்ணி, கறிவேப்பிலை, பொன்னாங்காணி, அவுரி மற்றும் விற்றமின் E)

(1394)

எல்லா மருந்தகங்களிலும் சாதாரண கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்

தயாரிப்பு: எவரெஸ்ட் மருந்தகம், உசன், மிருசுவில், யாழ்ப்பாணம்.

ஏக விநியோகஸ்தர் பிரமநாதன் & Co எண்.28, 26, பேரின்பநாயகம் வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

கைபேசி எண்: 0776389356, 0777153571

SCIENCE Ocean

Nothing Is Impossible

Kokuvil.

2019, 2018 & Day Classes 01.12.2017

Chemistry - K.Subeesan

Physics - R.Raakulan

T.P : 077 430 7829

Old Post Office Road, Kokuvil East, Kokuvil.

(1517)

PC Network Engineering

Limited Seats Only

Duration : 2 Months

Next Batch : 02-12-2017

Free CCTV Installation Training

ICS EDUCATION

77, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம்.

(பெருமாள்கோவில் அருகாமையில்)

076-7013060 ,021-7306000

(C-539)

பெறுகிறிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 30.11.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.